# விவசாயிகளை சந்திக்கும் திட்டத்தை ஆரம்பித்த சஜித்



» 02 பக்கம்

Follow us

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 340 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை (04.10.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 26, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்

தலதா மாளிகைய கும்பிட்டுப் போட்டு நேர திருகோணமலைக்கு போனார் பாருங்கோ ஷ்ரிங்லா... உங்கதான் இந்தியாவின்ர டிப்ளமசி இலங்கையின்ர உச்சந்தலையில் குட்டியிருக்குது...



# திருமலை எண்ணெய்க் குதங்கள் முன் நின்று படமெடுத்து சீனாவுக்கு செய்திசொன்ன இந்திய செயலர் ஹர்ஷ் வர்தன்!



இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா திருகோணமலையிலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு நேற்று (03) காலை விஜயமொன்றை மேற்கொண்டார். அப்போது எண்ணெய் குதமொன்றின் முன்பாக அவர் எடுத்த படம் இது .

ஏற்கனவே சீனா இலங்கையின் கேந்திர நிலையங்களை சீனா ஆக்கிரமித்துள்ளதாகவும் அதனால் இந்தியா அதிருப்திக் குள்ளாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில், இந்திய வெளியுறவு செயலரின்... » 02 பக்கம்

## அரிசி ஆலை உரிமையாளர்களால் அரசின் சுயமரியாதை அழிப்பு

### ஓமல்பே சோபித்த தேரர் தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டில் அரிசியின் விலையை ஒரு சில அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானிக்க அனுமதித்துள்ளதன் மூலம் அரசாங்கம் தனது சுயமரியாதையை முற்றிலும் அழித்துக்கொண்டுள்ளது. அரசின் பொறுப்பு சீர்குலைக்கப்பட்டுள்ளது. ஒரு யுத்தத்தை முடித்துள்ளதாக கூறுபவர்கள் உண்மையென்றால், இந்த இரண்டு, மூன்று வர்த்தகர்களை ஏன் கட்டுப்படுத்த முடியாது? ஒரு சில சுயநல வியாபாரிகளை கட்டுப்படுத்த முடியாத அரசாங்கத்தின் மீது நாம் இன்னும்... » 02 பக்கம்



# ஆளுங்கட்சியின் முக்கிய கூட்டம் இன்று!

## உட்கட்சி நெருக்கடியை தணிக்க விசேட பேச்சு

### கெரவலப்பிட்டி மின் நிலையத்தை அமெரிக்காவுக்கும், திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கும் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து பங்காளிகள் போர்க்கொடி

ஆளுங்கட்சியின் அவசரமானதும் முக்கியமானதுமான கூட்டமொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

கெரவலப்பிட்டி யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கியமை தொடர்பில் ஏற்கனவே நடந்துள்ள பல சந்திப்புகளில் கோரிய விளக்கங்களுக்கு தெளிவான பதில் கிடைக்காத காரணத்தினால் ,இன்றைய கூட்டத்தில் ஆளுங்கட்சியில் அங்கம்வகிக்கும் பங்காளிக்கட்சிகள் கேள்விகளை எழுப்பவிருப்பதாக அறியமுடிந்தது.

அதேவேளை இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஷ்ரிங்லா திருகோணமலை எண்ணெய்க்குதங்கள் பகுதிக்கு சென்றுள்ளதால்,அங்கு இந்தியாவுக்கும் புதிதாக இடங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பன தொடர்பில் பங்காளிக்கட்சிகள் இன்று வினவவிருப்பதாக தெரியவந்தது. » 02 பக்கம்

## அரச இரகசியங்களை கசியவிட்டாரென அமைச்சு அதிகாரிக்கெதிராக நடவடிக்கை

•யோ.தர்மராஜ்

250 மில்லியன் அமெரிக்க டொலருக்கு 15 வருட காலப்பகுதிக்கு கெரவலப்பிட்டி மின் நிலையத்தின் 40 வீத பங்கை அமெரிக்காவின் நியு போர்ட்ஸ் எனர்ஜி நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பான சில தகவல்களை எதிர்க்கட்சி முக்கியஸ்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டதாகக் குற்றம் சாட்டி எரிசக்தி அமைச்சின் மூத்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை முன்னெடுப்பதற்கு தயாராகி வருவதாக நிதி அமைச்சின் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கெரவலப்பிட்டியில் யுகதனவி மின்நிலைய நிறுவனத்தின் பங்குகளை வழங்குவது தொடர்பாக முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவையும் குறித்த அதிகாரி தவறாக வழிநடாத்தியுள்ளதாக நிதி அமைச்சினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. » 02 பக்கம்

## இயற்கை எரிவாயுவை எவருக்கும் வழங்காதீர்

### உதய கம்மன்பில காரசாரம்



•யோ.தர்மராஜ்

இலங்கையின் எரிவாயு அதிகாரத்தை அமெரிக்கா அல்லது ஐரோப்பா அல்லது வேறு யாருக்கேனும் வழங்குவதற்கு தான் முழுமையான எதிர்ப்பை தெரிவிப்பதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள கெரவலப்பிட்டிய மின் நிலையத்தின் 40 வீத பங்கை தற்போது அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கியதற்கு... » 02 பக்கம்

## விநியோகஸ்தர்களுக்கு நிதி வழங்காமையினால் சுகாதார சேவைகள் பாதிக்கப்படும் அபாயம்

### சுகாதார நிபுணர்களின் தொழில் வல்லுநர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

•யோ.தர்மராஜ்

சுகாதார துறையின் விநியோகஸ்தர்களுக்கு வழங்க வேண்டிய ஆயிரத்து 200 கோடி ரூபாவை சுகாதார அமைச்சு செலுத்த தவறியதால் எதிர்காலத்தில் பல சுகாதார சேவைகள்... » 02 பக்கம்





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வர் ரோஹித்த ராஜபக்ஷவின் இல்லத்தில் வளர்க்கப்பட்டுவந்த வெளிநாட்டு பூனையொன்று காணாமல் போய் அன்று மாலையே அது கண்டுபிடிக்கப்பட்ட செய்தி கடந்த சனிக்கிழமை சமூக ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்டது.

அண்மையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த மருத்துவர் எலியந்த வைட்டின் குடும்பத்தினர் ,இந்த வெளிநாட்டு பூனையை ரோஹித்தவுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

அது டேர்கிஷ் அங்கோரா வகையை சேர்ந்ததாகும். டேர்கிஷ் அங்கோரா ஒரு பழங்கால, இயற்கை பூனை இனமாகும். இவற்றின் விலை சராசரியாக 900-1500 அமெரிக்க டொலர்களாகும். எனினும் உயர் இனம், நிலையான உடலமைப்பு, அழகான இனங்கள் மற்றும் நன்கு அறியப்பட்ட இனப்பெருக்கம் பண்ணைகளில் இருந்து விற்பனை செய்யப்படும் டேர்கிஷ் அங்கோரா பூனைகள் 1800 முதல் 3000 டொலர் வரையான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

எப்படியோ பூனையை கண்டுபிடித்து வழங்கியவருக்கு பரிசொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

## லொஹானின் அச்சுறுத்தல் குறித்து தீர விசாரித்த ஐரோப்பிய ஒன்றியம்

### வெளியாகிய புதிய தகவல்கள்

•யோ.தர்மராஜ்

இலங்கைக்கான ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை தொடர்ந்து வழங்குவது குறித்து ஆராய்வதற்கு நாட்டுக்கு வருகைதந்துள்ள குழுவினர் இலங்கை பிரதிநிதிகளுடன் தொடர்ந்து முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளின் போது, கடந்த மாத்தில் வெலிக்கடை மற்றும் அநுராதபுர சிறைச்சாலைகளில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் நடவடிக்கை குறித்து ஆழமாக வினவியதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கைக்கு வருகைதந்த குறித்த குழு உறுப்பினர்களுக்கு கருத்துகளை தெரிவிப்பதற்கு... » 02 பக்கம்

## கொரோனா தொற்றியோருக்கு நீண்டகால நோய் அறிகுறிகள்

### ஜயவர்தனபுர பல்கலை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சந்திம ஜீவந்தர தகவல்



•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றுக்குள்ளானோரிடையே 90 முதல் 180 நாட்கள் வரையான காலப்பகுதியில் நீண்டகால நோய் அறிகுறிகள் சில அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். » 02 பக்கம்



PEOPLE'S BANK 60 YEARS OF EMPOWERING THE NATION

சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புகளுக்கு
பழக்கமான இடத்திலிருந்து அதிக அனுகூலம்

Parinatha

துல்லியமான சேவை
உயர் வட்டி விகிதம்
நிகரற்ற பாதுகாப்புடன் பழக்கமான சிநேகமான சேவை

முன்னணி வர்த்தக நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு விசேட கழிவு

டிசெம்பர் 31 வரை வைப்புகளை மேற்கொள்ளும் அல்லது கடன் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இந்த அனுகூலங்கள் கிட்டும்

நிபந்தனைகள் உண்டு

www.peopleslank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
The Bank of the People

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

# விவசாயிகளை சந்திக்கும் திட்டத்தை ஆரம்பித்த சஜித்





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவில் அமைந்த விவசாய சமூகம் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பயிர்ச்செய்கை நிலத்துக்கே சென்று ஆராயும் " கொவிஹதகெஸ்ம" திட்டத்தின் முதலாவது கட்டமாக நேற்று (03) ஹம்பாந்தோட்டை, லுணுகம்வெஹெர, அக்போபுர வலய விவசாயிகளைச் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். இதன்போது, எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார் மற்றும் உர நெருக்கடியால், அதிக எண்ணிக்கையிலான பயிர்ச்செய்கை நிலங்களில் விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளது எனவும் ஏராளமான விவசாயிகள் விவசாயத்தை விட்டு விலகியுள்ளனர் எனவும் தெரியவந்தது. விவசாயிகள் தங்கள் அறுவடைகளை விற்பனை செய்வதில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

# இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கலாசார நிலையம் விரைவில் திறப்பு

## யாழ்ப்பாணத்தில் அறிவித்தார் இந்திய வெளியுறவுச் செயலர்

ஐ.சிவசாந்தன்

இந்திய அரசின் நிதிப் பங்களிப்போடு அமைக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையம், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புடன் வெகுவிரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது என இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்தார்

இந்தியாவின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை பார்வையிட இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா நேற்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இதன்போது யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை சுற்றிவர அவர் பார்வையிட்டார்.அவருடன் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் வருகை தந்தார்.

அவரது வருகையை முன்னிட்டு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய வளாகத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அங்கு அவர் மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாண நகரின் மத்தியில் மிகப் பிரமாண்டமான மண்டபமாக இந்திய அரசின் நிதிப் பங்களிப்போடு இந்த கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மத்திய நிலையமானது வெகு விரைவில் இலங்கை அரசின் பங்களிப்புடன் திறந்து வைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு திறந்து வைக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு கட்டிடத்தின் பராமரிப்பு செலவினையும் இந்தியாவே பொறுப்பேற்க உள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் - என்றார்.






### ஆளுங்கட்சியின் ...

இந்த விடயங்கள் தொடர்பில் முன்னதாக பங்காளிக்கட்சிகள் சில தனித்தனியே கூடி பேச்சு நடத்தியிருந்தன. எவ்வாறாயினும் இன்றைய தினம் நடத்தப்படும் பேச்சு தொடர்பில் சாதகமான பதில் அரசின் உயர்மட்ட தலைவர்களிடம் வராதபட்சத்தில் முக்கிய தீர்மானங்களை எடுக்கவேண்டிவரலாமென பங்காளிக் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

### விநியோகஸ்தர்களின்...

பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக சுகாதார நிபுணர்களின் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த ஆயிரத்து 200 கோடியில் சுமார் 500 கோடி ரூபா ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய பழைய கொடுப்பனவு என்பதோடு, ஒட்சிசன் வழங்குவதற்கு மாத்திரம் 15 கோடி ரூபாவும் பரிசோதனைகள் சேவைகளுக்காக 250 கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை காரணமாக எதிர்காலத்தில் பல நிறுவனங்கள் தங்களுடைய சேவைகளை நிறுத்த முடிவு செய்துள்ளதாகவும் கடந்த வாரத்தில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் குறித்த நிறுவனம் ஒட்சிசன் வழங்குவதை நிறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கடன்களை திருப்பிச் செலுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காதிருத்தல் மற்றும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு சேவைகளை சீர்குலைக்காமல் செலவுகளைக் கட்டுப்படுத்த திறமையான நிர்வாகிகளை நியமிக்காவிட்டால் சுகாதார சேவையில் கடுமையான வீழ்ச்சியை தடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### கொரோனா...

அவர் தன்னுடைய உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அப் பதிவில் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா தொற்றுக்குள்ளானோரிடையே முன்னெடுக்கப்பட்ட ஒரு புதிய ஆய்வொன்றிலேயே இதுபோன்ற ஒன்பது அறிகுறிகளைக் கண்டறிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, அசாதாரண சுவாசம், வயிற்றுநோய் அறிகுறிகள், மன அழுத்தம், நெஞ்சு மற்றும் தொண்டை வலி, அறிவாற்றல் பிரச்சினைகள், சோர்வு, தலைவலி, தசைவலி மற்றும் பிற பிரச்சினைகள் ஆகியன இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிகுறிகளில் மனச்சோர்வின் அறிகுறிகள் 15 சதவிகிதம் அதிகமாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிகுறிகள் பெண்களுக்கு மிக அதிகமாக காணப்படுவதாகவும் மற்றும் நீண்ட கால கொரோனா அறிகுறிகள் ஒரு நவீன வைத்திய சவாலாக இருக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அரச இரகசியங்களை...

இந்த நிலையில், நல்லாட்சி காலத்தில் குறித்த அதிகாரி சேவையாற்றிய அமைச்சில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி குறித்தும் உடனடி விசாரணையை நிதி அமைச்சு ஆரம்பித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் செயலாளர் பி. பி . ஜயசுந்தரவின் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு தன்னை வரையறுத்துக்கொண்டுள்ள இந்த அதிகாரியை உடனடியாக பதவியிலிருந்து நீக்குமாறு உரிய அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்கள் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள உயர் அதிகாரி ஒருவரால் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்பட்டதா என்ற சந்தேகமும் நிதி அமைச்சுக்குள் எழுந்துள்ளதாக அறியமுடிந்தது.

### லொஹானின் அச்சுறுத்தல்...

அரசாங்கத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த விடயம் குறித்து வினவியதாகவும் கூறப்படுகின்றன. எனினும், அவர்கள் நாட்டுக்கு வருகைதருவதற்கு முன்னர் சிறைச்சாலை சம்பவம் தொடர்பாக போதிய தெளிவை பெற்றுக்கொண்டிருந்துள்ளதாகவும் கூறப்படுகின்றன.

இதேவேளை, இச் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வினவியுள்ளதுடன், அவர் தொடர்ந்து இராஜாங்க அமைச்சராக செயற்படுவது மற்றும் அவரின் நடவடிக்கைகள் குறித்தும் வினவியுள்ளதாகக் கூறப்படுகின்றன.

எனினும், இச் சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஓய்வு பெற்ற நீதியரசரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினாலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இலங்கை பிரதிநிதிகள் விளக்கமளித்துள்ளனர்.


### இயற்கை எரிவாயுவை ...

தாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் ஆனால் இயற்கை எரிவாயு அதிகாரத்தை வழங்கியதற்கு தாம் கடுமையான எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதிகாரத்தை வெளிநாட்டுக்கு வழங்குவது ஆபத்தானது. இது தொடர்பாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு மத்தியிலும் சில சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போலியாக நித்திரை கொள்ளும் ஒருவரை ஒரே முறையில் எழுப்புவது கடினமாக இருந்தால் பலமாக எழுப்ப வேண்டிய நிலைமை ஏற்படும் என தெரிவித்துள்ள அவர், இது தொடர்பாக எதிர்காலத்தில் முன்னெடுக்கும் நடவடிக்கைக்காக தான் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# 35 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார் ஹனிபா ஹாஜி



(நூருல் ஹுதா உமர்)

சுகாதார சேவையில் 35 வருட சேவையை வழங்கிவந்த கல்முனையை சேர்ந்த ஹனிபா ஹாஜி என்று, பிரபலமான ஏ.எல்.எம். ஹனிபா, 01.10.2021 இல் இருந்து தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

பிராந்தியத்திலுள்ள பல்வேறு பொது அமைப்புகளில் முக்கிய பதவிகளை வகித்துவரும் இவர், சுகாதாரத்துறையில் தனது நேரிய சேவைக்காக பல்வேறு விருதுகளையும், கௌரவங்களையும் பெற்றவராவார்.

கடந்த காலங்களில் சிறிபுர, நாமல்ஓய, நவமெதகம போன்ற கிராமிய வைத்தியசாலைகளிலும், அம்பாறை பொது வைத்தியசாலை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை, கொழும்பு மருத்துவக்கல்லூரி, கல்முனை பிராந்திய மருந்து விநியோகப் பிரிவு, ஆதார வைத்தியசாலை நிந்தவூர் மீண்டும் கல்முனை பிராந்திய மருந்து விநியோகப் பிரிவு ஆகியவற்றில் கடமையாற்றிய இவர், மருதமுனை மாவட்ட வைத்தியசாலையில் இறுதியாக சேவையாற்றி கடந்த முதலாம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 65 வயது நபருக்கு உறுப்புமாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (O + அல்லது O-) அவசரமாகத் தேவை. தானம் செய்ய விரும்புபவர்கள் குடிப்பழக்கம், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும் இருதய நோய, நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவர்களாகவும் 30 - 40 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். HLA report வைத்திருப்பவர்கள் அவசரமாக தொடர்புகொள்ளவும். தொடர்புக்கு:-

**077 576 6961**

### அரிசி ஆலை...

நம்பிக்கை வைத்திருக்க முடியுமா? என தென்னிலங்கை பௌத்த பீடங்களின் தலைமை பீடாதிபதி ஓமல்பே சோபித்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு, பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் கடற்கொள்ளையர்களால் ஆளப்படும் சில ஆபிரிக்க நாடுகளைப் போல இலங்கை மாறி வருகிறது என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எம்பிலிப்பிட்டியவிலுள்ள போதிராஜ விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஒரு நாட்டின் மக்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கமே பொறுப்பு. நாட்டு மக்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் அவ்வப்போது வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுகிறது. சட்டங்களை இயற்றுகின்றது. தற்போதைய அரசின் இந்தக் கொள்கை தோல்வியடைந்துள்ளதுடன், அரசின் முக்கிய பொறுப்பை நிறைவேற்ற தவறியுள்ளது என்பதை இந்த அரிசி தொடர்பான விடயத்தில் தெளிவாகியுள்ளது.

அரிசி சந்தை இன்று முற்றிலும் தனியார் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எங்களுடைய மொழிநடையில் தெரிவித்தால், ஒரு நரியிடம் கோழிப்பண்ணையை ஒப்படைப்பதற்கு சமமானது. உற்பத்தியாளர்களுக்கு தங்கள் பொருட்களின் விலையை நிர்ணயிக்க அனுமதித்தால் நுகர்வோருக்கு என்னவாகும். சாதாரண குடிமகனுக்கு என்ன நடக்கும். இத்தகைய கொள்கை நாட்டில் இருக்கக்கூடாது.

பொறுப்புள்ள அரசாங்கம் என்பது உற்பத்தியாளர்களுக்கு உதவுவதுடன், உற்பத்தியாளர்கள் தங்களுக்கு ஏற்றவாறு தங்களுடைய உற்பத்திகளுக்கு விலை நிர்ணயிப்பதற்கு அனுமதிப்பதல்ல. உற்பத்திகளுக்கு அரசாங்கமே விலையை தீர்மானிக்க வேண்டும்.

இன்று, அரிசி உற்பத்தி மீதான முழு அதிகாரமும் அதன் விலை அதிகாரத்தை முக்கிய ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ளதன் ஊடாக தன்னுடைய இயலாமையையும் பொறுப்பற்றத் தன்மையையும் அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

எங்களுக்குத் தெரிந்தவரை நெல் 55 ரூபாவுக்கு மேல் அதிகரித்ததில்லை. இருப்பினும், அரிசியின் விலை 120 ரூபாவுக்கு மேல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் எம்பிலிப்பிட்டிய மற்றும் திஸ்ஸமஹாராம போன்ற பகுதிகளில் அரிசியை 85 ரூபாவுக்கு கொள்வனவு செய்யலாம். சாதாரண சாலையோர விற்பனையாளர்கள் அரிசி ஒரு கிலோ 85 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். அவ்வாறு விற்பனை செய்வதற்கு அவர்களுக்கு எப்படி முடிந்தது. பெரிய வர்த்தகர்களுக்கு முடியுமாக இருந்தால் இன்னும் குறைவான விலையில் அரிசியை வழங்க வேண்டும்.

இந்த கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிக பாதுகாப்பு தேவைப்படும் நேரத்தில் ஒரு சில வர்த்தகர்களினால் நாட்டு மக்களை சுரண்ட அனுமதித்துள்ளதன் ஊடாக, நாட்டின் பொறுப்பை ஜனாதிபதி தட்டிக் கழித்துள்ளார். வர்த்தக அமைச்சும் தோல்வியடைந்துள்ளது.

இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு பொறுப்பான வர்த்தக அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். எங்களுக்கு இதனை செய்ய முடியாது என்ற இயலாமையை நிரூபிக்க வேண்டும். இவ்வாறான வர்த்தகர்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்பதை வெளிப்படையாகக் கூறி, தங்களுடைய பொறுப்பிலிருந்து தவறியுள்ளதாக இராஜிநாமா செய்ய வேண்டும். இதனையே, சுய கௌரவமுள்ள ஆட்சியாளர்கள் உலகில் செய்கின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக, இந்த அரசாங்கத்தின் இயலாமையினால் தனியார் வர்த்தகர்களுக்கு நாட்டை ஆள அனுமதித்துள்ளது. பொருட்களின் உற்பத்தியாளர்களே பொருட்களின் விலையை நிர்ணயிக்க அனுமதித்தால் நுகர்வோர் அதிகார சபை எதற்கு? வர்த்தக அமைச்சர் ஒருவர் எதற்கு, நாட்டு மக்களின் வரிப் பணத்தில் இருந்து ஊதியம் பெறும் இத்தகைய அதிகாரிகள் எதற்கு, பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் கடற்கொள்ளையர்களால் ஆளப்படும் வேறு சில ஆபிரிக்க நாடுகளைப் போல இலங்கை மாறி வருகிறது என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது – என்றார்.

### திருமலை எண்ணெய்க்...

இந்த படம் சீனாவுக்கு ஒரு செய்தியை கூறியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா கட்டுக்குள் வைத்திருக்கும் நிலையில் திருமலை எண்ணெய்க்குதங்கள் தங்களது கட்டுப்பாட்டில் இருக்கும் செய்தியை பகிரங்கமாக சொல்வதற்காகவே இவ்வாறான ஒரு படத்தை இந்தியா வெளியிட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நேற்று இந்திய வெளியுறவு செயலர் திருகோணமலையில் பார்வையிட்ட இந்த எண்ணெய் தாங்கிகளின் (Lower Tank Farms) தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் இலங்கையின் சக்தி துறைப்பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக, இந்திய – இலங்கை பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்தும் LIOC அதிகாரிகளால் அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

LIOC நிறுவனத்தின் புதிய தயாரிப்பான Servo Pride ALT 15W-40ஐ இந்த விஜயத்தின்போது அறிமுகம் செய்துவைப்பதற்காக LIOC நிறுவனத்துடன் இணைந்துகொண்டமை குறித்து இந்திய வெளியுறவு செயலர் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினாரென கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு செயலர் நேற்று திருகோணமலையில் நின்றபோது அரசுக்குள் கிளர்ச்சியாளர்களாக கருதப்படும் அமைச்சர் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில உட்பட்ட சிலர் நேற்று திருமலையில் தங்கியிருந்தனர். திருகோணமலை எண்ணெய்க் குதங்களுக்கு இந்திய வெளியுறவு செயலர் செல்லும் வழியில் எதிர்ப்பு போராட்டங்கள் எதுவும் நடக்கலாமென எதிர்பார்க்கப்பட்டது. அதனையடுத்து அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் இடம்பெறவில்லை.

இந்திய வெளியுறவு செயலருக்கு உச்சக் கட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்

நாள்: 04.10.2021 திங்கட்கிழமை - புரட்டாசி 18

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: பூரம்**
05.10.2021 அதிகாலை 2.36 வரை

**யோகம்: சுபம்**
பிற்பகல் 2.12 வரை

**சுப்ரம்**
பி.ப 2.12 - 05.10.2021 காலை 11.35 வரை

**திதி: அமர பட்ச திரயோதசி**
இரவு 9.05 வரை

**அமர பட்ச சதுர்த்தசி**
இரவு 9.05 - 05.10.2021 இரவு 7.04 வரை

**முற்கரணம்: கரஜம்**
காலை 9.52 வரை

**பிற்கரணம்: வணிஜம்**
காலை 9.52 - இரவு 9.05 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.05 - 7.27
மாலை 4.28 - 5.56

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை 7.28 - 8.59

**குளிகை காலம்**
பிற்பகல் 1.29 - 3.00

**எமகண்ட காலம்**
காலை 10.29 - 11.59

**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.23 - 1.11
பிற்பகல் 2.48 - 3.36

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி

நற்பவி நற்பவி

**மேடம்** வீண் செலவுகள் உண்டாகலாம். தொண்டை சம்பந்தப்பட்ட உடல்நல பிரச்சினை ஏற்படலாம். சில ஏமாற்றங்களும், பணியில் சிரமங்களும் தோன்றலாம். இறை தியானம் மன நிம்மதி தரும்.

**ரிஷபம்** திருமண வாழ்வின் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்கால நல்வாழ்வுக்கான உழைப்புக்கு இடையில் வீட்டில் இருப்பவர்களிடமும் நல்ல முறையில் இருக்கும் நிலை உண்டாகலாம்.

**மிதுனம்** பிள்ளைகளின் தொழில் சம்பந்தப்பட்ட நன்மை ஏற்படலாம். வேலைத்தளங்களில் நம்பிக்கையும், அனைவரின் ஆதரவும் கிடைக்கப் பெறலாம். நல்ல முடிவுகள் நிறைவேற துவங்கும்.

**கடகம்** ஆக்கபூர்வமான தீர்மானங்கள் உண்டாகலாம். பணிகளில் செல்வாக்கு உயரலாம். பிள்ளைகளை பற்றிய சிறிய கவலை ஏற்படலாம்.

**சிம்மம்** வணிகத்தில் அதிக இலாபம் தரும் ஒப்பந்தம் கிடைக்கப் பெறலாம். உணவகங்களின் இலாபங்கள் அதிகரிக்கலாம். விரும்பிய புதிய வேலை ஏற்படலாம். வாழ்க்கைத் துணையின் உணர்வுகளுக்கு மதிப்பு தந்து மகிழ்ச்சியை பெறலாம்.

**கன்னி** வேலைத்தளங்களில் பிறரின் பணிகளில் தலையீடு செய்வதை தவிர்ப்பது நன்மை. பங்குச்சந்தை நிதி ஒதுக்கீடுகளில் அதிக கவனம் தேவைப்படலாம். கவனக்குறைவால் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

**துலாம்** வாகன கொள்வனவுக்கான தீர்மானம் எடுக்கப்படலாம். பணியில் உயர் பதவி கிடைக்கப் பெறலாம். புதிய தொழில் துவங்க தேவையான நிதி பிரச்சினை நீங்கலாம். காதலர்களுக்குள் உறவு மேம்படும்.

**விருச்சிகம்** பிள்ளைகளின் நல்ல விடயங்களில் மன மகிழ்வுடன் ஒத்துழைப்பு தருவது நன்மை. பணியில் அதிக சுமை ஏற்படலாம். வேலைகளில் சில தடைகளும் உண்டாகலாம். இறைவணக்கம் பிரச்சினைகளை குறைக்கும்.

**தனுசு** வணிகத்தில் பங்குதாரர்கள் எண்ணிக்கை கூடும். மகிழ்ச்சி தரும் பயணம் ஏற்படலாம். வாழ்க்கைத்துணையின் அன்பான ஆதரவால் வெற்றிகளின் முயற்சி உண்டாகலாம். பணித் திறன் மேம்படும்.

**மகரம்** சில பொறாமைகளால் அவமரியாதை ஏற்படலாம். பணியில் சக பணியாளர்களிடம் பிரச்சினை ஏற்படாமல் ஒதுங்கி இருப்பது நன்மை. மூட்டுவலி உண்டாகலாம். வீட்டு பொறுப்புகளில் சிறிய மனக்கவலை ஏற்படலாம். இறை தியானம் மன அமைதி தரும்.
சந்திராஷ்டமம்: திருவோணம் நட்சத்திரத்திற்கு இரவு 8.52 வரை. அவிட்டம் நட்சத்திரம் பாதம் 1/2க்கு இரவு 8.52- 05.10.2021 காலை 8.17 வரை.

**கும்பம்** தொழிலுக்கான புதிய திட்டங்கள் உருவாகலாம். பரம்பரை வணிக இலாபங்கள் அதிகரிக்கும். சில பிரச்சினைகள் நீங்க துவங்கும். செயல்திறன் அதிகரிக்கும். சில வழக்கங்களில் மாற்றம் ஏற்படலாம்.

**மீனம்** ஆன்மீக ஆர்வம் ஏற்படலாம். தூர பயணங்கள் உண்டாகலாம். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளில் தாமதம் ஏற்படலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். இயற்கை மாற்றத்தால் சிறிய உடல் நலப் பிரச்சினை ஏற்படலாம்.

# நாடளாவிய ரீதியில் போராட்டத்துக்கு தயாராகும் அதிபர், ஆசிரியர்கள்

## நாளை மறுதினம் எதிர்ப்பு நடவடிக்கை

அதிபர், ஆசிரியர்களின் கோரிக்கையை மிக விரைவாக நிறைவேற்றுமாறு கோரி நாடு தழுவிய ரீதியில் நாளை மறுதினம் (06) போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. ஆசிரியர் தினத்தை முன்னிட்டு போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாக அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு முன்பாக போராட்டம் நடத்தவுள்ளதாகவும் எவ்வித இடையூறுகள் ஏற்படுத்தினாலும் நோக்கத்தைக் கைவிடப்போவதில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வட மாகாணத்தில் இணையவழியாக கற்பித்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ். பணிமனையில் நேற்று (03) இடம்பெற்றது. அச்சங்கத்தின் வடமாகாண செயலாளர் புயல்நேசன் தலைமையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது, அமைச்சரின் கருத்துக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அமைச்சரின் கருத்தின் மூலம் இனவாதத்தை தூண்டி மக்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் குழப்பத்தையும் பிரிவினையையும் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. உண்மையில் வடமாகாண ஆசிரியர்கள் தங்களது பூரண ஒத்துழைப்பை போராட்டத்துக்கு வழங்குகிறார்கள் என ஆசிரியர் சேவை சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லையென அதிபர், ஆசிரிய சங்கங்கள் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய் - மகனை கட்டிவைத்து கடுமையாகத் தாக்கிய குழு நாவற்குழியில் சம்பவம்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-நாவற்குழி மேற்கு கைதடிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு வேளையில் நுழைந்த இருவர் அடங்கிய குழுவொன்று தாய் மற்றும் மகனை கட்டி வைத்து தாக்கியதுடன் வீட்டில் இருந்த பொருட்களையும் திருடிச் சென்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நள்ளிரவு வேளையில் நாய் குரைத்தபோது 17 வயது மகன் கதவினைத் திறந்து வெளியே சென்றுள்ளார். இதன்போது மகனைப் பிடித்த இருவர் மகனை வீட்டிற்குள் இழுத்துச் சென்று கட்டிப்போட்டதுடன் வீட்டில் இருந்த தாயையும் கயிற்றால் கட்டி வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது தடியால் கடும் தாக்குதலுக்கு உள்ளான 55 வயதான தாய் மற்றும் 17 வயதான மகன் இருவரும் உடல் முழுவதும் அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில், நேற்றுக்காலை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அடாவடிக் குழு இரண்டு மணி நேரம் தாய் மற்றும் மகனை கட்டி வைத்து தாக்கியதுடன் வீட்டில் இருந்த இரண்டாயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றையும் திருடிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் மற்றும் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஹல்துமுல்லயில் குளவிக்கொட்டு: இளைஞர்கள் ஐவருக்கு காயம்



ஹல்துமுல்ல, களுபஹன பகுதிக்கு சுற்றுலா சென்ற இளைஞர்களுக்கு நேற்று (03) குளவி கொட்டியதில் ஐவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுபஹன பகுதியில் மலையொன்றின் மீது ஏறிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது குளவிக்கூடு விழுந்துள்ளது. அதன்பின்னர் இளைஞர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இதனையடுத்து பொதுமக்களின் உதவியுடன் ஐவரும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இளைஞர் ஒருவருக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்ட நிலையில் உடனடியாக பலாங்கொடை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அத்துடன் மேலும் இருவர் தியத்தலாவை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 25,27,32,33,38 வயதுடையவர்கள் என ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 5,20,172 | 47,815 | 4,59,298 | 855 | 13,019 |

# பாலர் பாடசாலைகள் இம்மாதம் ஆரம்பம்

## கல்வி அமைச்சர் நம்பிக்கை

நாட்டிலுள்ள பாலர் பாடசாலைகளை இம்மாதம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டின் கொரோனா நிலைமை சீராகி வருவதால் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மகரகமவில் பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதிக்கான நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துவைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக கட்டம் கட்டமாக பாடசாலைகளை திறக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். பாடசாலைச் சூழலில் மாணவர்களின் பாதுகாப்பு முக்கியமானதாகும். அது குறித்து நாம் ஆராய்ந்து வருகிறோம். பாடசாலைகளை மீள ஆரம்பிக்க அனைத்து அரச ஊழியர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் பெற்றோரின் முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகும். 2020 ஆம் ஆண்டுக்குரிய கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை எங்களால் வெளியிடக் கூடியதாக இருந்தது.

அதேபோல் மாணவர்கள் தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் நாம் உறுதிசெய்ய வேண்டும் என்றார்.

# தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை

## பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கவலை

நாட்டில் மாகாணங்களுக்கிடையில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீண்டும் சேவை வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுமார் 75 வீதமான பஸ்கள் நீண்ட நாட்களாக ஓரிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அவற்றை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பெரும்பாலான சாரதியரும் நடத்துநர்களும் தொழில் இல்லாத காரணத்தினால் வேறு தொழில்களை நாடிச் சென்றுள்ளனர்.

நாட்டில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்கள், ஊரடங்கு காலத்தில் உரிமையாளர்களால் ஓரளவுக்கேனும் பயன்படுத்தப்பட்டவையாகும். ஆயினும் ஒரு மாத காலத்துக்கு மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்களை உடனடியாக இயங்க வைக்க முடியாது. இதன் காரணமாக சுமார் 5 ஆயிரம் பஸ்களுக்கு திருத்தப்பணிகள் செய்ய வேண்டியுள்ளது. அதற்கென பஸ் ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா வரை செலவாகும். வருமானம் எதுவும் இல்லாமல் இவ்வாறு செலவுசெய்வது மிகக் கடினமானதாகும். பயணத்தடை நீக்கப்பட்டாலும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது என்பது சிரமமான காரியமாகும். பஸ் உரிமையாளர்களுக்கு மானியம் கூட வழங்கப்படவில்லை என்றார்.

# மருத்துவ செடி இறக்குமதிக்கு 9 மில். டொலர்கள் செலவீடு

இந்தியாவிலிருந்து மருத்துவ செடிகளை இறக்குமதி செய்வதற்காக ஆண்டொன்றுக்கு 9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி செலவிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

காலநிலை மாற்றத்துக்கு முகங்கொடுக்கும் வகையில் பசுமை பொருளாதாரத்துக்கான ஜனாதிபதி செயலணியின் கடந்த வார கூட்டத்தின்போது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான மருத்துவ செடிகளை உள்நாட்டில் வளர்ப்பதற்கான சூழல் குறித்து ஆராய்வதற்கு இந்தக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய மரநடுகை திட்டத்தின் கீழ் பொருத்தமான இயற்கைச் சூழல் நிலவும் இடங்களை இனங்கண்டு இந்தச் செடிகளை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# கைதிகளைப் பார்வையிட உறவினர்களுக்கு அனுமதி

சிறைச்சாலை கைதிகளை சந்திப்பதற்காக உறவினர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை இன்று (04) முதல் நீக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படுமென சிறைச்சாலை திணைக்களத்தின் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். அதன் பிரகாரம் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 4 மணிவரையும் கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்படும். கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதியிலிருந்து சிறைச்சாலை கைதிகள் உறவினர்களை சந்திப்பது தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, இயலுமானவரை நு-ஏளைவை முறை மூலம் பார்வையிட அனுமதி கோருமாறும் சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.




# 60 வயதுக்கு மேற்பட்ட 85,000 பேர் தடுப்பூசி ஏற்றவில்லை எனத் தகவல்

நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட 85 ஆயிரம் பேர் எந்தவொரு தடுப்பூசியையும் ஏற்றிக்கொள்ளவில்லையென கொவிட் -19 தடுப்பு தொடர்பிலான ஜனாதிபதி செயலணிக்கு தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் வெவ்வேறு காரணங்களுக்காக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவில்லையென வைத்திய நிபுணர்கள் செயலணியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது பாரதூரமான பிரச்சினையாகும் எனவும் இதனால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து சிந்திக்க வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, கொவிட் -19 தொற்றுக்குரிய தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணத்திலேயே அதிக எண்ணிக்கையில் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. அங்கு சுமார் 20 ஆயிரம் பேர் தடுப்பூசிகள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லையென தெரியவந்துள்ளது. இவ்வாறு நாடு முழுவதிலும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டோரை கண்டறிந்து அவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென நிபுணர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அழிக்கப்பட்ட தரவுகளை மீளப்பெற நடவடிக்கை

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அழிக்கப்பட்ட தரவுகளை மீளப்பெறும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் விசேட குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஔடதங்கள் உற்பத்தி ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

தரவுகள் அழிக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் நிறைவு பெறும் வரை, சம்பவத்திற்கு பொறுப்பான நிறுவனத்தை பொறுப்பில் இருந்து நீக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். இதேவேளை, எபிக் லங்கா டெக்னொலஜீஸ் நிறுவனத்தின் உதவி மென்பொருள் பொறியியலாளர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 07ஆம் திகதி கோப் குழுவுக்கு அழைப்பு

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை எதிர்வரும் 07 ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) முன்னிலையில் அழைத்துள்ளதாக கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அதற்கமைய, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் கடந்த ஜூலை மாதம் 07 ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் கோப் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. அது தொடர்பில் குழு உறுப்பினர்களின் விசேட கூட்டம் நாளை 05 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக கோப் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, நாளை மறுதினம் 06 ஆம் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளது. உரிய சுகாதார ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, தேவையான அதிகாரிகளை ஒன்லைன் ஊடாகவும் இணைத்துக்கொண்டு கோப் குழுக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளதாக கோப் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# ஆட்பதிவு திணைக்கள சேவைகள் இன்று முதல் ஆரம்பமாகும்

ஆட்பதிவு திணைக்களத்தின் அனைத்து அலுவலகங்களிலும் இன்று (04) முதல் பொதுமக்களுக்கான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கமைவாக இந்த சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும், ஒரு நாள் சேவை முன்னெடுக்கப்படாதென ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் சேவைகளும் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய, அரசாங்கத்தினால் தற்போது விடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்றி சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கென கையடக்க தொலைபேசி மூலம் 225 என்ற இலக்கத்துக்கு அழைத்து நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும்.

அதேபோல, 1225 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அழைப்பை மேற்கொண்டு முன்பதிவு செய்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஒக்டோபர் 04ஆம் திகதி, திங்கட்கிழமை

# சம்பந்தனின் நியாயமான கருத்து!

"முழுமையான அனைத்தும் உள்ளடங்கிய ஓர் அரசமைப்பை இந்த நாடு உருவாக்க முனைவதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இந்த முக்கிய தருணத்தில் ஒற்றுமையைப் பேணுவது அடிப்படையானதாகும். மக்கள் மத்தியில் ஒரு தெளிவு இருக்க வேண்டும்; மாறாக அவர்களைக் குழப்பக்கூடாது."

இவ்வாறு அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

தமிழ்க் கூட்டமைப்பினுள் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் அதிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மூவரும் கடந்த புதன்கிழமை கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சு நடத்தியிருந்தனர். இதைத் தெளிவுபடுத்தும் வகையில் சம்பந்தன் நேற்றுமுன்தினம் மாலை விசேட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பொறுப்புகளை வகிக்கும் அங்கத்தவர்கள் பொதுவாக வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களில் வசிக்கின்றார்கள். கொரோனா வைரஸின் தாக்கத்தால் தனியாகவும் குழுக்களாகவும் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்குத் தடையாக அமைந்துள்ளது. இதன் விளைவாக சில விடயங்கள் தொடர்பில் தெளிவற்ற நிலைமை உருவாகியுள்ளது.

தேசிய பிரச்சினைக்கான அரசியல்தீர்வை அரசமைப்பினூடாகப் பெற்றுக்கொள்வதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மிகப் பிரதானமான குறிக்கோளாகும். இந்த நாட்டிலே தமது பூர்வீகத்தைக் கொண்டுள்ள மக்களின் இறையாண்மையானது முழு நாட்டிலும் அவர்களுக்கான ஆட்சி அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை என்பவற்றை உள்ளடக்கும் அவர்களின் வரலாற்று ரீதியான பூர்வீகம் மற்றும் இலங்கை அரசும் தலைவர்களும் உள்நாட்டிலும் சர்வதேசத்துக்கும் கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையிலும், இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையிலும் அமையப் பெற்றதாகும்.

இந்த அடிப்படை விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது. ஏனைய சில விடயங்கள் தொடர்பில் ஒருங்கிணைந்த கூட்டங்கள் இடம்பெறாமையானது சில தெளிவற்ற நிலைமைகளையும் குழப்பங்களையும் தோற்றுவித்துள்ளன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஒற்றுமையை உறுதி செய்யும் முகமாக இந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறும். முழுமையான அனைத்தும் உள்ளடங்கிய ஓர் அரசமைப்பை இந்த நாடு உருவாக்க முனைவதாகக் கூறப்படுகின்றது. இந்த முக்கிய தருணத்தில் ஒற்றுமையைப் பேணுவது அடிப்படையானதாகும். மக்கள் மத்தியில் ஒரு தெளிவு இருக்க வேண்டும்; மாறாக அவர்களைக் குழப்பக்கூடாது.

ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டுக்குள் சமத்துவம், நீதி மற்றும் சுயகௌரவம் என்பவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வை எட்டும் எமது குறிக்கோளில் உறுதியாகப் பயணிப்பதற்கு தெளிவின்மைகளையும் குழப்பங்களையும் தவிர்த்துக்கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார் சம்பந்தன்.

சம்பந்தனின் இந்த பகிரங்க அறிவிப்பு இன்றைய காலகட்டத்தில் தேவையான ஒன்றாகும். தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகள் கிடப்பில் இருக்கும் ஒரு வரலாற்று இக்கட்டான சந்தர்ப்பத்தில், தமிழரசுக் கட்சிக்குள்ளோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலோ குடுமிப்பிடி சண்டைகள் நடப்பது எந்தவகையில் சரியானதென தெரியவில்லை.

கடந்த வாரம் சம்பந்தனை சந்தித்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், கட்சியின் பேச்சாளர் சுமந்திரனுக்கு எதிரான கருத்துகளை முன்வைக்கும் கூட்டமாகவே அதனை நடத்தியதாக சொல்லப்பட்டது. சுமந்திரன் மீதுவிமர்சனங்கள் இருக்கலாம். அவை பற்றியெல்லாம் பேசக் கூடாது என்று சட்டமில்லை. ஆனால், ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இலங்கையில் இருந்த ஒரு சமயத்தில், இந்திய வெளியுறவு செயலர் இலங்கை வரவிருந்த காலகட்டத்தில் எவ்வளவோ விடயங்களை விவாதிக்கவேண்டிய ஒரு காலகட்டத்தில் கட்சித்தலைவர்கள் ஒன்றுகூடி அற்ப விடயங்களுக்காக விவாதித்திருப்பது ஆரோக்கியம்தானா?

உங்களில் எவன் ஒருவன் பாவம் இல்லாதிருக்கிறானோ அவன் முதல் கல்லை எறியக்கடவன் என்றார் இயேசு. அதுபோல, சுமந்திரன் மீது விமர்சனங்களை முன்வைக்கும் எவரும் தமது கடந்த காலங்களை திரும்பிப் பார்ப்பது நல்லது. அனைவருக்கும் ஒரு தனிக்கதை உண்டு. அதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகாது. ஆனால், வானத்தை நோக்கி உமிழ்வது இப்போதைய நிலையில் சரிதானா? என்றே கேட்கத் தோன்றுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்பது தமிழர்களின் பிரதான சக்தி. அதற்குள் குழப்பங்களை ஏற்படுத்தி குளிர்காய பல சக்திகள் கடந்த காலங்களில் முயன்றன என்பது இரகசியமல்ல. அதனை பலவீனமாக வைத்திருக்கும்வரை தமிழர்களும் பலவீனமாகவே இருப்பார்கள். ஆயிரம் கருத்து விமர்சனங்கள் இருந்தாலும் அந்த கூட்டு சக்தியை குலைக்க விடலாமா? தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகளை ஆராய இதேபோல ஒரு சந்திப்பை சம்பந்தனிடம் கேட்டிருப்பார்களா சுமந்திரனுக்கு எதிரான அந்த கிளர்ச்சியாளர்கள்?

பகலில் தமிழ்த் தேசியம் பேசி இரவில் தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் 'டீல்' போடும் பிரகிருதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இன்னமும் இருக்கிறார்கள். அவர்கள் பற்றி விளக்கி தமிழ்த் தேசியத்தின் மீதான தமிழர்களின் நம்பிக்கையினையும் விசுவாசத்தையும் குலைப்பது எமது எண்ணமல்ல. ஆனால், தமிழர்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். சம்பந்தன் கூறுவதுபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு பலமாக இருக்க வேண்டும். யாரும் குழப்பங்களை விளைவிக்கக் கூடாது!



# காமராஜரின் கடைசி நாட்கள்!



**ஒக்டோபர் 2 காமராஜர் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது**

நேருவின் அழைப்பை ஏற்று தேசிய அரசியலில் நுழைந்தவர் காமராஜர். அவர் 1964இல் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றார். இப்பொறுப்பில் 1967 வரை பதவி வகித்து, மூன்று முறை பிரதமர்களைத் தேர்வுசெய்த பெருமை இவருக்கு உண்டு. சோதனையான சூழலில் நேருவின் மறைவுக்குப் பிறகு, லால்பகதூர் சாஸ்திரியையும், அவரது மறைவுக்குப் பிறகு இந்திரா காந்தியை இருமுறையும் பிரதமராகத் தேர்வுசெய்து, தேசிய அரசியலில் செல்வாக்கு மிக்க தலைவராக விளங்கினார்.

1967 தேர்தல் தோல்வி காரணமாகத் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை இழந்தது. புதிதாகத் தேர்வுசெய்யப்பட்ட தி.மு.க. ஆட்சியை ஆறு மாதங்களுக்கு விமர்சனம் செய்ய மாட்டேன் என்று பெருந்தன்மையோடு அரசியல் நாகரிகத்தை அறிமுகப்படுத்தினார். 1969இல் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டது. அந்தப் பிளவில் காமராஜர் ஒரு பக்கமும், இந்திரா காந்தி மற்றொரு பக்கமும் இருக்க வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டது. அந்தப் பிளவின் காரணமாக தேசிய சக்திகளின் வலிமைக்குத் தமிழகத்தில் பின்னடைவு ஏற்பட்டது.

காமராஜர் 1967க்குப் பிறகு கடைசியாகச் சந்தித்தது 1971ஆம் ஆண்டு நடந்த தேர்தலை. அந்தத் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காத நிலையில், தொடர்ந்து ஸ்தாபன காங்கிரஸ் கட்சியை வலிமைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இந்தச் சூழலில், தி.மு.கவில் பிளவு ஏற்பட்டு, அ.தி.மு.கவை எம்.ஜி.ஆர். தொடங்கியதால் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் முக்கியத்துவம் குறைகிற நிலை ஏற்பட்டது. தி.மு.க. எதிர்ப்பு வாக்கு வங்கியின் பெரும் பகுதியை எம்.ஜி.ஆர். கைப்பற்றுகிற சூழல் உருவானது. அந்தப் பின்னணியில்தான் திண்டுக்கல் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. தி.மு.கவை ஓர் அரசியல் கட்சியாக எதிர்கொண்ட காமராஜரால், அ.தி.மு.கவுக்குத் தமிழ்நாட்டு மக்கள் அளித்த ஆதரவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தமிழ்நாட்டு நலன்கருதி அ.தி.மு.கவின் வளர்ச்சியை எப்படியும் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இரண்டு காங்கிரஸும் இணைந்து புதுச்சேரி, கோவை மக்களவை, சட்டமன்ற இடைத்தேர்தலை எதிர்கொள்ளும் வியூகத்தை காமராஜர் வகுத்தார். அதற்கு புதுச்சேரியில் வெற்றியும், கோவையில் மிகச் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைகிற நிலையும், காமராஜருக்கு சற்று ஆறுதலைத் தந்தது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இரண்டு காங்கிரஸ்களும் இணைய வேண்டுமென்ற முயற்சியில் சிலர் ஈடுபட்டபோது, அதற்கு காமராஜர் மனதளவில் இசைவுடன் செயல்பட்டார்.

இத்தகைய அரசியல் சூழலில் (1975இல்), காமராஜர் கடுமையான காய்ச்சலுக்கு உள்ளானார். தனது 73ஆவது பிறந்தநாள் விழாவை எளிமையாகக் கொண்டாடினார். சில காலமாகவே உடல்நலம் குன்றிய நிலையில், காமராஜர் காணப்பட்டார். பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்துவந்தார். எனினும், ஒக்டோபர் 1, சிவாஜியின் பிறந்தநாள் அன்று அருகில் உள்ள அவரது வீட்டுக்கு நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்து கூறிவிட்டுத் திரும்பினார்.

மறுநாள் ஒக்டோபர் 2, காந்தி பிறந்தநாளன்று இயல்பாகவே இருந்தார். அன்று காலை தன்னைச் சந்திக்க வந்தவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். பிற்பகல் 1.30 மணிக்கு அவர் வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டுத் தூங்கப் போனார். மாலை சுமார் 3.05 மணியளவில் உடம்பு முழுவதும் வியர்த்துவிட்டது. அந்த அறையில் குளிர்சாதனப் பெட்டி இயங்கிக்கொண்டிருந்த நிலையிலும் அவரது உடம்பு வியர்த்திருந்தது. காமராஜர் தமது உதவியாளர் வைரவனை அழைத்து, மருத்துவர்களைக் கூப்பிடும்படி கூறினார். உடனே, மருத்துவர் சவுரிராஜனுக்கும் மருத்துவர் ஜெயராமனுக்கும் தொலைபேசியில் விவரம் தெரிவிக்கப்பட்டது. பிறகு, காமராஜரின் உடம்பு சில்லிட்டிருந்ததால் உடம்பைத் துடைத்து, போர்வையால் போர்த்திவிட்டு, அறையிலிருந்து வைரவன் வெளியேறியபோது, டாக்டர்கள் வந்தால் தன்னை எழுப்பும்படி கூறிய காமராஜர், "விளக்கை அணைத்துவிட்டுப் போ" என்று கூறினார்.

3.15 மணிக்கு வந்த மருத்துவர் சவுரிராஜன் காமராஜரின் உடல்நிலையை அவசர அவசரமாகப் பரிசோதித்துக்கொண்டே, "ஐயோ... பெரியவர், நம்மை விட்டுப் பிரிந்துவிட்டாரே" என்று வீறிட்டு அழுதார். தொடர்ந்து வந்த மருத்துவர்கள் ஏ.எல்.அண்ணாமலையும் ஜெயராமனும் உடலைப் பரிசோதித்துப் பார்த்து, உயிர் பிரிந்ததை உறுதிப்படுத்தினார்கள். உடனே, ஆளுநர் கே.கே.ஷாவுக்கும், அப்போதைய முதல்வர் மு.கருணாநிதிக்கும் தொலைபேசி மூலம் செய்தி தெரிவித்தார் மருத்துவர் அண்ணாமலை. காமராஜர் மறைவுச் செய்தியைக் கேட்டவுடனே முதல்வர் மு.கருணாநிதி விரைந்து வந்தார். அப்போது வீட்டுக்குள் நுழைந்த சிவாஜி கணேசன் துக்கம் பெருகி, "போச்சே... போச்சே..." என்று கதறியபோது, அவரை மு.கருணாநிதி அணைத்துக்கொண்டு தேற்றினார்.

மருத்துவர்கள் வந்து தெரிவிக்கும் வரையில், காமராஜரின் உயிர் பிரிந்தது யாருக்கும் தெரியாது. காரணம், அவர் படுத்திருந்த தோற்றத்திலோ முகத்திலோ ஒரு வித்தியாசத்தையும் காண முடியவில்லை. சுகமாகத் தூங்குவதுபோலவே அவரது முகம் காணப்பட்டது.

காமராஜரின் உடல், மாலை 5.30 மணிக்கு ஒரு சிறப்பு வாகனத்தில் ராஜாஜி மண்டபத்துக்குக் கொண்டுவரப்பட்டு, மறுநாள் பிற்பகல் 3.00 மணிக்கு ராஜாஜி மண்டபத்திலிருந்து அன்றைய மவுண்ட் ரோட், மர்மலாங் பாலம் வழியாக காந்தி மண்டபத்துக்கு ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டு, அதற்கு இடது பக்கத்தில் தகனம் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. இந்த இடத்தைத் தேர்வுசெய்து தகனத்துக்கான ஏற்பாடுகளை, காங்கிரஸ் தலைவர்களோடு கலந்து மு.கருணாநிதி செய்திருந்தார்.

ராஜாஜி மண்டபத்துக்கு வெளியே, மறைந்த மாபெரும் தலைவருக்கு அஞ்சலி செலுத்தக் கடல்போல் பெரிய கூட்டம் திரண்டது. ஜன சமுத்திரத்தைச் சமாளிக்க முடியாமல் பொலிஸார் திணறினார்கள். மூவர்ண தேசியக் கொடியால் காமராஜர் உடல் போர்த்தப்பட்டிருந்தது. பீரங்கி வண்டியில் காமராஜர் உடல் சென்றதைக் கண்ட ஆயிரக்கணக்கான மக்கள் மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு கதறினார்கள். ராஜாஜி மண்டபத்திலிருந்து புறப்பட்ட இறுதி ஊர்வலம் காந்தி மண்டபத்தை அடைவதற்கு மூன்று மணி நேரம் பிடித்தது. ஒக்டோபர் 3, மாலை 6.35 மணிக்கு காமராஜரின் உடல் தகனம் முழு இராணுவ மரியாதையுடன் நடைபெற்றது. சிதைக்குத் தீ மூட்டும் முன்பு பீரங்கிகள் மூன்று தடவை முழங்கின. காமராஜரின் தங்கை நாகம்மாளின் பேரன் கனகவேல் சிதைக்கு எரியூட்டியபோது, அருகே இருந்த காங்கிரஸ் கட்சியினர் கதறி அழுதனர். "அமரர் காமராஜர் வாழ்க!" என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது. இறுதி நிகழ்வில், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி கலங்கிய கண்களோடு பங்கேற்றார்.

தமிழக அரசியலிலும், தேசிய அரசியலிலும் செல்வாக்கு மிக்க அரசியல் தலைவராக விளங்கிய காமராஜர் நேர்மை, எளிமை, தூய்மை ஆகியவற்றைத் தாரக மந்திரமாகப் பின்பற்றினார். இவற்றையெல்லாம் வலியுறுத்திய காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றி, அவர் பிறந்தநாளில் மறைந்து அவரோடு இரண்டறக் கலந்துவிட்டார். காந்தியத்தின் கடைசித் தூண்களுள் ஒன்று சாய்ந்துவிட்டது என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும். வாழ்நாளில் தனக்கென்று எந்த சொத்தையும் அவர் சேர்த்ததில்லை. ஆனால், நவீனத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பொற்கால ஆட்சி நடத்தி, அடித்தளம் அமைத்த பெருமை காமராஜருக்கு உண்டு. அதன்மூலம் தமிழ்ச் சமுதாயம் அடைந்த பயன்கள் ஏராளம். அதனால்தான், இன்றைக்கும் பெருந்தலைவர் காமராஜர் போற்றப்படுகிறார்; நினைவுகூரப்படுகிறார்.

**ஆ.கோபண்ணா,**
**ஆசிரியர், தேசிய முரசு.**

# இன்று கூடுகிறது நாடாளுமன்றம்; வாரம் முழுவதும் சபை அமர்வுகள்

## நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவிப்பு



நாடாளுமன்றம் இன்று (04) முதல் தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்கு கூடும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்ததாக தம்மிக்க தசநாயக்க மேலும் தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்றத்தை இன்று (04) முதல் 08ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் கூட்டுவதற்கும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கமைய, இன்று திங்கட்கிழமை முழு நாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கான விசேட நாடாளுமன்ற அமர்வு தினமாக ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களால் இதுவரை நாடாளுமன்றத்தில் கேட்கப்படாத வாய்மூல விடைகளுக்கான 40 கேள்விகளுக்காக முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 வரையான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

நாளைய தினம் நாடாளுமன்றம் முற்பகல் 10 மணிக்குக் கூடவிருப்பதுடன், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளன.

ஒக்டோபர் 06ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

ஒக்டோபர் 07ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) மற்றும் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஒக்டோபர் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை 2021ஆம் ஆண்டு நடுப்பகுதியின் நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறும்.

அத்துடன், செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், செவ்வாய்க்கிழமை முதல் வியாழக்கிழமை வரை தினமும் பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் பிற்பகல் 4.50 மணி முதல் 5.30 மணி வரையான நேரம் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதத்துக்கும், புதன்கிழமை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# கடல்மார்க்கமாக மஞ்சள் கடத்திய எண்மர் கைது



(புத்தளம் செய்தியாளர்)

கடல் மார்க்கமாக இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட மஞ்சள் மற்றும் புகையிலை என்பவற்றுடன் 08 பேரை கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து கைது செய்துள்ளனர்.

வென்னப்புவ, ஆராச்சிக்கட்டுவ மற்றும் கல்பிட்டி ஆகிய பிரதேசங்களில் இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

கல்பிட்டி கடற்பிரதேசத்தில் 05 பொலித்தீன் உரைகளில் 165 கிலோ கிராம் மஞ்சளும் 65 உரைகளில் ஆயிரத்து 111 கிலோ கிராம் புகையிலையும் மீட்கப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவற்றை எடுத்து வந்ததாகக் கூறப்படும் இரு சிறிய படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ஆராச்சிக்கட்டுவ கருக்குப்பனை பிரதேசத்தில் ஆயிரத்து 880 கிலோ கிராம் மஞ்சளுடன் 06 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மஞ்சள் 97 உரைகளில் பொதி செய்யப்பட்டிருந்தன. இவற்றை எடுத்து வந்ததாகக் கூறப்படும் சிறிய ரக மீன்பிடி படகொன்றும் கைப்பற்றப்பட்டது. இந்த மஞ்சள் தொகையை எடுத்து செல்வதற்கு தயாராக இருந்த 03 லொறிகளும் ஜீப் வண்டியொன்றும் கைப்பற்றப்பட்டன.


இதேவேளை, கண்டக்குளி துடாவ பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கிலோ கிராம் மஞ்சள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. இந்த மஞ்சள் 40 பொலித்தீன் உறைகளில் பொதி செய்யப்பட்டிருந்தன.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 79,850 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 79 ஆயிரத்து 850 பேர் நேற்று அதிகாலை வரை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 46 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும், மேல் மாகாணத்துக்குள் நுழைந்த 851 வாகனங்கள் சோதனையிடப்பட்டதுடன் வெளிச்சென்ற 786 வாகனங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

அத்துடன் அத்தியாவசிய தேவையின்றி மேல் மாகாணத்துக்குள் நுழைய முற்பட்ட 164 வாகனங்கள் திருப்பியனுப்பப்பட்டதுடன் 292 நபர்களும் திருப்பியனுப்பப்பட்டதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா கண்டி தலதா மாளிகையில் நேற்று (03) வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# பொலிஸ் காவலிலிருந்தபோது இளம் குடும்பஸ்தர் மரணம்

**மன்னாரில் சம்பவம்**

(மன்னார் நகர் செய்தியாளர்)

மன்னார் எருக்கலம் பிட்டி - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வைத்து மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் காலை திடீர் சுகயீனம் காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மன்னார் எருக்கலம்பிட்டி தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த ரம்ஸான் என்ற 29 வயதுடைய குடும்பஸ்தர் எனத் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் கடந்த வெள்ளிக்கிழமை (1) இரவு முச்சக்கர வண்டியில் புதுக்குடியிருப்பு பகுதிக்குச் சென்று மீண்டும் எருக்கலம்பிட்டி கிராமத்தை நோக்கி வந்துள்ளனர்.

இதன்போது எருக்கலம்பிட்டி-புதுக் குடியிருப்பு பிரதான வீதியில் கண் காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் குறித்த இருவரையும் மறித்து முச்சக்கர வண்டியை சோதனையிட்ட நிலையில் போதைப் பொருள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த இருவரையும் கைது செய்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் குறித்த இருவரையும் றேற்று முன்தினம் சனிக்கிழமை (2) காலை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில், ரம்ஸான் என்ற இளம் குடும்பஸ்தருக்கு திடீர் சுகயீனம் எற்பட்டுள்ளது.

உடனடியாக மன்னார் பொலிஸார் குறித்த இளம் குடும்பஸ்தரை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில்குறித்த தினத்தன்று காலை அனுமதித்தனர். இந்த நிலையில் குறித்த நபர் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருக்கலாம் என உறவினர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர். இச்சம் பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எப்பாவல முஸ்லிம் பொதுமயானத்தில் நிர்மாணப் பணிகளுக்கு இடைக்காலத் தடை

(அநுராதபுரம் நிருபர்)

எப்பாவலவில் முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பொது மயானத்தில் எந்தவிதமான நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் என தலாவ பிரதேச சபையின் தலைவருக்கு வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மனோஜ் தல்கொடபிட்டியவினால் உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் எப்பாவல பகுதியிலுள்ள மூன்று கிராம மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பொது மயானத்துக்குள் வாகன தரிப்பிடம் ஒன்றினை அமைப்பதற்கு தலாவ பிரதேச சபையினால் எடுத்துள்ள தீர்மானத்தினை சவாலுக்குட்படுத்தி, அதனைச் செல்லுபடியற்றதாக்கக்கோரி அநுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இவ்வழக்கினை விசாரித்து இறுதித் தீர்ப்பு வழங்கும்வரை நிர்மாணப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படக் கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பொது மயானத்தில் முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்வதைவிட வேறு எந்தவொரு தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டாம் என பிரதிவாதியான பிரதேச சபையின் தலைவருக்கு மேலும் உத்தரவிட்ட அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி, பொது மயானத்தில் முஸ்லிம் மக்களது ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு எந்தவித இடையூறும் விளைவிக்கக்கூடாது எனவும் உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ள உத்தரவினை மீறி செயற்பட்டால் நீதிமன்றத்தினை அவமதித்ததாக கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிவாதியான பிரதேச சபையின் தலைவருக்கு மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காகவேண்டி எப்பாவல பகுதியை வசிப்பிடமாக கொண்ட நபர் ஒருவர் சட்டத்தரணி புத்திக்க லெவ்கே பண்டார ஊடாக அநுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேல் நீதிமன்ற நீதிபதி இவ்வுத்தரவினை பிறப்பித்துள்ளார்.

அநுராதபுர மாவட்டத்தின் எப்பாவல, எந்தகல மற்றும் கல்மடுவ உள்ளிட்ட கிராமங்களில் வாழ்ந்து மரணிக்கும் இஸ்லாமியர்களது ஜனாசாக்களை நல்லடக்கம் செய்வதற்காகவேண்டி, 1948 ஆம் ஆண்டிலிருந்து எப்பாவல எந்தகல பகுதியில் பொது மயானமொன்று முஸ்லிம் மக்களுக்கு என தனியாக சட்டபூர்வமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி புத்திக லெவ்கே பண்டார விடயங்களை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். இது போன்ற ஒரு சட்டபூர்வமான பொது மயானத்துக்குள் வாகன தரிப்பிடம் ஒன்றினை அமைப்பதற்கு வழக்கின் முதலாவது பிரதிவாதியான தலாவ பிரதேச சபையின் தலைவர் செயற்படுவதாக சட்டத்தரணி குற்றங்களை முன்வைத்ததுடன் அவை அனைத்தும் சட்டத்திற்கு முரணான விடயங்கள் என தெரிவித்தார்.

அச்செயற்பாட்டின்மூலம் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலங்களுக்கும் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள புதை குழிகளுக்கும் சேதம் விளைவிப்பதாகவும் குறித்த வழக்கின் முதலாவது பிரதிவாதியான பிரதேச சபையின் தலைவர் பொது மயானங்கள் கட்டளைச் சட்டத்தினை பிரகாரம் பாரிய குற்றத்தினை செய்துள்ளதாக சட்டத்தரணி மேலும் தெளிவுபடுத்தினார். மனுதாரர்கள் சார்பாக சட்டத்தரணி புத்திக லெவ்கே பண்டாரவும் பிரதிவாதி சார்பாக சட்டத்தரணி மஹேஷ் கொட்டுவெல்லவும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்ததுடன் இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இரத்தினபுரி மாநகர சபையும், இரத்தினபுரி பொலிஸ் நிலையமும் இணைந்து கடந்த முதலாம் திகதி இரத்தினபுரி நகரத்தில் வாழும் யாசகர்களை சுத்தம் செய்து அவர்களுக்கு உணவு, உடைகள் மற்றும் கொரோனா தடுப்பூசியும் வழங்கப்பட்டது. இதன்போது இரத்தினபுரி மாநகர சபை நகரபிதா டிரோன் அத்தநாயக்க மற்றும் இரத்தினபுரி பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (சிவா ஸ்ரீதரராவ்)

# பொருட்களின் விலையேற்றத்துக்கு கொவிட் தாக்கமே காரணமாகும்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கூறுகிறார்

(வவுனியா நிருபர்)

கொவிட் தாக்கமே சில பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணம். வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிராமிய பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்படும் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுடன் வவுனியாவில் நேற்று (03) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தாக்கம் தான் சில பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. கொவிட் தாக்கம் அபிவிருத்தியடைந்த நாடுகளிலேயே சவாலாக உள்ளது. ஆனால் நாங்கள் வளர்முக நாடு. இங்கு 75 வீதத்திற்கு மேல் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம் வரும் போது இது முழுமைபெறும். நிச்சயமாக கொவிட் தொற்றிலிருந்து மேலே வர முடியும். அதன்போது மக்கள் தற்போது எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

வரவிருக்கின்ற வரவு செலவுத்திட்டம் உட்பட அனைத்திலும் நிதி அமைச்சர் சில விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார். கிராம மட்டங்களில் இருந்து கிராமிய பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்குமே அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது. விவசாயம், மீன்பிடி, கால்நடை, சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாடு போன்ற விடயங்களுக்கே அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது. முன்னர் இருந்தது போல் கட்டுமானப் பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்படமாட்டாது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையிலேயே நிதி ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டத்தில் அமையும்.

மேலும், அதிபர், ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சினை மற்றும் அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் புறந்தள்ளவில்லை. அதில் நியாயப்பாடுகள் இருக்கின்றன. இருந்தபோதிலும் தற்போதைய இக்கட்டான நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்தநிலையில் இவர்களுடைய பிரச்சினையை அணுகுவது சவாலான விடயம். இருந்தாலும் அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. அந்தப் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படும்.



தற்போது அரசாங்கம் மீது குற்றம் சாட்டும் எதிர் கட்சியினரின் கடந்த நான்கரை வருடகால ஆட்சியில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அழித்தவர்கள். தற்போதைய பிரதமர் ஜனாதிபதியாகவும், தற்போதைய நிதி அமைச்சர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் இருந்த காலத்தில் பல அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு வசதிகள் இடம்பெற்றன. வடக்கு, கிழக்கு பெரும்பான்மையான மக்கள் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்திற்கு பெருமளவு ஆதரவு வழங்கினார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழ் தலைமைகள் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் எல்லாவற்றுக்கும் ஆதரவு வழங்கினார்கள். அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக விளங்கினார்கள். அப்போது வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி சார்ந்து என்ன முன்னேற்றமும் இல்லை. மக்களுக்கு இருந்த நீண்ட கால பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தும் எதுவும் நடைபெறவில்லை. எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை விமர்சிக்கிறார்கள். தடுப்பூசி கொண்டு வராதபோது அதனை விமர்சித்தார்கள். கொண்டு வந்து தடுப்பூசி வழங்கும்போது அதனை விமர்சிக்கிறார்கள். ஆகவே இவர்களது நோக்கம் தாங்கள் எப்படியாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்பதே. அரசாங்கம் நல்லது செய்தாலும் அதனை பிழையாக காட்டி பேசுகிறார்கள்.

இந்த நாட்டை கொடிய நோயிலிருந்து காப்பற்ற ஆலோசனை கேட்டோம். ஆனால் நல்ல விடயங்களை பிழை என சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எமது நாடு தடுப்பூசி ஏற்றுவதில் முன்னேற்றம் கண்டுள்ளது. பாடசாலை திறக்க வேண்டும் என அரசாங்கம் முயல்கிறது. ஆனால் இன்னும் 5 வருடத்திற்கும் பாடசாலை மூடலாம் என எதிர்க்கட்சி எண்ணுகிறது. ஆகவே கொவிட் தொற்றில் இருந்து நாடு மீண்ட பின் பல ஆக்கபூர்வமான விடயங்களை அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குரிய நீதி, நியாயம் கிடைக்க வேண்டும். அந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய உடனடி கருமங்களை நாம் செய்ய வேண்டும். மூன்று தலைமுறை பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப தீர்வு கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தோட்ட அதிகாரிகளின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுமானால் பெருந்தோட்ட தொழில்துறையிலிருந்து தற்காலிகமாக விலகுவோம்

## தோட்ட அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(எம்.கிருஸ்ணா, க.கிஷாந்தன்)

தோட்ட அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சந்தர்ப்பமொன்றை வழங்கவேண்டும். தோட்ட அதிகாரிகளின் கோரிக்கை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுமானால் பெருந்தோட்டத் தொழில்துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம்" - என்று தோட்ட அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நுவரெலியா ரதல்லயில் கடந்த முதலாம் திகதி (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ரவீந்திர சேனரத்ன இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி விடயம் தொடர்பில், எமது சம்மேளனத்தினால் அமைச்சருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்று பெருந்தோட்ட நிறுவனங்களை எடுத்துக் கொண்டால் முகாமையாளர்கள் 500 பேரும் உதவி முகாமையாளர் 1000க்கும் மேற்பட்டோர் தொழில் செய்கின்றோம். நாம் இல்லையென்றால் தேயிலைத்துறை வீழ்ச்சியடைந்து விடும். எனவே, எமது பிரச்சினைகள் தொடர்பில் செவிசாய்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பெருந்தோட்டத்துறையில் இருந்து தற்காலிகமாக




விலகுவோம். எமது பிரச்சினை தொடர்பில் பேச ஜனாதிபதி அனுமதி தரவேண்டும் என கோருகின்றோம்.

இன்று உரத்திற்கு பாரிய தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தேயிலை செடிகள் கடாக மாறிவிடும். இவ்வாறான குறைபாடுகள் காணப்படும் பொழுது எவ்வாறு தேயிலை தோட்டங்களை பாதுகாப்பது? எமக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்துடன் கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்தி தாருங்கள். எமக்கு முறையான உரங்களை வழங்காவிட்டால் வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் தோட்ட தொழிலாளர்களுக்கு தொழில் வழங்க முடியும். நாம் தொடந்து அடிபட்டு கொண்டு கை கால்கள் உடைந்த நிலையில் இருக்கவும் முடியாது.

தற்போதைய நிலைமை தொடர்ந்தால் தொழிலாளர்களுக்கு 3 நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கக்கூடியதாக இருக்கும். தேயிலை தொழிலுடன் நேரடியாகவும், முறைமுகமாகவும் சுமார் 20 இலட்சம் பேர் தொடர்புபட்டுள்ளனர். தோட்ட அதிகாரிகள்தான், தோட்டத் தொழிலாளர்களுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளனர். தற்போது முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. தோட்ட அதிகாரிகள் தாக்கப்படும் மூன்றாவது சம்பவமும் பதிவாகியுள்ளது. எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு இல்லையேல் கடும் நடவடிக்கையில் இறங்குவோம்." - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# நுவரெலியாவில் சீரற்ற காலநிலையால் வர்த்தக நிலையங்களுக்கு பாதிப்பு





(தலவாக்கலை நிருபர், செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி பெய்த கடும் மழை காரணமாக பிரதேசத்தின் பல பகுதிகளிலும் வெள்ளநீர் பெருக்கெடுத்ததோடு மண்சரிவு அபாயமும் பதிவாகியுள்ளது.

நுவரெலியா நகரின் பல இடங்களில் வெள்ளநீர், பிரதான வீதி வழியே பெருக்கெடுத்தோடியது. நுவரெலியா நகர பிரதான வீதி, நுவரெலியா லோசன் வீதி, நுவரெலியா பிரதான பஸ் தரிப்பு குறுக்கு நடைபாதை, தர்மபால சுற்று வட்டாரம், பழையகடை வீதி, சென்என்றூஸ் வீதி, நுவரெலியா கொல்ப் கிராமம், குதிரைப் பந்தயத்திடல் கிராமம், நுவரெலியா ஆவேலியா, மாகாஸ்தோட்டம், பொரலந்த உட்பட பல இடங்களில் வெள்ளநீர் பெருக்கெடுத்தது.

இதேவேளை, நுவரெலியா நகரை அண்டியுள்ள பல மரக்கறி தோட்டங்களும் நீரில் மூழ்கியதோடு நுவரெலியா - கண்டி வீதியில் பல இடங்களில் மண் சரிவுகளும் பதிவாகியுள்ளன. நுவரெலியா நகரிற்கு அருகிலுள்ள கிராமங்களின் வீதிகளில் மண் மேடுகள் சரிந்து விழுந்ததாலும் மழை நீர் நிரம்பியதாலும் பல மணி நேரம் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.எனவே, சீரற்ற காலநிலை நிலவி வருவதால் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு சாரதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா குதிரைப்பந்தயத் திடலில் தற்காலிக கொட்டில்களில் வாழ்ந்துவரும் மக்கள் இரவு தங்களது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்தனர். இதேவேளை நுவரெலியா பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள குறுக்கு நடை வீதி நேற்று முன்தினம் நுவரெலியா மாநகரசபை ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டது.

# கட்டுக்கலை தோட்ட ஆர்ப்பாட்டத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு நாளை வரை விளக்கமறியல்

(தலவாக்கலை நிருபர்)

மஸ்கெலியா பிளான்டேசன் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தில் தோட்ட உதவி அதிகாரி மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில், தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 9 சந்தேக நபர்களையும் நாளை 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கட்டுக்கலை தோட்டத்தில் கடந்த 28ஆம் திகதி தொழிலாளர்கள் சிலருக்கும் தோட்ட உதவி அதிகாரி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பில் முடிந்துள்ளது. இச்சம்பவத்தில் தோட்டத் தொழிலாளர்கள் சிலரால் தாக்கப்பட்டதாகக் கூறி தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவர் நுவரெலியா பொது வைத்தியசாலையிலும் தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக கூறி இரு பெண் தொழிலாளர்கள் லிந்துலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, தோட்ட உதவி அதிகாரி மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 9 சந்தேக நபர்களை (தொழிலாளர்களை) தலவாக்கலை பொலிஸார் கைது செய்து கடந்த 1ஆம் திகதி ஆஜர்படுத்தியபோது, நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக கூறி லிந்துலை வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த இரண்டு பெண் தொழிலாளர்களும் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியபோது அவர்களையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# சப்ரகமுவ ஆளுநர் தலைமையில் முதியோர் தின நிகழ்வுகள்

(சிவா ஸ்ரீதரராவ்)

ஒக்டோபர் 1ஆம் திகதி சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கிரியெல்ல மைத்ரி





முதியோர் இல்லத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் முதியோர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 30 முதியோர் இல்லங்கள் உள்ளன. இந்த முதியோர் இல்லங்கள் அனைத்தும் சப்ரகமுவ மாகாண சமூக சேவை திணைக்களத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஏ.எஸ்.ஜே.கொடல்லவத்த, கிரியெல்ல பிரதேச செயலாளர் சமரசேகர, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# மத்திய மாகாணத்தில் 30,812பேர் உயர்தரத்துக்கு தகுதி

(கினிகத்தேனை நிருபர்)

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு மத்திய மாகாணத்திலிருந்து தோற்றிய 41ஆயிரத்து 262 மாணவர்களில்' 30ஆயிரத்து 812 பேர் க.பொ.த உயர்தரத்துக்கு தெரிவாகியுள்ளனர். இது 74.67 வீதமாகும் என பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மத்திய மாகாணத்திலிருந்து மாவட்ட ரீதியாக தோற்றிய மாணவர்களில் கண்டி மாவட்டத்தில் 22ஆயிரத்து 23 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 7ஆயிரத்து 836 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 11ஆயிரத்து 403 பேரும் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

இவர்களில் கண்டி மாவட்டத்தில் 16ஆயிரத்து 923பேரும், மாத்தளை மாவட்டத்தில் 5ஆயிரத்து 590பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 8ஆயிரத்து 299பேரும் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் மாத்தளை மாவட்டம் 71.34 வீதமும், கண்டி மாவட்டம் 76.84 வீதமும், நுவரெலியா மாவட்டம் 72.78 என்ற மாவட்ட வீதமும் வளர்ச்சியை காட்டுகிறது.



கண்டி மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட கொவிட் தடுப்பூசி திட்டத்தின் கீழ், மொடர்னா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று(03) கண்டி ஈ.எல்.சேனாநாயக்க சிறுவர் நூலகத்தில் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(கண்டி நிருபர்)

# உக்காத குப்பைகளை அகற்ற பதுளை மாநகர சபை நடவடிக்கை

(ஹாலி-எல நிருபர்)

பதுளை மாநகர எல்லையில் பல தசாப்தங்களாக பெரும் பிரச்சினையாக இருந்த உக்காத குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கு நிரந்தரத் தீர்வை கண்டுபிடிக்க முடிந்துள்ளதாக பதுளை மாநகர சபை மேயர் பிரியந்த அமரசிறி கூறினார்.



பதுளை நகர எல்லையில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் நகரத்தில் உள்ள பொது விளையாட்டு மைதான வளாகத்திற்கு அருகில் கொட்டப்பட்டு வந்தது.

பதுளை நகரத்தில் குப்பைகளை அகற்ற அவ்வப்போது பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், நாளுக்கு நாள் குப்பை இருப்பு அதிகரித்து வருவதால் அவற்றை நடைமுறைபடுத்த முடியவில்லை. நகரசபை, ஏற்கனவே உக்கும் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியிருந்தாலும், அங்குள்ள மிகப்பெரிய பிரச்சினையாக இந்த உக்காத கழிவுகளை அகற்றுவதாகும். இந்த திட்டத்தின் கீழ், அண்மையில் புத்தளம் நகருக்கு முதல் குப்பை தொகை எடுத்துச் செல்லப்பட்டது.

# டியநிலை மேற்பிரிவு தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 166 வீடுகள் இராஜாங்க அமைச்சரினால் பயனாளிகளுக்கு கையளிக்க நடவடிக்கை

(தலவாக்கலை நிருபர்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இராகலை சூரியகாந்தி தோட்டப் பிரிவான டியநிலை மேற்பிரிவு தோட்டத்தில் கடந்த அரசாங்க காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட 166 வீடுகள் இன்று(04) திங்கட்கிழமை தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் உத்தியோகபூர்வமாக பயனாளிகளுக்கு கையளிக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் டியநிலை தோட்டத்தில் இந்திய நிதியுதவியுடன் யு.என்.எபிடாட் நிறுவனம் 166 வீடுகளின் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்திருந்தது. அதேவேளை, கடந்த 2019 இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தினால் இவ்வீடமைப்பு திட்டம் முழுமை பெறாது பயனாளிகளுக்கு கையளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. 166 வீடுகளைக் கொண்ட இந்த தனிவீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கான குடிநீர், பிரதான வீதி, உள்ளக வீதிகள் மற்றும் மின்சாரம் என உட்கட்டமைப்பு வசதிகள் முன்னெடுக்கப்படாமல் இருந்தன.

இதனையடுத்து, இத்தனி வீட்டுத் திட்டத்திற்குரிய வீடுகளின் குறைபாடாக காணப்பட்ட உட்கட்டமைப்பு பணிகள் தற்போதைய அரசாங்கத்தின் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அமைச்சினால்





நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இப்பணிகளை விரைவாக முன்னெடுக்க 26.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு இதில் பிரதான வீதிகளை செப்பனிட 5.1 மில்லியனும், உள்ளக வீதிகளை செப்பனிட 4.3மில்லியனும் ஒதுக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், குடிநீருக்கென 10.2 மில்லியனும், மின்சாரத்திற்கென 6.9 மில்லியனும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் பூர்த்தியாகியுள்ளன. இவ்வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு நீண்டகாலமாக பயனாளிகளுக்கு கையளிக்க முடியாத நிலையில் தெரிவின் அடிப்படையில் தமக்கென வழங்கப்பட்ட வீடுகளில் சிலர் வசிக்க ஆரம்பித்துவிட்டனர். இந்த நிலையில் விரைவாக உட்கட்டமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக வீடுகளை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே தற்போது நாடு ஓரளவு வழமைக்கு திரும்பிவரும் நிலையில், இவ்வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் பிரதமர் உள்ளிட்ட இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தின் இந்த தனிவீட்டு திட்டமானது இராகலை டியநிலை கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, மல்லியப்பு, சூரியகாந்தி தோட்டங்களில் கண்டறியப்பட்ட குடியிருப்புகள் இல்லாதவர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை கையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உறவுகளைபோல் அன்பு செலுத்திய தொழிலாளர்களை விட்டுப்பிரிய முடியாமல் கண்கலங்கிய தோட்ட அதிகாரி

(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்டங்களில் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களும் இடையே பல்வேறு கசப்பான சம்பவங்கள் அண்மைக்காலமாக பதிவாகி வருகின்றன. தோட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மீது தொழிலாளர்கள் தாக்குதல் நடத்துவதும் தொழிலாளர்கள் மீது தோட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தாக்குதல் நடத்துவதும் அதிகமாகி வருகின்ற நிலையில், தோட்ட அதிகாரி ஒருவர் இடமாற்றம் பெற்றுச் செல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாமல் கண்ணீர் சிந்திய தொழிலாளர்களும் அதேபோல தொழிலாளர்களை தன் உறவுகள் போல வழிநடத்தி அன்பு செலுத்திய அதிகாரி ஒருவர் அத்தொழிலாளர்களை விட்டுப் பிரிய மனம் இல்லாது கண்கலங்கிய சம்பவமொன்று ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை வட்டகொடை தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.



பல வருடங்களாக அங்கு சேவையாற்றிய தோட்ட அதிகாரி துல்சங்க ஜயதிலக்க, நேற்று முன்தினம் மட்டுக்கலை தோட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இடமாற்றம் பெற்ற அத்தோட்ட அதிகாரி தோட்டத்திலிருந்து செல்லும்போது அவர் சேவையாற்றிய வட்டகொடை கீழ்ப்பிரிவு, வட்டகொடை மேற்பிரிவு, யொக்ஸ்போட் ஆகிய தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தோட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் கண்ணீர் சிந்திய நிலையில் அவரை அங்கிருந்து வாகன பேரணியாக மட்டுக்கலை தோட்டம்வரைசென்று வழியனுப்பியுள்ளனர்.

துல்சங்க ஜயதிலக்க வட்டகொடை தோட்டத்தில் அதிகாரியாக இருந்தபோது தொழிலாளர்களுடன் மிகவும் அன்பாகவும் அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்துகொடுத்துள்ளார். வருடா வருடம் தொழிலாளர்களை சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களை மகிழ்வித்துள்ளார். மேலும், கொவிட் 19 கொரோனா தொற்றால் நாடு முடக்கப்பட்டபோது தொழிலாளர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை தொழிலாளர்களிடமிருந்து பட்டியலிட்டு அதனை பெற்றுக்கொடுத்துள்ளார்.

மேலும், வட்டகொடை தோட்டத்தை இலாபகரமாக தரமுயர்த்தியுமுள்ளார். தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை நாட்களையும் வழங்கி தொழிலாளர்களின் நலனில் கூடுதல் அக்கறை செலுத்தியுள்ளார். இவ்வாறான பல்வேறு உதவிகளை தானே முன்வந்து அவர் செய்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# மகாத்மா காந்தியின் ஜனன தின நிகழ்வு



மகாத்மா காந்தியின் 153 ஆவது ஜனன தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 10 மணிக்கு கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், வடக்கு மாகாண அவைத்தலைவர், யாழ் மாநகர முதல்வர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.



# ஆரியகுளம் அபிவிருத்தியில் மத அடையாளங்களை பிரதிபலிக்க ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது

## யாழ். முதல்வர் மணிவண்ணன் திட்டவட்டமாக அறிவிப்பு

ஆரியகுளம் அபிவிருத்தியில் எந்தவொரு மத சார்பு அடையாளங்களையும் உட்புகுத்தவில்லை. உட்புகுத்தப் போவதுமில்லை. நான் முதல்வராக இருக்கும் வரை குளத்தில் எந்தவொரு மதம் தொடர்பிலும் பிரதிபலிக்க இடமளிக்கப்படமாட்டாது என யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் மத்தியில் இந்து, பௌத்த பீடம் அமைப்பது தொடர்பில் ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பாக விளக்கமளிக்க, நேற்று (03) நடத்திய ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஊடகங்களுக்கும், சமூகவலைத்தள நண்பர்களுக்கும் நன்றிகள். செய்திகளில், தொடர்ச்சியாக என்னைப்பற்றி எழுதி எனது பெயரை மக்களின் மனங்களில் நிலைத்து நிற்க உதவியுள்ளீர்கள்.

பத்திரிகையாளர்களிடமும், சமூக வலைத்தள எழுத்தாளர்களிடமும் ஒன்றை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். உங்களுடைய எழுத்துகள் பிரதேச மக்களுடைய அபிவிருத்தியை பாதிக்காததாக இருக்க வேண்டும்.

என்னுடைய நற்பெயருக்கு களங்கம் விளைவித்தால் அதனை நான் கண்டுகொள்ளமாட்டேன். ஆனால், என்மேல் உள்ள காழ்ப்புணர்ச்சியில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய அபிவிருத்தியோடு



சம்பந்தப்படுத்தி எழுதாதீர்கள். மக்கள் நலன்சாராது என்னை அவதூறு செய்து மகிழ்ந்திருங்கள்.

ஆரியகுளம் புனரமைப்பு என்னாலே தயாரிக்கப்பட்ட திட்டம். அதில் என்ன உள்ளது என்பதை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளோம். ஆரியகுளம் அபிவிருத்தியில் எந்தவொரு மதசார்பு அடையாளங்களையும் உட்புகுத்தவில்லை. உட்புகுத்தப் போவதுமில்லை. நான் முதல்வராக இருக்கும் வரை குளத்தில் எந்தவொரு மதம் தொடர்பிலும் பிரதிபலிக்க இடமளிக்கப்படமாட்டாது.

இது தொடர்பில் மக்கள் அச்சப்பட வேண்டாம். மக்கள் அச்சப்படும் வகையில் போலியான தகவல்களை பரப்புவதை தவிர்க்குமாறு ஊடகம் மற்றும் சமூக வலைத்தள எழுத்தாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

விகாராதிபதியால் அனுப்பப்பட்ட கடிதத்தில் புத்தர் சிலை பற்றி எதுவும் கூறவில்லை. மத நல்லிணக்க மண்டபம் அமைப்பது பற்றியே கூறப்பட்டிருக்கிறது. மத நல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைக்கக்கோரிய, கடிதம் தொடர்பில் அடுத்த சபை அமர்வுக்கு கொண்டுவருமாறு ஆணையாளருக்கு கோரினேன். அடுத்த சபையில் இது தொடர்பில் ஆராயப்படும்.

ஆரியகுளம் மதசார்பற்றதாக இருக்கும். இந்த கடிதக் கோரிக்கைக்கு இணங்க வேண்டாம் என அடுத்த சபை அமர்விலே நான் தனிப்பட்ட ரீதியில் உறுப்பினர்களிடம் கோருவேன்.

இப்போது ஆரிய குளம் பகுதியில் முதலாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றன. முதலாம் கட்டமாக நடைபாதை மற்றும் குளத்தைச் சுற்றி இரும்பு வேலியடைத்தல் என்பன இடம்பெறும். இரண்டாம் கட்ட பணிகளுக்குரிய நிதிகளை நன்கொடையாளர்கள் தர முன்வந்தால் அபிவிருத்திப் பணிகள் தொடரும்.

இப்போது ஆரியகுளம் பற்றி முகநூலில் எழுதுபவர்கள் நாவற்குழியில் விகாரை கட்டப்பட்டபோது எங்கே சென்றார்கள் எனத் தெரியவில்லை. டிசம்பருக்கு பின்னர் நாங்கள் அதிகாரத்தில் இருக்கமாட்டோம். அப்போது வேறு ஒரு தரப்பு அதிகாரத்தில் இருந்து தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டால் அதனை சமூக ஆர்வலர்களே தடுக்க வேண்டும் என்றார்.

# கோவிற்குளத்தில் வாள்வெட்டுச் சம்பவம்: நால்வர் வைத்தியசாலையில் அனுமதி



வவுனியா கோவிற்குளம் 9 ஆம் ஒழுங்கையில், வீதியில் செல்பவர்களை வழிமறித்து இளைஞர் குழு ஒன்று நேற்று முன்தினம் நள்ளிரவு தாக்குதல் மேற்கொண்டதில் நால்வர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த வீதியில் நின்ற இளைஞர் குழுவினர் அவ்வீதியூடாக செல்பவர்களை வழிமறித்து வாள் மற்றும் கோடரியினாலும் தாக்கியதுடன் அவர்களின் வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர். அத்துடன் சில வீடுகளுக்குள் புகுந்தும் வீட்டிலிலுள்ளவர்கள் மீதும் தாக்குதலும் மேற்கொண்டுள்ளனர்.

இவ் வாள்வெட்டு தாக்குதலில் நால்வர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபனுக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு அவர் விரைந்த சமயத்தில் அவ்விடத்தில் நின்ற இளைஞர் குழுவினை அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் சகிதம் துரத்திச் சென்றபோதிலும் அவர்கள் அவ்விடத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை சிதம்பரபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







கிராமங்களுக்கான உள்கட்டுமானம், வாழ்வாதாரம், சூழலியம் மற்றும் கடலோரப் பாதுகாப்பு தொடர்பில் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 17 கிராமங்களுக்கான கள விஜயமொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மேற்கொண்டிருந்தார். பிரதேச ரீதியிலான குறைபாடுகள் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

(படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## தன நிதானய

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: X

வெற்றி இலக்கங்கள்: 10 25 30 48

திகதி: 02.10.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0573

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 0 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 50 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 163 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3721 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2563 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 62419 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 11807 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,323,400.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 80,724

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை

ரூ. 81,714,320.40

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

## கொவிசெத

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2838 சீட்டிழுப்பு திகதி: 02.10.2021

ஆங்கில எழுத்து: E

வெற்றி இலக்கங்கள்: 02 11 65 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 8 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 123 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 293 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7262 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4851 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 120104 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 22004 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 154,646

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை

ரூ. 6,101,400.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 60,866,884.80

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

தூரன செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்

## Mega Power மெகா பவர்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 0891

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 02.10.2021

ஆங்கில எழுத்து: W சுப்பர் இலக்கம்: 02 வெற்றி இலக்கங்கள்: 26 53 64 66

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 1 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 76 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 160 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4096 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2680 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 66799 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12242 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 144,827,237.20

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை

ரூ. 2,353,620.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

## மஹஜன சம்பத

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 4543 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 02.10.2021

வெற்றி எழுத்து: T வெற்றி இலக்கங்கள்: 4 0 7 5 5 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியீட்டியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 4 0 7 5 5 2 | ரூபா. 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | 0 7 5 5 2 | ரூபா. 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | 7 5 5 2 | ரூபா. 10,000/- | 82 |
| 4ஆம் பரிசு | 5 5 2 | ரூபா. 1,000/- | 865 |
| 5ஆம் பரிசு | 5 2 | ரூபா. 100/- | 8481 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா. 20/- | 84411 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியீட்டியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 4 0 7 5 5 | ரூபா. 10,000/- | 8 |
| 8ஆம் பரிசு | 4 0 7 5 | ரூபா. 1,000/- | 84 |
| 9ஆம் பரிசு | 4 0 7 | ரூபா. 100/- | 859 |
| 10ஆம் பரிசு | 4 0 | ரூபா. 50/- | 8378 |
| 11ஆம் பரிசு | T | ரூபா. 20/- | 33678 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 6,463,680.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,861,237.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

www.nlb.lk

## ஜாதிக சம்பத

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1140

திகதி: 02.10.2021

லக்னம்

வெற்றி இலக்கங்கள்: 7 7 5 0 7 2

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 01 பரிசு | 7 7 5 0 7 2 | ரூ. 1,000,000.00 | பரிசு 0 |
| 02 பரிசு | 7 5 0 7 2 | ரூ. 100,000.00 | பரிசுகள் 2 |
| 03 பரிசு | 5 0 7 2 | ரூ. 10,000.00 | பரிசுகள் 20 |
| 04 பரிசு | 0 7 2 | ரூ. 1,000.00 | பரிசுகள் 218 |
| 05 பரிசு | 7 2 | ரூ. 100.00 | பரிசுகள் 2111 |
| 06 பரிசு | 2 | ரூ. 20.00 | பரிசுகள் 21181 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 07 பரிசு | 7 7 5 0 7 | ரூ. 10,000.00 | பரிசுகள் 0 |
| 08 பரிசு | 7 7 5 0 | ரூ. 1,000.00 | பரிசுகள் 25 |
| 09 பரிசு | 7 7 5 | ரூ. 200.00 | பரிசுகள் 220 |
| 10 பரிசு | 7 5 | ரூ. 100.00 | பரிசுகள் 2162 |
| 11 பரிசு | லக்னம் | ரூ. 20.00 | பரிசுகள் 17573 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் 23 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 1,893,980.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,927,714.90

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# கல்முனையில் விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு தடுப்பூசியேற்றும் பணி இன்று முதல் ஆரம்பம்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இன்று முதல் (04) விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசியேற்றும் பணி முன்னெடுக்கப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகால நோய்களுடன் காணப்படும் விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு, சிறுவர் விசேட நிபுணர்கள் மற்றும் பொது நிபுணர்கள் உள்ள வைத்தியசாலைகளில், இத்தடுப்பூசி வழங்கப்படவுள்ளன.

இதற்காக விசேட தேவையுள்ள சிறுவர்கள் தங்களது கிளினிக் அட்டையுடன் அல்லது கிளினிக் செல்லாமல் வீட்டில் உள்ள சிறுவர்கள் அருகிலுள்ள ஆதார வைத்தியசாலைகளுக்குச் சென்று பதிவுசெய்து கொண்டு, வைத்திய நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை, 20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள்தோறும் ஏற்படுத்தப்பட்டுள்ள கொவிட் தடுப்பூசி ஏற்றும் மையங்களில் தொடர்ந்தும் கிரமமான முறையில் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் தொடர்புகொண்டு, தேவையான தகவல்களை பெற்றுக்கொண்டு, தடுப்பூசியை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை துரிதப்படுத்திக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரக் கடற்கரை சூழலை சுத்தப்படுத்தும் நோக்கில் சிரமதானப் பணி





(வி.சுகிர்தகுமார்)

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் எண்ணக்கருவிற்கமைவாக, கடல் சூழலை பேணிப்பாதுகாப்பதற்காக பல்வேறு அரச திணைக்களங்களால் நாடளாவிய ரீதியில் அவ்வப்போது பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரக் கடற்கரை பிரதேசம் நேற்று (03) தூய்மைப்படுத்தப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட தூய்மைப்படுத்தும் சிரமதான நிகழ்வில், 241ஆம் படைப்பிரிவின் இராணுவத்தினர், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பட்டதாரி பயிலுனர்கள், சமுர்த்தி பயனாளிகள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் சேவை மன்றத்தினர், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ராம் கராத்தே சங்க வீரர்கள், பிரதேச சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று இராணுவ முகாம் முன்பாக ஒன்று சேர்ந்த அனைவரும் பிரதேச செயலாளரால் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு மூன்று பகுதிகளில் சிரமதானத்தை மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதனடிப்படையில், அக்கரைப்பற்று நாகதம்பிரான் ஆலயம் தொடக்கம் சின்னமுகத்துவாரம் வரையிலான கடற்கரை பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டன. இதன்போது தேங்கிக்கிடந்த பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப்பொருட்களை அகற்றும் பணியும் முகத்துவாரத்தில் சூழ்ந்திருந்த பற்றைகளை அகற்றும் பணியும் நடைபெற்றது.

# மட்டு. வெல்லாவெளி வாய்க்கால் பகுதி ஒன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவகிரி நகர் 38 ஆம் கிராமத்தின் வயற் பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் (02) இரவு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அக்கிராமத்தைச் சேர்ந்த 55 வயதுடைய 7 பிள்ளைகளின் தந்தையான அமரசிங்கம் சந்தரலிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது, வயலுக்குச் செல்வதாக தெரிவித்துவிட்டுச் சென்ற குறித்த நபர் நேற்று முன்தினம் வரை வீடு திரும்பாதவிடத்து உறவினர்கள் தேடியுள்ளனர். இந்நிலையில் அப்பகுதியில் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் வயல் பகுதியில் அமைந்துள்ள வாய்க்காலில் ஒரு உடல் கிடப்பதாக தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததோடு, உறவினர்கள் உடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர். இந்நிலையில் களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கமைய வெல்லாவெளி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்குடாவில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் ஏற்பாட்டில் கல்குடா தொகுதியிலுள்ள வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

கிண்ணையடி, சுங்கான்கேணி, கும்புறுமூலை, விநாயகபுரம், புதுக்குடியிருப்பு, கல்மடு ஆகிய கிராமங்களில் வசிக்கும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் அனுசரணையில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது வறிய மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் கல்வி உபகரணங்கள் அடங்கலான கல்வி உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் மட்டக்களப்பு கழக நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.சேகர், அகில இலங்கைக்கான அங்கத்துவ பொறுப்பாளர் அ.வாசுதன் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# மட்டு. திஹிலிவெட்டை காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையமொன்று முற்றுகை

## மூவர் கைது : கோடா, கசிப்பு மீட்பு



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு திஹிலிவெட்டை வாவிக்கு அப்பால் உள்ள காட்டுப் பிரதேசத்தில் இயங்கிவந்த பாரிய கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை நேற்று (03) அதிகாலை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கிருந்த மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஒரு இலட்சத்து 65 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, நான்கு கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 4 இலட்சத்து 70 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் சில பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் கசிப்பினை வேறுபகுதிகளுக்கு எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்பட்ட தோணியொன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மற்றும் பொருட்களுடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பீ.எஸ்.பீ. பண்டார தெரிவித்தார்.

# துறைநீலாவணை வைத்தியசாலை விடுதி புனரமைப்பிற்கு பொதுமக்கள் கோரிக்கை



(துறைநீலாவணை நிருபர்)

கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையினை அடையாளப்படுத்துகின்ற துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலைக்கு உரித்துடைய பழைய விடுதியானது கவனிப்பார் அற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ளதாக பொது அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த பல வருடங்களுக்கு முன்பதாக வைத்தியசாலை நிர்வாகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த குறித்த விடுதியானது வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் தரப்படுத்தல்களின் பிற்பாடு கைவிடப்பட்டிருந்ததாகவும் சுமார் இருபது வருடங்களுக்கு முன்பதாக குறித்த விடுதி எதுவிதமான சேதங்களும் இல்லாத நிலையில் காணப்பட்ட நிலையில் இடைநடுவே பராமரிப்புகள் இல்லாது கைவிடப்பட்டமையால் குறித்த விடுதியானது சிதைவடைந்ததாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்டிடம் சிதைவடையாத நிலையில் குறித்த விடுதியின் மேற் கூரையானது மழை ஒழுக்கு காரணமாக சிதைவடைந்து அவற்றிலுள்ள ஓடுகள் கீழே விழுந்து தினமும் சேதமடைந்து வருவதாகவும் இது தொடர்பாக கிழக்கு மாகாண மற்றும் மட்டு. மாவட்ட சுகாதாரத் துறைசார் அதிகாரிகள் குறித்த விடுதியினை புனரமைத்து வைத்தியசாலையின் பாவனைக்கு கையளிக்க வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

# சம்மாந்துறையில் களியோடை ஆற்றங்கரையில் புல்வெட்டச் சென்றவரைக் காணவில்லை

## முதலைக்கு இரையாகி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் களியோடை ஆற்றங்கரையில் காணாமல் போயுள்ளதுடன் இவர் முதலைக்கு இரையாகி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான கைப்பிள்ளை என்று அழைக்கப்படும் 56 வயதுடைய நபரே நேற்று முன்தினம் காணாமல் போயுள்ள நிலையில், இவர் முதலைக்கு இரையாகி உயிரிழந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

தான் வளர்க்கும் மாடுகளுக்கு புல் வெட்டுவதற்காக நிந்தவூர் களியோடை ஆற்றங்கரை பக்கம் இவர் சென்றுள்ளார். இவ்வாறு சென்றவர் மீண்டும் வரவில்லை என்பதை அறிந்த உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றபோது அவர் புல் வெட்டுவதற்காக பயன்படுத்திய கத்தி மற்றும் செருப்பு என்பன களியோடை ஆற்றங்கரையில் காணப்பட்டுள்ளதுடன், குறித்த நபரை காணவில்லை என்றும் இவரை முதலை பிடித்து சென்றிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுவதுடன் இவரை தேடும் பணிகளும் கைவிடப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலையில் தீயிட்டு தற்கொலை செய்ய முயற்சித்த தாயை காப்பாற்றச்சென்ற மகனும் காயங்களுடன் வைத்தியசாலையில்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக தீயிட்டு தற்கொலைசெய்ய முயற்சித்த தாயை, காப்பாற்றச் சென்ற மகன் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் தாயும், மகனும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (02) இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தீயிட்டு தற்கொலை செய்ய முயற்சித்தவர் திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் வசித்து வருபவரும் திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவருமான பெண் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான டபிள்யூ.ஏ.தமயந்தி வீரதுங்க (48வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, மூன்று பிள்ளைகளின் தாயாரான இவர் தனது மகளுடைய மோட்டார் சைக்கிளை விற்பனைசெய்து விட்டு வீட்டுக்கு வந்ததாகவும் இதனையடுத்து, கணவன் மோட்டார் சைக்கிளை கேட்டபோது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் இதனையடுத்து கணவர் வீட்டை விட்டு செல்வதாக கூறிவிட்டு வெளியேறியதை அடுத்து மனைவி தனக்கு தானே தீயிட்டு கொண்டுள்ளார்.

இதனையடுத்து இவரது மகனான 17 வயதுடைய டபிள்யூ.எம். உதித்த குமார என்பவர் தாயாரை காப்பாற்றச் சென்றபோது அவருக்கும் தீப்பற்றியதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த இருவரும் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில், சிவில் பாதுகாப்பு படையில் கடமையாற்றும் பெண்ணின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பிலான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா தொற்றில் உயிரிழந்தோருக்கு நாவலடியில் விசேட துஆப் பிரார்த்தனை





(கல்குடா நிருபர்)

கொரோனாவினால் உயிரிழந்தவர்களுக்காகவும், கொரோனா நோயில் இருந்து உலக மக்களை பாதுகாக்கும் நோக்கிலும் இமாம் ஜஃபர் ஸாதிக் பணிமனையின் ஏற்பாட்டில் கத்தமுல் குர்ஆன் நிகழ்வும், விஷேட பிரார்த்தனையும் மற்றும் உணவு வழங்கும் நிகழ்வும் ஓட்டமாவடி நாவலடியில் இடம்பெற்றது.

கல்குடா இமாம் ஜஃபர் ஸாதிக் பணிமனையின் ஏற்பாட்டில் கொரோனாவினால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களுக்கான ஆத்ம சாந்தி வேண்டியும், கொரோனா நோயிலிருந்து உலக மக்களை பாதுகாக்கும் நோக்கிலும், ஜனாதிபதி, பிரதமர், முப்படையினர், சுகாதார துறையினருக்கு ஆசி வேண்டியும் விஷேட பிரார்த்தனைகளை இமாம் ஜஃபர் ஸாதிக் பணிமனையின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எல்.ரி.ஏ.ஹலீம் நிகழ்த்தினார்.

இதன்போது கத்தமுல் குர்ஆன் நிகழ்வும், விஷேட பிரார்த்தனை நிகழ்வில் சுகாதார விதிமுறைகளை பேணி மக்கள் கலந்துகொண்டதுடன், கலந்துகொண்டோருக்கு சமைத்த உணவும் வழங்கப்பட்டது.



நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தின் கீழ், 'நாட்டின் செழுமை மிக்க 100 நகரங்கள் அபிவிருத்தி' எனும் வேலைத்திட்டத்தின், வந்தாறுமூலை கிராமத்தினை அபிவிருத்திசெய்து அழகுபடுத்தும் வேலைத்திட்டம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

# கந்தளாய் வான்எல விகாரகல கிராமத்தில் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்



(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் வான்எல விகாரகல கிராமத்தில் மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (02) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில அத்துகோரல தலைமையில் விகாரகல விகாரையில் நடைபெற்றது.

நீண்டகாலமாக தாம் பயிர் செய்துவந்த இடங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முற்படுகின்ற சந்தர்ப்பத்தில் சில அரச நிறுவனங்கள் மூலம் தமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக இதன்போது விவசாயிகள் தெரிவித்ததுடன் இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்குமாறு இதன்போது உரிய அதிகாரிகளிடம் வேண்டிக்கொண்டனர்.

மக்களது உண்மையான பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு சாதகமான தீர்வுகளை வழங்க முடியுமா என்பதனை ஆராய்ந்து சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் முற்படுவதாகவும் பிரதேச மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றுக்கு எவ்வாறு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய ஒவ்வொரு பிரதேசத்திலும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யக்கூடிய உணவு உற்பத்தி இறக்குமதியை தவிர்த்துக்கொள்ள முடியும்.

இதன் அடிப்படையில் மாவட்டத்தில் பயிர்செய்ய முடியுமான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவை பொருத்தமான முறையில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு பயிர்ச்செய்கை செய்வதற்கான ஏற்பாடுகள் உரிய முறைப்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஒரு குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அவை தொடர்பான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு கிரமமான முறையில் அவற்றுக்கு எவ்வாறு தீர்வுகளை வழங்கமுடியும் என்பது தொடர்பில் ஆராயப்படும் என்றும் இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி, திணைக்கள தலைவர்கள் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் தனியாருக்குரிய காணியில் கிறவல் மண் அகழ்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்







(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட புணானை மேற்கு அணைக்கட்டு பகுதியில் உள்ள ஆறு நபர்களுக்குரிய காணியில் கிறவல் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு பாரிய குழி தோண்டி கிறவல் மண் அகழப்பட்டு வருவதாக எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'மட்டக்களப்பு மண், ராஜபக்ஷாக்களின் கூடாரமா' என்ற பதாதைகளுடன் சிறுவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

'அரச அதிகாரிகளே கனிய வளத்தை சுரண்டுவதற்கு துணை போவது ஏன்? ராஜபக்ஷாக்களின் பெயர்களால் மண் சுரண்டல், எமது வளத்தை சூரையாடாதே. பிரதேச செயலாளரே விவசாய நிலங்களில் தோண்டப்பட்டு பெரிய அளவிலான மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது குறித்த காணியில் பயன்தரும் மாம்பழம், மாதுளை மரம், மரவள்ளி போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளது' என சுமார் 30 பேர், கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த காணியில் பயிர்ச்செய்கை பண்ணுவதற்காக கிறவல், மண் அகழ்வினை தடுக்கவும்.

குறித்த காணிக்கு உரிமை கோரி ஆறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுமார் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அதிகளவான பகுதியில் கிரவல் முன்பு கடமையாற்றிய பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததுடன், தற்போது அரச காணியில் எவ்வாறு பயிர்செய்ய முடியும் என பிரதேச செயலாளர் கேட்பதாக மக்கள் கவலை தெரிவித்தனர். இதேவேளை, இக்காணிக்கான உரிமம் கோரி 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விண்ணப்பம் செய்துள்ளனர்.

சந்திவெளியில் உள்ள தனி நபர் ஒருவருக்கு கிரவல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கிறவல் அகழ்விற்கு எதிராக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளரை வினவியபோது, குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# பிரபல எழுத்தாளர் ஜுனைதா ஷெரீப் காலமானார்

(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரியும் பிரபல எழுத்தாளருமான அல்ஹாஜ் ஜுனைதா ஷெரீப் (கே.எம்.எம்.ஷரீப்) நேற்று (3) அதிகாலை காலமானார்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளராகவும் கிழக்கு மாகாண பிரதி தபால் மா அதிபராகவும் பல்வேறு அமைச்சுகளில் செயலாளராகவும் நிர்வாகத்துறையில் பணியாற்றிய ஜூனைதா செரீப், மரணமாகும்போது 80 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

'சாணைக்கூறை' என்ற இவரது சமூக நாவல், சர்வதேச ரீதியில் புகழ் பெற்றதாகும். 10க்கும் மேற்பட்ட நாவல்களையும் 100க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் 200க்கும் அதிகமான வானொலி நாடகங்களையும் எழுதிய இவர், இலங்கையில் அதிக தடவைகள் தேசிய



சாகித்திய மண்டல விருதுபெற்ற முஸ்லிம் இலக்கியவாதியாவார்.

இவரது நாடகங்கள் வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாவல் இலக்கியத்துறைக்கு வழங்கப்படும் உலக விருதான 'கரிகாலன்' விருதையும் இந்தியாவில் வைத்து இவர் பெற்றிருந்தார்.


## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: G

வெற்றி இலக்கங்கள்: 16 28 36 61

திகதி: 03.10.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0574

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 33 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 105 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 2453 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 1709 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 42134 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 7872 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 1,851,960.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 54,309

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 81,816,109.20

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk



## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2839 சீட்டிழுப்பு திகதி: 03.10.2021

ஆங்கில எழுத்து: V

வெற்றி இலக்கங்கள்: 11 21 55 80

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 100 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 195 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5047 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3257 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 82704 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 14975 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 106,280

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 3,183,560.00

ரூ. 61,138,927.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்



## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4544

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி:03.10.2021

வெற்றி எழுத்து: Z

வெற்றி இலக்கங்கள்: 7 1 8 6 1 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ | 7 | 1 | 8 | 6 | 1 | 1 | ரூபா 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | ■ | ■ | 1 | 8 | 6 | 1 | 1 | ரூபா 100,000/- | 5 |
| 3ஆம் பரிசு | ■ | ■ | ■ | 8 | 6 | 1 | 1 | ரூபா 10,000/- | 52 |
| 4ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | 6 | 1 | 1 | ரூபா 1,000/- | 529 |
| 5ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | 1 | 1 | ரூபா 100/- | 5284 |
| 6ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 1 | ரூபா 20/- | 52715 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ | 7 | 1 | 8 | 6 | 1 | ■ | ரூபா 10,000/- | 6 |
| 8ஆம் பரிசு | ■ | 7 | 1 | 8 | 6 | ■ | ■ | ரூபா 1,000/- | 55 |
| 9ஆம் பரிசு | ■ | 7 | 1 | 8 | ■ | ■ | ■ | ரூபா 100/- | 529 |
| 10ஆம் பரிசு | ■ | 7 | 1 | ■ | ■ | ■ | ■ | ரூபா 50/- | 5285 |
| 11ஆம் பரிசு | Z | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா 20/- | 21096 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 3,985,770.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,766,408.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk



## Mega POWER — மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0892

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 03.10.2021

ஆங்கில எழுத்து: D சுப்பர் இலக்கம்: 05 வெற்றி இலக்கங்கள்: 02 44 76 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 36 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 121 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 2774 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 1813 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 45945 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 8245 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 144,996,175.60

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,730,220.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD



## சுபிரி வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி: 03.10.2021 சீட்டிழுப்பு இலக்கம்: 1615

சுப்பர் இலக்கம்: 11

வெற்றி இலக்கங்கள்: 05 08 15 40

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 3,702,973.60 | 1 |
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 0 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 5 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 50 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 193 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 2551 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 2229 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 31878 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 7662 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,071,213.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

# வாகரை கட்டுமுறிவு கிராம அபிவிருத்திக்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(மட்டக்களப்பு நிருபர்)

உற்பத்தி கிராமமாக தெரிவுசெய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை கட்டுமுறிவு கிராம மேம்பாட்டிற்கென 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் 'நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின்' கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலும் உற்பத்தி கிராமங்களை உருவாக்கி பல குடும்பங்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. அதனடிப்படையில் அண்மையில் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட கட்டுமுறிவு கிராம சேவகர் பிரிவானது உளுந்து, கச்சான் மற்றும் கௌப்பி உற்பத்தி கிராமமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



குறித்த உற்பத்தி கிராம மேம்பாட்டிற்கென 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கட்டுமுறிவு கிராம சேவகர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 60 பயனாளிகள் நேரடியாக உள்வாங்கப்பட்டு, 40 பயனாளிகளுக்கு 82 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் பம்பி மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள், 10 பயனாளிகளுக்கு தோல் நீக்கம் செய்யப்பட்ட உளுந்து பொதியிடுவதற்கான உபகரணங்கள், மேலும் 10 பயனாளிகளுக்கு உடைக்கப்பட்ட உளுந்து பொதியிடல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் நாங்கள் எதிர்பார்ப்பது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்கண்டு மாதம் 30ஆயிரம் தொடக்கம் 50ஆயிரம் வரையிலான வருமானம் பெறுவதனை உறுதிப்படுத்துவதாகும். இதற்கமைய இப்பயனாளிகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும், நெறிப்படுத்துவதற்குமென பிரதேச செயலாளர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர் போன்றோரை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் உற்பத்தி கிராமத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் கச்சானை தொடர்ச்சியாக ஒரே விலையில் கொள்வனவு செய்வதற்கென Cylon Munchi Biscuit Company உடனான ஒப்பந்தத்தினை லங்கா வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ளது.

தொடர்ச்சியாக இது போன்ற உள்ளூர் கிராமிய பொருளாதாரத்தினை மேப்படுத்துதல் அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் நாங்கள் முழுமூச்சாக செயற்படுவோம் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை என இதன்போது கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் தம்பலகாமம் - முள்ளியடி பகுதியைச் சேர்ந்த துரைராசா செல்வகுமார் (40 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, குறித்த நபர் மூன்று திருமணம் செய்துகொண்டுள்ளதாகவும் தற்போது மூன்றாவது மனைவியுடன் வாழ்ந்து வரும் நிலையில், இருவருக்குமிடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டதாகவும் இதனையடுத்து அவர் தானாகவே கடந்த வியாழக்கிழமை இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும் குறித்த மரணம் தொடர்பில் சந்தேகம் கொண்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை குறித்த சடலத்தை பி.சி.ஆர் பரிசோதனை செய்து அறிக்கை கிடைத்தவுடன் பிரேத பரிசோதனைகளை முன்னெடுக்க உள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். இவரது மரணம் தொடர்பில் விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் சாதித்த ஹாரீஸ் எம்.பி; மூன்றே நாட்களில் தரமுயர்த்துவதாக கூறிய ஆளுங்கட்சியினர் எங்கே?

## முன்னாள் எம்.பி.சிறீநேசன் கேள்வி

(ந.குகதர்சன்)

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் ஹாரிஸ் எம்.பி எதிர்க்கட்சியில் இருந்து சாதிக்கின்றார் என்றால் ஆளுங்கட்சியின் பங்காளிகளாக இருந்துகொண்டு உங்களால் செய்யமுடியாது என்றால் நீங்கள் ஆளுங்கட்சியில் எந்த இடத்தில் வைத்துப் பார்க்கப்படுகின்றீர்கள். ஆட்சிக்குவந்து மூன்றே நாட்களில் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தருவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால், இன்று எத்தனை நாட்கள் போய்விட்டன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தோம், ஹாரிஸ் எம்.பி ஆளுங்கட்சியின் பிரதியமைச்சராக இருந்து முட்டுக்கட்டை போட்டார். ஆனால், இப்போது அவர் எதிர்க்கட்சியில் தான் இருக்கின்றார். ஆனால், ஆளுங்கட்சியில் இருக்கும் நம் தம்பிமார் இன்னும் அவரைச் சொல்லி மக்களைப் பேய்க்காட்டக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலக தரமுயர்த்தல் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தல் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றுமுழுதாகச் செயற்பட்டது. ஆனாலும் அது நடக்காமல் போனது உண்மைதானே தவிர, அதற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கவில்லை.

அப்படிப் பார்த்தால் ஆட்சிக்கு வந்து மூன்றே நாட்களில் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தருவேன் என்று தம்பி வியாழேந்திரன் சொல்லியிருந்தார். ஆனால், இன்று எத்தனை நாட்கள் போய்விட்டன. நாங்களாவது அன்று எதிர்க்கட்சியில் இருந்து ஏதோவொருவகையில் உடன்பாட்டுடன் சில விடயங்களைச் செய்திருந்தோம். கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்த முடியாமற் போனதென்பது துரதிர்ஷ்டம்.

ஆனால், ஆளுங்கட்சியில் பங்காளிகளாக இருக்கின்றோம், நாங்கள் சொல்லுகின்ற விடயங்களை எல்லாம் அரசாங்கத்திலுள்ளவர்கள் செய்வார்கள், அரசியற் கைதிகளையெல்லாம் விடுதலை செய்து தருவோம் என்றெல்லாம் வாய்க்கிழிய பேசிய வார்த்தைகளை மக்கள் மறக்கவில்லை. எனவே நாங்கள் தடையாக இருந்தோம் என மக்களிடம் பொய்களைச் சொல்லி பொய்கள் மூலமாக அரசியல் செய்வது நிலைக்காது. கடந்த காலங்களில் இந்தப் பொய்களுக்குரிய பாடம் புகட்டப்பட்டது. ஆனால், தேர்தல் மோசடி மூலமாக வெற்றி பெற்றனர். நாங்கள் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் அன்றும் இன்றும் என்றும் எப்போதும் உறுதியாக இருக்கின்றோம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் இப்போதும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரிஸ் தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அன்று நல்லாட்சியில் ஹாரிஸ், ஆளுந்தரப்பில் ஒரு பிரதியமைச்சராக இருந்தவர்.

அவர்களின் கட்சியிலுள்ளவர்களெல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்கள். அதனால் தடைகள் பலவற்றைப் போட்டிருக்கலாம். ஆனால், இப்போது ஆளுங்கட்சியின் பங்காளிகளாக மட்டக்களப்பில் இருவர் இருக்கின்றார்கள். ஹாரிஸ் எம்.பி இப்போது எதிரணியில் இருக்கின்றார்.

நல்லாட்சியில் ஆளுந்தரப்பில் இருந்து அவர் முட்டுக்கட்டை போட்டார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் இன்று அரசாங்கத்தின் பக்கமாக இருவர் இருக்கின்றீர்கள்.

ஹாரிஸ் எம்.பி இப்போதும் தடையாக இருக்கின்றார் என்று நீங்கள் சொன்னால் ஹாரிஸின் அரசியல் என்ன, உங்களின் அரசியல் என்ன? எனவே, இவையெல்லாம் மக்களின் காதுகளில் பூச்சுத்துகின்ற கருத்துகளாகவே இருக்க முடியும் என்று தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் ஊடாடும் வள கற்றல் நிலையம் திறந்துவைப்பு







(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைந்து Street Child Sri lanka நிறுவனம் செயற்படுத்தும் ஊடாடும் வள கற்றல் மையம் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்றது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள இந்த ஒலிப்பதிவுக் கூடம் மற்றும் கற்றல் மையம் என்பது இலங்கை சுவிட்சர்லாந்து தூதரகத்தால் நிதி வழங்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில் இலங்கையில் பாடசாலை மூடல்கள் நீடிப்பதால், மாணவர்களுக்கான ஊடாடும் கற்றல் பொருட்கள் உருவாக்க ஒரு ஊடாடும் வள கற்றல் மையத்தின் வடிவமைப்பு உட்பட 3 முக்கிய நிலைகளை இந்த திட்டம் கொண்டுள்ளது. இரண்டாவது கட்டம் மாணவர்களுக்கு வீட்டிலேயே கற்றலைத் தொடரத் தேவையான ஒரு வீட்டு அடிப்படையிலான கற்றல் திட்டத்தை உள்ளடக்கும்.

இத்திட்டத்தின் இறுதிக் கட்டம் பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது வகுப்பறையில் உள்ளடக்கிய மற்றும் ஊடாடும் கற்றலை இணைக்கும் ஆசிரியர்களின் திறனை வலுப்படுத்தும் முகமாக இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன், கிராமிய வளர்ச்சித் துறையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் என்.தனஞ்ஜெயன் மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குகேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசனத் திட்டத்தில் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கிவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன திட்டத்தினூடாக தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைகள் வழங்கும் நிகழ்வு ஆயித்தியமலை கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.





இதன்போது கரவெட்டி விவசாய போதனாசிரியர் பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 விவசாயிகளுக்கு நிலக்கடலை, பயறு, உழுந்து, கௌப்பி போன்ற விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

கரவெட்டி விவசாய போதனாசிரியர் கே.லிங்கேஸ்வரன் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா, வலயம் மத்தி உதவி விவசாயப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி மற்றும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு இவ் உதவியினை வழங்கிவைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 இலட்சம் ரூபா பெறுமதியான விதைகள் முதற்கட்டமாக தற்போது வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தெரிவித்தார்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதான 64 பேருக்கும் எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட 64 பேரையும் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர், களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்றங்களின் மேலதிக நீதவானும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றபதில் நீதவானுமாகிய கருப்பையா ஜீவராணி காணொளி மூலமாக உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேரை கைதுசெய்தனர்.

அதேவேளை, சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைதுசெய்தனர்.

இரு வெவ்வேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வெவ்வேறு இரு வழக்கு இலக்கங்களை கொண்ட 64 பேரும் நாட்டிலுள்ள பொலநறுவை, அநுராதபுரம், கேகாலை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த காரணத்தால் நீதிமன்றிற்கு அழைத்து வர முடியாததையடுத்து அவர்களை காணொளி மூலமாக எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்வரை ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கக்கூடாது

## வடக்கு - கிழக்கு பாதிக்கப்பட்ட மக்களும் சிவில் அமைப்பும் ஒன்றிணைந்து கோரிக்கை

(கனகராசா சரவணன்)

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுடைய காணி அபகரிப்பு, காணாமல்போனவர்களின் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை, மணல் அகழ்வு மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு தீர்வு வழங்கப்படாமல் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை, இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கக்கூடாது என வடக்கு - கிழக்கு பாதிக்கப்பட்ட மக்களும் சிவில் அமைப்பும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு ஊடக மன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மற்றும் சிவில் அமைப்புகளைச் சேர்ந்த குழுவினர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலிருந்து அம்பாறை, பொத்துவில் வரையிலான பிரதேசங்களில் மணல் அகழ்வு இடம்பெற்றுவருவதுடன், காணாமல்போன எமது உறவுகளுக்கு இதுவரை அரசு தீர்வு பெற்றுத்தரவில்லை.

யுத்தம் முடிந்து புனர்வாழ்வு முகாமில் வைத்து இராணுவத்திடம் எமது உறவுகளை கையளித்தோம். அவர்களுக்கு என்ன நடந்துள்ளது எனத் தெரியவில்லை. அவ்வாறே திருகோணமலை சம்பூரில் காலம்காலமாக நாங்கள் பயிர் மற்றும் வேளாண்மை செய்துவந்த காணிகளை கடற்படையினர் மற்றும் அனல் மின்நிலையத்துக்கு என ஆக்கிரமித்துள்ளனர்.

எமது உறவுகள் கடந்த காலத்தில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட இராணுவத்தை நீதிமன்றில் அடையாளம் காண்பித்தோம். ஆனால், வழக்கையே தள்ளுபடி செய்தனர். தொடர்ந்து சிறைகளில் எமது உறவுகள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். அந்த அரசியல் கைதிகள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

மட்டக்களப்பு மயிலத்தனை மடு கால்நடைகளின் மேய்ச்சல் தரையை தற்போது கிழக்கு மாகாண ஆளுநரின் அனுசரணையுடன் சிங்கள மக்கள் ஆக்கிரமிக்கின்றனர். இவ்வாறு தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. எனவே யுத்தம் முடிந்து சமாதானம் என்று தெரிவிக்கின்றனர். ஆனால், எமது மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, எமது மக்களின் அடிப்படை பிரச்சினைகளை இந்த அரசாங்கம் தீர்த்து வைக்காத நிலையில், இந்த வரிச்சலுகையான ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்கக் கூடாது என ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

# கிண்ணியா - பைசல் நகர்ப் பகுதியில் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய தந்தை விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பைசல் நகர்ப் பகுதியில் 13 வயது சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், சிறுமியின் தந்தையை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் சுபாஷினி சித்திரவேல் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கிண்ணியா பைசல் நகர்ப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தாய் வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாக வேலைக்கு சென்றுள்ள நிலையில், சிறுமியின் தாயின் தங்கையின் வீட்டில் வசித்து வந்தபோது சிறுமியின் தந்தை மதுபோதையில் வருகை தந்து சிறுமியை அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் கிண்ணியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 13 வயதுடைய சிறுமி தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதோடு, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அமைச்சுசார் ஆலோசனை கூட்டங்கள் இவ்வாரம் நாடாளுமன்றில் இடம்பெறும்

நாடாளுமன்றத்தில், இந்தவாரம் இரண்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களும் இரண்டு நாடாளுமன்ற விசேட குழுக்களும் கூடவுள்ளன.

அதற்கமைய, இன்றையதினம் தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் நாளை மறுதினம் 06 ஆம் திகதி நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் கூடவுள்ளன.

இதேவேளை, தற்போதுள்ள அமைச்சுகளின் கீழ் உள்வாங்கப் படாத அரச நிறுவனங்களால் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான நாடாளுமன்ற விசேட குழு எதிர்வரும் 05ஆம் திகதி கூடவுள்ளதுடன் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழு எதிர்வரும் 07 மற்றும் 08 ஆகிய இரு தினங்களிலும் கூடவுள்ளது.

மேலும், நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு நாளை 05 ஆம் திகதி கூடவுள்ளது. உரிய சுகாதார ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, தேவையான அதிகாரிகளை இணையம் ஊடாக இணைத்துக் கொண்டு அடுத்தவாரம் பல நாடாளுமன்றக் குழுக்கள் கூடவுள்ளன.

## இரும்புக் கம்பியால் தாக்கி பதுளையில் ஒருவர் கொலை

**பதுளை, லிதமுல்ல பகுதியில் வீடொன்றினுள் பலவந்தமாக நுழைந்த குழு ஒன்று அங்கிருந்த நபர் ஒருவரை அடித்து கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**இரும்புக் கம்பியால் குறித்த நபர் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.**

**தாக்குதலில் பலத்தகாயமடைந்த நபரை பதுளை வைத்தியசாலையில் அனுமதித்த சந்தர்ப்பத்தில் உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.**

**பதுளை, லிதமுல்ல பகுதியை சேர்ந்த 65 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**



**நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கல் எபல்டனுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் எட்மிரல் சரத் வீரசேகரவுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. இருநாட்டு உறவை வலுப்படுத்துதல் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

## இலங்கை - இந்திய சுற்றுலாத்துறையை மேம்படுத்த துணைத் தூதரகத்தினால் விசேட கலந்துரையாடல்





இந்தியப் பயணிகளுக்காக இலங்கை சுற்றுலாவை மீண்டும் தொடங்கிய பின்னர், இந்தியப் பயண முகவர் சங்கம் மற்றும் இந்தியப் பயண முகவர் கூட்டமைப்பின் சுற்றுலா செயற்பாட்டுத் தூதுக்குழு கலந்துரையாடலை சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகராலயம் நடத்தியது. இந்தத் தூதுக்குழுக்கள் முறையே செப்டெம்பர் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் இலங்கையின் துணை உயர் ஸ்தானிகராலயத்தில் நடத்தப்பட்டன.

தொற்றுநோய்க் கட்டுப்பாடுகளின் காரணமாக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இலங்கையை மீண்டும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் விருப்பமான பயண இடமாக ஊக்குவிப்பதும், இலங்கை சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்தும் அவர்களின் கருத்துகளைக் கேட்பதுமே இந்த சந்திப்பின் நோக்கங்களாக இருந்தன.

இதன்போது உரையாற்றிய துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி. வெங்கடேஸ்வரன், புதிய இயல்பான சூழ்நிலையில் இலங்கை சுற்றுலாவுக்கான முன்னேற்ற வழியை பிரதிநிதிகளுக்கு தெரியப் படுத்தியதுடன், இலங்கைக்கு அதிகமான இந்தியப் பயணிகளை ஈர்ப்பதற்காக, இராமாயண யாத்திரை, முருகன் பாதை மற்றும் பஞ்சலிங்கம் பாதை ஆகியவற்றை ஊக்குவிக்க இலங்கையின் தயார்நிலையை வலியுறுத்தினார்.

சென்னை, பெங்களூர், திருச்சி, மதுரை, கொச்சி, திருவனந்தபுரம் மற்றும் ஹைதராபாத் உள்ளிட்ட தென்னிந்திய இடங்களுக்கு கொழும்பில் இருந்து விமான இணைப்பை முன்னிலைப்படுத்தி, சென்னையிலுள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விற்பனை முகாமையாளர் நீலின பத்திரன, ஒரு விரிவான விளக்கக்காட்சியை வழங்கினார். மேலும், அவர் தேசிய விமானத்தின், ஒன்றை கொள்வனவு செய்து ஒன்றை இலவசமாகப் பெறல் சலுகையை வலியுறுத்தியதுடன், இது 2021 டிசம்பர் 31 வரை பயணிகளுக்குக் கிடைக்கும்.

இலங்கை சுற்றுலாவை இந்தியாவுக்குத் திறப்பது குறித்து பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக துணை உயர் ஸ்தானிகராலயம் மேற்கொண்ட முயற்சிகளை இந்திய சுற்றுலா முகவர் சங்கத்தின் தூதுக்குழுவின் தலைவரும், இந்திய தெற்கு பிராந்தியத்தின் சுற்றுலா முகவர் சங்கத்தின் செயலாளருமான கருணாகரன் பாராட்டினார். மேலும், அவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விமான அட்டவணையில் மாற்றங்கள் மற்றும் பயணிகளுக்கு வழங்கப்படும் சலுகைளை மேம்படுத்துதல் உள்ளிட்ட சில காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் பரிந்துரைத்தார்.


இந்திய பயண முகவர் கூட்டமைப்பின் தெற்கு பிராந்தியத்தின் தலைவர் அருளரசன், இந்திய பயண மற்றும் சுற்றுலா நடத்துனர்களுக்கான பயண இடமாக இலங்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், குறிப்பாக எம்.ஐ.சி.இ. சுற்றுலா மற்றும் திருமண இலக்குப் பயணிகளுக்கான வரிகளைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார்

கேள்வி பதில் நிகழ்ச்சியின் போது, இலங்கைக்கு வந்தவுடன் பயணிகள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள், தற்போதைய விசா நடைமுறை மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் போன்ற பல கேள்விகள் பங்கேற்பாளர்களால் எழுப்பப்பட்டன. இந்தக் கேள்விகளுக்கு துணை உயர் ஸ்தானிகர் மற்றும் குழுவினர் வெற்றிகரமாகப் பதிலளித்தனர். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஆகியவை புதிய சாதாரண சூழ்நிலையில் இலங்கை சுற்றுலாத்துறையை மேம்படுத்த உதவும் சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். பிரதிநிதிகளால் எழுப்பப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்டு, இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பயண அனுபவத்தை உறுதி செய்வதற்காக, இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் மற்றும் ஏனைய வரிசை நிறுவனங்களுக்கான தனது பரிந்துரைகளை வழங்க துணை உயர் ஸ்தானிகர் ஒப்புக்கொண்டார்.

ஒவ்வொரு தொடர்பிலும், இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயத்தின் மூன்றாம் செயலாளர் (வர்த்தகம்) டிலங்கா ஹெட்டியாராச்சி, இந்திய பயண முகவர் சங்கம் மற்றும் இந்திய பயண முகவர் கூட்டமைப்பு ஆகிய இரு அமைப்புகளாலும் கொடுக்கப்பட்ட உத்வேகத்தைப் பாராட்டியதுடன், இந்திய பயணிகளின் விருப்பமான சுற்றுலாத் தலமாக இலங்கையை ஊக்குவிக்கவும் திட்டமிடவும் தமது ஆதரவை நாடினார்.

இந்திய பயண முகவர் சங்கம் மற்றும் இந்திய பயண முகவர் கூட்டமைப்பு ஆகியன இந்தியாவில் உள்ள முக்கிய சுற்றுலா மற்றும் சுற்றுலா இயக்க சங்கங்கள் ஆவதுடன், அவை கணிசமான உறுப்பினர்களை நாடளாவிய ரீதியாகக் கொண்டுள்ள அதேவேளை, இந்தியாவின் சுற்றுலாத் துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் திறன் அபிவிருத்தி குறித்து பிலிப்பைன்ஸ் - இலங்கை அதிகாரிகள் ஆராய்வு





இலங்கையின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சை உள்ளடக்கிய பாலின முக்கியத்துவத்திற்கான தொழில்நுட்ப மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டத்தை வெளிநாட்டலுவல்கள் திணைக்களம் - பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பேரவை செப்டெம்பர் 16ஆம் திகதி ஆரம்பமாகியது.

இரு நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவுகளின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இலங்கையுடன் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக, வெளிநாட்டலுவல்கள் திணைக்களம் - பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பேரவை நடத்தும் இந்த பயிற்சித் திட்டமானது மூன்று திட்டங்களில் ஒன்றாகும். இந்தப் பயிற்சித் திட்டமானது, பாலின பிரதான ஓட்டம், பாலினப் பகுப்பாய்வு மற்றும் பாலினப் பொறுப்பு வரவு - செலவுத் திட்டம் ஆகிய அடிப்படை ஜீ.ஏ.டி. கருத்துகள் பற்றிய கற்றல் அமர்வை உள்ளடக்கியது.

தனது வரவேற்புரையில், வெளிநாட்டலுவல்கள் திணைக்களம் - பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பேரவையின் மாற்றுத் தலைவர் திருமதி. லில்லிபெத் டெபெரா, பாலின சமத்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் சமூகத்தில் பாலின முக்கியத்துவத்தின் அவசியம் குறித்து பேசினார்.

ஒட்டுமொத்த பாலின ஓட்டத்தை முன்னேற்றுவதற்காக நாடுகளின் முன்னுரிமை அடிப்படையில், ஐந்து நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவது குறித்து அவர் விரிவாக விவரித்ததுடன், இந்தத் திட்டத்திற்கான தூதரகத்தின் ஒத்துழைப்பு முயற்சிகள் மற்றும் வரிசை அமைச்சுகளின் தொடர்ச்சியான ஆதரவைப் பாராட்டினார்.

தனது தொடக்க உரையில், நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் சிறப்புமிக்க விசாக்கள், இலங்கையின் அபிவிருத்திக்கான தேசிய கொள்கை அமைப்பான அரசின் நீல அச்சு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான பார்வை ஆகியவற்றை செயற்படுத்துவதன் மூலம் பாலின சமத்துவத்தை அடைவதற்கான நாட்டின் அர்ப்பணிப்பை தூதுவர் ஷோபினி குணசேகர விவரித்தார். 1931 ஆம் ஆண்டில் உலகளாவிய வயதுவந்தோர் வாக்குரிமையை வழங்கிய முதல் நாடு இலங்கை என மேற்கோள் காட்டி, இலங்கை ஏற்கனவே மேற்கொண்ட முன்னேற்றத்தையும் அவர் குறிப்பிட்டதுடன், சிறிமாவோ பண்டாரநாயக்கவை 1960 இல் இலங்கையின் பிரதமராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் உலகின் முதலாவது பெண் பிரதமரை வழிநடத்தியமையில் இலங்கை முன்னணியில் இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரமளித்தல் ஆகிய துறைகளில் அதிகரித்த பிரதிநிதித்துவங்களின் மூலம் பெண்களுக்கான சிறந்த உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், நாம் மனநிறைவுடன் இருக்க முடியாது. ஆனால், மேலும் சாதிக்க முயற்சிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் ஒரு ஆழமான புரிதல் உணர்வை அளிக்கும் ஒரு விரிவான பயிற்சித் திட்டத்தைத் தொடங்கிய வெளிநாட்டலுவல்கள் திணைக்களம் - பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பேரவைக்கு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. குமாரி ஜயசேகர நன்றிகளைத் தெரிவித்தார்.

மூன்று அமர்வுகளாக நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், இலங்கையின் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் ஏனைய வரிசை அமைச்சுகளிலிருந்து 30 பங்கேற்பாளர்கள் பங்கேற்பதுடன், இது எதிர்வரும் 11ஆம் திகதி நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாய ஒத்துழைப்பு தொடர்பில் பிரான்ஸில் இராஜாங்க அமைச்சர் அருந்திக நேரடி ஆய்வு



தென்னை, கித்துல் மற்றும் பனை சாகுபடி ஊக்குவிப்பு, சம்பந்தப்பட்ட தொழில்துறைத் தயாரிப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, கடந்த செப்டெம்பர் 04 முதல் 10 வரையான காலப்பகுதியில் பிரான்ஸுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார். இந்த விஜயத்தின் போது, இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்த பல நிகழ்ச்சிகளில் இராஜாங்க அமைச்சர் பங்கேற்றார்.

இந்த விஜயத்தின் போது, அபிவிருத்திக்கான விவசாய ஆராய்ச்சி சர்வதேச ஒத்துழைப்பு மையமான சி.ஐ.ஆர்.ஏ.டியின் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி எலிசபெத் கிளேவரியை இராஜாங்க அமைச்சர் சந்தித்தார்.

தென்னை, கித்துல், இறப்பர் மற்றும் இதர வெப்பமண்டலப் பயிர்கள் சம்பந்தப்பட்ட பொருட்களின் பெறுமதிச் சங்கிலிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதன் விவசாய மயமாற்றல் மற்றும் இலங்கையுடன் சி.ஐ.ஆர்.ஏ.டி. எவ்வாறு இணைந்து செயற்பட முடியும் என்பன குறித்து பயனுள்ள கலந்துரையாடலொன்று நடைபெற்றது. சி.ஐ.ஆர்.ஏ.டி. மற்றும் இலங்கையில் உள்ள தென்னை, பனை, ரப்பர் மற்றும் தேயிலை உள்ளிட்ட விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே கலந்துரையாடலொன்று மெய்நிகர் தளத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

பிரெஞ்சு விவசாய ஆராய்ச்சி மற்றும் ஒத்துழைப்பு அமைப்பான சி.ஐ.ஆர்.ஏ.டி., வெப்பமண்டல மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளின் நிலையான அபிவிருத்திக்காக பணியாற்றுகின்றது.

பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் அதன் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் இடையிலான நீண்டகால உறவை தூதுவர் ஹிரிம்புரேகம பாராட்டினார். முந்தைய ஆராய்ச்சி ஒத்துழைப்புகளில் சி.ஐ.ஆர்.ஏ.டி. அளித்த ஆதரவை தூதுவர் மேலும் பாராட்டினார். இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் வகையில் இலங்கை விவசாயத் துறையை மாற்றுவதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகளை சி.ஐ.ஆர்.ஏ.டி. யின் தலைமை நிறைவேற்று அதிகாரி பாராட்டினார்.

சி.ஐ.ஆர்.ஏ.டியின் பொது விவகாரங்கள் தலைவர் திருமதி. எமிலி கிளாண்டர், உற்பத்தி அமைப்புகள் செயற்றிறன் பணிப்பாளர் பிரான்சுவா கோட் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் மற்றும் சி.ஏ.பி, ஐரோப்பிய மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் மற்றும் பிரெஞ்சு விவசாய அமைச்சரின் ஆலோசகர் சில்வைன் மேஸ்ட்ராச்சி ஆகியோருடனான சந்திப்பு தூதுவர் ஹிரிம்புரேகம மற்றும் இரு தரப்பு அதிகாரிகளின் பங்கேற்புடன் கடந்செப்டெம்பர் 09ஆந் திகதி நடைபெற்றது.

இயற்கை / உயிரியல் உரங்கள், பெறுமதி சேர்த்தல் மற்றும் விவசாய சுற்றுலா குறித்த இலங்கையின் நோக்கை அமைச்சர் விளக்கினார். உணவு மற்றும் தயாரிப்பு விரயத்தை குறைத்தல், விவசாயமயமாக்கல் மாற்றம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பரஸ்பரம் ஆர்வமுள்ள பகுதிகள் குறித்த கருத்துகளை அதிகாரிகள் மேலும் பரிமாறிக்கொண்டனர்.

## குற்றம் தவிர்

Police Roundup

### கொலை – காத்தான்குடி

காத்தான்குடியில் விக்கெட்டினால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (02) உயிரிழந்துள்ளார். கணவன், மனைவிக்கிடையில் கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி வாய்த்தர்க்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இதனை அவதானித்த மனைவியின் சகோதரன் தனது மைத்துனரை விக்கெட்டினால் தாக்கியுள்ளார். கடும் காயங்களுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரே உயிரிழந்துள்ளார்.இவ்வாறு உயிரிழந்தவர் காத்தான்குடி 03 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரென பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபர் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் கைது

### - யக்கல

யக்கல பொலிஸார் நேற்றுமுன்தினம் (02) நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின்போது 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவரை கைதுசெய்துள்ளனர். ரணால பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

### - மிரிஹான

மிரிஹான பகுதியில் நுகேகொடை குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 05 கிராம் 470 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை கைதுசெய்துள்ளனர். தலவத்துகொடயைச் சேர்ந்த 37 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேக நபரின் வீட்டில் பொலிஸாரினால் நடத்தப்பட்ட சோதனையின்போது தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### - பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேஸ்லைன் மாவத்தையில் 06 கிராம் 740 மில்லி கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் தெமட்டகொடையைச் சேர்ந்த 43 வயதான நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

### - களுத்துறை வடக்கு

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலபடவத்த பகுதியில் பொலிஸார் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 10 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். களுத்துறையைச் சேர்ந்த 30 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரென பொலிஸார் தெரிவித்தனர்.

### - வத்தளை

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தலையில் நேற்றுமுன்தினம் பொலிஸார் நடத்திய திடீர் தேடுதல் நடவடிக்கையில் 06 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளையைச் சேர்ந்த 34 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார். சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### வாள்களுடன் நபர் கைது – யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாயில் தடைசெய்யப்பட்ட வாள்கள் இரண்டை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் வாக்குமூலமும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

### நீரில் மூழ்கி காணாமல்போன சம்பவம் - பூண்டுலோயா

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூண்டுலோயா ஆற்றில் வெவஹேன பாலத்துக்கருகில் குளித்துக்கொண்டிருந்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் காணாமல் போயுள்ளார். இவ்வாறு காணாமல்போனவர் கும்பல்ஒலுவ பகுதியைச் சேர்ந்த 35 வயதான நபரென பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவரை தேடுவதற்காக பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். பொதுமக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்த பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வீதி விபத்து – அம்பலாங்கொடை

அம்பலாங்கொடை பட்டபொல பகுதியில் லொறியொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்குநேர் மோதியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அம்பலாங்கொடையைச் சேர்ந்த 80 வயதான ஒருவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# சுற்றுலாப் பயணிகள் 12,700 பேர் செப்டெம்பரில் நாட்டுக்கு வருகை



நாட்டுக்கு கடந்த செப்டெம்பர் மாதத்தில் 12 ஆயிரத்து 700 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தே அதிக எண்ணிக்கையிலானோர் வருகைதந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 37 ஆயிரத்து 77 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆயிரத்து 682 பேரும் பெப்ரவரி மாதம் மூவாயிரத்து 366 பேரும் மார்ச் மாதம் 4 ஆயிரத்து 581 பேரும் வருகை தந்துள்ளனர். மேலும், ஏப்ரலில் 4 ஆயிரத்து 168 பேரும் மே மாதம் ஆயிரத்து 497 பேரும் ஜூன் மாதம் ஆயிரத்து 614 பேரும் வருகைதந்துள்ளதாக பதிவாகியுள்ளது. அத்துடன் ஜூலையில் 2 ஆயிரத்து 429 பேரும் ஓகஸ்டில் 5 ஆயிரத்து 40 பேரும் வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் வாரங்களில் நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும் என அமைச்சின் உயர் அதிகாரியொருவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொவிட் - 19 தொற்றுப்பரவல் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் பிரதான வருமானமீட்டும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுவதால் அதனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மஞ்சள் கடத்திய மூவர் குருநகரில் கைதாகினர்



## 1,334 கிலோகிராம் மஞ்சள் கடற்படையினரால் மீட்பு



படகின் மூலம் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட ஆயிரத்து 334 கிலோ கிராம் மஞ்சள் தொகையை யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வைத்து கடற்படையினர் மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின்பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் (02) விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான முறையில் படகொன்று வருவதை அவதானித்துள்ளனர். அதன் பின்னர் படகை முற்றுகையிட்டு சோதனை நடத்தியதில் மஞ்சள் அடங்கிய மூடைகள் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து படகில் பயணித்த சந்தேக நபர்கள் மூவரையும் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28 முதல் 45 வயதானவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர். மேலும், சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

நாட்டின் கடற்பரப்பில், கடற்படையினரால் கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி மற்றும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிகளில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது 4 ஆயிரத்து 940 கிலோகிராம் மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.



இலங்கை இராணுவத்தின் 72 ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு மயூராபதி அம்மன் தேவஸ்தானம், கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசல், பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயம் ஆகியவற்றில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இராணுவத்தளபதி ஷவேந்திர சில்வா உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் இந்த வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் கதையாடல் நிகழ்வு ஆரம்பம்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் - 04 நிகழ்வு இன்று (04) முதல் எதிர்வரும் 07 ஆம் திகதிவரை தினமும் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இன்றையதினம் பேராசிரியர் அ.மங்கை (தமிழ்நாடு, இந்தியா) 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு' எனும் தலைப்பிலும், நாளை செவ்வாய்க்கிழமை பா.வை.ஜெயபாலன் (லண்டன்) 'நாடகத்துறையில் மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் மகாஜனாக் கல்லூரியின் பங்கு' எனும் தலைப்பிலும் நாளை மறுதினம் புதன்கிழமை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நாடகத்துறை தலைவர் கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ், 'அரங்கு வேரைப்பலப்படுத்தலும் உலகுடன் கலத்தலும்' எனும் தலைப்பிலும் உரைநிகழ்த்தவுள்ளனர். மறுநாள் வியாழக்கிழமை புதுவைப் பல்கலைக்கழகம் நிறுவுனர் கருஞ்சுழி முனைவர் வ.ஆறுமுகம் (தமிழ்நாடு, இந்தியா) 'நடிகர்களுக்கு அனுமதி இல்லை' என்ற தலைப்பிலும் நாடக அரங்க ஆக்க அனுபவங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் உரைநிகழ்த்தவுள்ளார். நிகழ்வின் ஏற்புரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 - கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் சபாநாயகர் பங்கேற்பு



பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தின் இறுதி அமர்வில் அந்தச் சங்க ஆசிய பிராந்தியத்தின் பிரதிநிதியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த 30 ஆம் திகதி பங்கேற்றார். இதன்போது நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் உடனிருந்தார்.

மெய்நிகர் முறையில் மூன்று நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த செப்டெம்பர் 28 ஆம் திகதி ஆரம்பமானது. செயற்குழுவில் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் பொதுநலவாயத்தின் 9 பிராந்தியங்களான ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, பிரித்தானிய தீவுகள் மற்றும் மத்திய தரைக்கடல், கனடா, கரீபியன், அமெரிக்கா மற்றும் அட்லாண்டிக், இந்தியா, பசுபிக் மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய பிராந்தியங்களின் பிரதிநிதிகள் அடங்குவர்.

அதற்கமைய, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கடந்த 29 ஆம் திகதி திட்டமிடல் மற்றும் மீளாய்வுத் துணைக்குழுவின் கூட்டத்தில் மெய்நிகர் முறையின் ஊடாகப் பங்கேற்றார். இங்கு துணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட முந்தைய தீர்மானங்களை பொதுநலவாய தலைமைச் செயலகம் செயல்படுத்துவது தொடர்பான விடயங்களை குழு உறுப்பினர்கள் ஆராய்ந்தனர்.

நல்லாட்சியை ஊக்குவிப்பதற்கும் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காண்பதற்குமான பொதுநலவாய நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்தும் நோக்கத்தில் 'ஆண்டுக்கான பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர் விருது' வழங்குவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பொதுநலவாய நாடாளுமன்றச் சங்க முன்னாள் உறுப்பினர்களின் அமைப்பை (CPA Alumni) ஸ்தாபிக்கும் விரிவான திட்ட முன்மொழிவு துணைக்குழுவின் பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்டது. பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச் செயலாளரின் விளக்கத்தைத் தொடர்ந்து, அனுபவம்மிக்க வழிகாட்டிகளின் வழிகாட்டுதல்களால் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவுவதன் பெறுமதியை எடுத்துக்காட்டி பொதுநலவாய முன்னாள் உறுப்பினர்களின் அமைப்பை ஸ்தாபிப்பதற்கான அனுமதியை துணைக்குழு வழங்கியது.

இந்தக் கலந்துரையாடல்களை அடுத்து மூன்று நாட்கள் மெய்நிகராக இடம்பெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் (CPA) செயற்குழுக் கூட்டம் நிறைவடைந்தது. அதற்கமைய செயற்குழுவின் 2022 ஆம் ஆண்டுக்கான மத்திய ஆண்டுக்கான கூட்டம் இந்திய அசாம் கிளையினால் நடத்தப்படும். மேலும் 65ஆவது பொதுநலவாய நாடாளுமன்ற மாநாடு (CPA) கனடா ஹலிபாக்ஸில் 2022 ஆகஸ்ட் 20 முதல் 26 வரை இடம்பெறவுள்ளது.

# தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் வெற்றிடங்களை நிரப்ப நாடாளுமன்ற பேரவை அனுமதி

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவியில் தற்பொழுது காணப்படும் வெற்றிடம் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்கு சிபாரிசுகளைக் கோருவற்கு நாடாளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய சட்டத்தரணிகள் சங்கம், பதிப்பாளர்கள் சங்கம், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், ஏனைய சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து சிபாரிசுகளைக் கோருவதற்கு நாடாளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அண்மையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், இணையம் மூலம் நடைபெற்ற நாடாளுமன்றப் பேரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிபாரிசுகளைக் கோருவது தொடர்பில் வாராந்த மற்றும் நாளாந்த பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கும் சிபாரிசுகளை மேற்கொள்ள இரண்டு வார கால அவசாகத்தை வழங்குவதற்கும் நாடாளுமன்றப் பேரவையில் தீர்மானிக்கப்பட்டது.

# பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழப்பு

(ஜூட் சமந்த)

புத்தளத்தில் நேற்றுமுன்தினம் (02) இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அநுராதபுர பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய ஆனமடுவ பகுதியைச் சேர்ந்த சசி கயஷான் என்ற உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடமை நிறைவடைந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு திரும்பும்வேளையில் எதிரே வந்த வேன் ஒன்றுடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய வேனின் சாரதி தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் எனக் கூறி வீட்டுக்குள் புகுந்து கொள்ளை:

## உறவினர் உள்ளிட்ட மூவர் பொலிஸாரால் கைது

(ஜூட் சமந்த)

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் எனக் குறிப்பிட்டு வீடொன்றுக்குள் புகுந்து பணம், நகைகளை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் மூவரை ஆராச்சிகட்டுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஆராச்சிகட்டுவ, மனாவேரியவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் வீட்டாரின் உறவினர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீட்டுக்குள் நள்ளிரவு 12 மணியளவில் கொள்ளையர்கள் நுழைந்துள்ளனர். அவ்வேளையில், அங்கு 20 வயதுடைய பெண்ணொருவரும் அவருடைய குழந்தையும் இருந்துள்ளனர். தம்மை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் எனக் குறிப்பிட்டு சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது பெண்ணின் கைப்பையிலிருந்த 13 ஆயிரம் ரூபா பணமும் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் மதுபோதையில் இருந்ததாக குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் அளித்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கொள்ளையிட்ட பணமும் நகையும் போதைப்பொருள் கொள்வனவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிகட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய ஆமை



(ஜூட் சமந்த)

மாரவில கடற்கரைப் பகுதியில் ஆமையொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. ஆமையின் உடலை பரிசோதனைகளுக்காக நிக்கவெரட்டிய வனஜீவராசிகள் திணைக்களத்திடம் அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்குள்ளானதையடுத்து புத்தளம் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் வரை 111 ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாக புத்தளம் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மேல் மாகாணத்தில் பொலிஸாரால் விசேட தேடுதல் நடவடிக்கை

## 1,156 பேர் கைது

மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் (02) பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையில் ஆயிரத்து 156 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாகாணம் முழுவதும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் 531 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட நபர்களில் 54 பேர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# நான்கு மாகாணங்களில் மழை பெய்யும் சாத்தியம்

நாட்டின் மேல், சப்ரகமுவ, வடக்கு, வடமேற்கு ஆகிய மாகாணங்களில் இன்று (04) மழைபெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேலும், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழைபெய்யலாம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் மாலைவேளையில் அல்லது இரவில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

# கிழக்கின் அரசியல் விடிவெள்ளி மர்ஹூம் ரிஸ்வி சின்னலெவ்வை



எஸ்.எம்.அறூஸ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஹமட் ரிஸ்வி சின்னலெவ்வை மறைந்து, 20 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் (2021.10.02) அனுஷ்டிக்கப்பட்டது.

இளம் வயதிலேயே முஸ்லிம் மக்களின் எதிர்கால நலன்மீது அதிக அக்கறை கொண்டிருந்த ரிஸ்வி சின்னலெவ்வையின் இழப்பு இந்நாட்டு முஸ்லிம்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அரசியல் குடும்பமொன்றில் 1958 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07ஆம் திகதி சாய்ந்தமருதில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய பாடசாலையிலும் உயர்கல்வியை குருத்தலாவ சென்.தோமஸ் கல்லூரியிலும் கற்ற பின்னர் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் கற்று பொறியியலாளரானார்.

ரிஸ்வி அட்டாளைச்சேனையில் பிரபலம் மிக்க அரசியல் குடும்பமொன்றில் திருமணம் செய்து கொண்டார். முன்னாள் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜலால்தீனின் சகோதரியின் மகளையே திருமணம் செய்தார். அவருக்கு ஒரு ஆணும், ஒரு பெண்ணும் உள்ளனர்.

இவரின் கல்வி வாழ்க்கை அரசியல் சிறப்பம்சம் பெற்று விளங்கியது. இவரது 26 வயதிலேயே நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்புக் கிட்டியது. 1985ஆம் ஆண்டு மட்டக்களப்பின் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினரான பரீத் மீராலெப்பை காலமானதும் ஐக்கிய தேசியக் கட்சி ரிஸ்வி சின்னலெப்பையை எம்.பி.யாக நியமித்தது.

சாய்ந்தமருதில் பிறந்து அட்டாளைச் சேனையில் திருமணம் முடித்து மட்டக்களப்பில் நாடாளுமன்ற உறுப்பினரான பாக்கியம் ரிஸ்விக்குக் கிடைத்ததுடன், ரிஸ்விக்கு அட்டாளைச்சேனை மக்கள் அமோக வரவேற்பு அளித்தனர். 1989ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இவர் மூன்றாவது தலைமுறை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையையும், சாதனையையும் பெற்றார். இது இலங்கை முஸ்லிம்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். சின்னலெவ்வை, லத்திப் சின்னலெவ்வை, ரிஸ்வி சின்னலெவ்வை என தடம் பதித்தார்கள்.

தன்னுடைய மூன்று வருட நாடாளுமன்ற அரசியலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் கல்வி, கலாசார, சமூக அபிவிருத்திப் பணிகளில் கூடிய கரிசனை காட்டினார். மட்டக்களப்பில் அதுவரை கிடைக்கப்பெறாத பல பிரதேச சபைகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததோடு, புதிய குடியேற்றக் கிராமங்களையும் உருவாக்கினார்.

தன்னுடைய அரசியல் நடவடிக்கைகள் சமூகத்தின் மீதுள்ள அக்கறை, சேவை மனப்பாங்கு தேசிய மட்டத்தில் முன்னடுக்கப்பட வேண்டும் என நினைத்த ரிஸ்வி சின்னலெவ்வை, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியோடு இணைந்து செயலாற்றினார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தேசியத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டதுடன், தேசிய முஸ்லிம் இயக்கமொன்றில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் தலைவரானது இதுதான் முதற்தடவையாகும்.

தனக்குக் கிடைத்த தலைமைப் பதவியின் மூலம் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஊடாக எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்று பல திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தினார். அத்தோடு, முஸ்லிம் லீக்கை நாடு பூராகவும் கட்டியெழுப்புவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக மட்டக்களப்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இருந்தாலும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவினால் வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ரிஸ்வி, மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளால் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு உட்பட்ட சந்தர்ப்பத்தில் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜீத்துடன் இணைந்து அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டார்.

தனக்குக் கிடைத்த பதவிகள் மூலம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ், முஸ்லிம்களுக்கு பெரும் சேவையாற்றிய ரிஸ்வி, தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்வதற்கு அரும் பாடுபட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும் அம்பாறை மாவட்டத்திற்கும் தன்னால் இயன்ற பணிகளைச் செய்தார். இதன் காரணமாக அம்பாறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ரிஸ்வி சின்னலெவ்வை அம்பாறை மாவட்டத்தில் வந்து போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும் என அழைத்தனர்.

ஆதரவாளர்களின் அழைப்பினை ஏற்று அம்பாறை மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கையினை ஆரம்பித்தார். இந்த சந்தர்ப்பத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான சிங்களவர்களின் ஆதரவையும் பெற்றார். ரிஸ்வி அம்பாறை மாவட்டத்தில் ஆமோகமாக வென்று விடுவார் எனப் பயந்த சிங்கள அரசியல்வாதிகள் ரிஸ்வியின் வரவை எதிர்த்தனர்.

முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு போகும் சிங்கள அரசியல்வாதிகள், ரிஸ்வியூடாக முஸ்லிம் ஒருவர் வென்று விடுவார் என இனவாதத்தை விதைக்க ஆரம்பித்தனர். இதனை மாற்றியமைக்க வேண்டும் எனக்கருதிய ரிஸ்வி, முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்தி அம்பாறை மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைப் பெறவேண்டும் எனச் சிந்தித்தார். உடனடியாக மர்ஹூம் அஷ்ரப்போடு பேச்சுவார்த்தை நடத்தி முஸ்லிம் காங்கிரஸோடு இணைந்து கொண்டார். தனது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் சகிதம் சுமார் 60 வாகனங்களில் கொழும்புக்கு சென்று முஸ்லிம் காங்கிரஸோடு ரிஸ்வி இணைந்து கொண்டார். இந்த விடயம் இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ரிஸ்வி தன்னுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ. உதுமாலெப்பையையும் தனது தந்தையான லத்திப் சின்னலெப்பையையும் கூடவே அழைத்துச் சென்றிருந்தார்.

கொழும்பு டிரான்பரன்ஸி ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் மர்ஹூம் அஷ்ரப் பேசும்போது, இனி எனக்குக் கவலைகள் இல்லை அம்பாறை மாவட்டத்தில் நாம் இழந்துபோன மூன்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் நிச்சயம் பெற்றெடுப்போம். ரிஸ்வியின் வரவு அதனை உறுதிப்படுத்தியுள்ளது என்றார். அந்தளவிற்கு ரிஸ்வியின் ஆளுமையில் அஷ்ரப்புக்கு நம்பிக்கை இருந்தது. 2000ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் வேட்பாளராக நியமிக்கப்பட்டார்.

அதுமட்டுமல்ல, அஷ்ரப் மரணிப்பதற்கு முதல் அம்பாறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ரிஸ்வி நிச்சயம் நாடாளுமன்றம் செல்வார். அத்தோடு தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கல்முனைத் தொகுதியையும் ரிஸ்வியிடமே ஒப்படைக்கின்றேன் என அஷ்ரப் கூறியதற்கமைய தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ரிஸ்வியை நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கினார். சாய்ந்தமருதுக்கென தனிப் பிரதேச செயலகத்தை ஆக்குவதில் அஷ்ரப்போடு முழு மூச்சாக நின்று செயற்பட்டவர் மர்ஹூம் ரிஸ்வி சின்னலெப்பையாகும். அது மாத்திரமல்ல, அஷ்ரப்பின் கனவான அம்பாறை கரையோர கச்சேரியைப் பெறுவதற்காக பல முயற்சிகளை ரிஸ்வி மேற்கொண்டிருந்தார். அது வெற்றிபெறப் போகின்ற சந்தர்ப்பத்தில் இனவாதிகளின் கடும்போக்குவாத முட்டுக்கட்டைகளும் அதனை இல்லாமலாக்கியது.

பல்கலைக்கழகங்களில் படித்துவிட்டு தொழில் இல்லாமல் கஷ்டப்பட்ட பலருக்கும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்தினார்.

அட்டாளைச்சேனை பொது நூலகத்தை எவருமே கண்டுகொள்ளாத சந்தர்ப்பத்தில் பல இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கி மாணவர்களுக்கான புத்தகங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தன்னிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு உதவி செய்கின்ற தாராள மனம் படைத்தவர் இவர். இவ்வாறு பல்வேறுபட்ட பணிகளை ஆற்றிய ரிஸ்வி சின்னலெவ்வை, எந்த சந்தர்ப்பத்திலும் ஊடகவியலாளர்களுடன் நட்புடனேயே பழகுவார். ஊடகவியலாளர்களின் பணிகளை மதிக்கின்ற ஒருவராகவும் அவர்களுக்கு உதவி செய்கின்ற ஒருவராகவும் காணப்பட்டார்.

இன்று இருக்கின்ற அரசியல் வாதிகள் தங் களது கா ரியம் முடி யும் மட்டும் ஊடக வியலாளர்களோடு நட்பாக இருந்துவிட்டு அதிகாரம் கிடைத்ததும் அவர்களை மிதித்து விட்டுச் செல்லுகின்றனர். ஊடக வெளிப்படைத்தன்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றனர். ஆனால், ரிஸ்வி தனக்கு எதிரான கருத்துகளை ஊடகவியலாளர்கள் எழுதினாலும் அதனை விமர்சனக் கண்கொண்டு பார்ப்பார்.

தான் மரணிக்கும் தருவாயில், வைத்தியசாலையில் வைத்து ஹக்கீமுடன் உரையாடும் போது, முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்துங்கள் என்றுதான் கூறியிருக்கின்றார். அந்தளவிற்கு இந்தக் கட்சியின் மீது அதீத பற்று ரிஸ்விக்கு இருந்தது. சமாதானத்தை எப்போதும் விரும்பிய இவர் வடகிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல முன்னர் இருந்தநிலை தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டவர். ரிஸ்வி இருந்திருந்தால் இன்றைய சூழ்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்த அரசியலுக்கு தனது பங்களிப்பினை பெரிதும் வழங்கியிருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# உலக குடியிருப்பு தினத்தில் இந்திய வீடமைப்பு வவுனியாவில் திறந்துவைப்பு

World Habitat Day

அஷ்ரப். ஏ. சமத்

உலக குடியிருப்பு தினம் 1986ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஒக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையில் சர்வதேச ரீதியாக கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், இலங்கையிலும் இத் தினத்தில் வவுனியாவில் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் மெனிக்பாம் பிரதேசத்தில் 'அருனோதய நகரம்' பிரதமரும், வீடமைப்பு நிர்மாணம் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ இந்திய நாட்டின் வெளியுறவுச் செயலாளர் ஆகியோரினால் கொழும்பில் உள்ள அலரி மாளிகையில் வைத்து ஸூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இக் கிராமம் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இவ் வீடமைப்புத் திட்டத்திற்காக இந்திய அரசின் வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 இலட்சம் ரூபா மாணியமும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஒரு இலட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளது. இக்கிராமத்திற்கு சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. செட்டிக்குளம் பிரதேச செயலாளரினால் 24 குடும்பங்களுக்கு அரச காணி துண்டுகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இக் குடும்பங்கள் கடந்த கால யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த குடும்பங்களாகும். இவ் வீடமைப்புத் திட்டத்தில் 24 வீடுகள் உள்ளடக்கப்படுகின்றன. அத்துடன் உள்ளக பாதைகள், குடிநீர், மின்சாரம் போன்ற உள்ளக கட்டமைப்பு வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 34.88 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. அதில் இந்திய உதவித் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் வீடமைப்புத் திட்டத்தினை நேரடியாக வவுனியாவிற்கு வீடமைப்பு நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுரத்தவும், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதுவராலயத்தின் துணைத் தூதுவரும் கலந்துகொண்டு வீடுகளுக்கான திறப்புகளை உரிய குடும்பங்களிடம் கையளிப்பார்கள்.

உலக குடியிருப்பு தினம் 1986 ஆம் ஆரம்பிக்கப்பட்டு, இந்த வருடத்துடன் 35 வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு அமையம் இவ் ஆண்டின் "காபன்வாயு அற்ற ஓர் உலகின் நகர செயற்பாடுகள்" (Accelerating Urban Action for a Carbon free world) தொனிப்பொருளில் 70க்கும் மேற்பட்ட நாடுகளில் நகரமயமாக்குதல், கட்டிடங்கள், நிர்மாணப்பொருட்களுக்காக இயற்கைச் சூழலை மாசுபடுத்தல், நகரில் நிரம்பிய வாகனங்கள், ஆகாய போக்குவரத்துகள், மின்சக்தி வளங்கள், எரிவாயு உற்பத்திகள் போன்ற தொழிற்சாலை கழிவுகள் மற்றும் காலநிலை மாற்றங்களை கட்டுப்படுத்தி நகரங்களில் பச்சைத் தாவரங்களை நாட்டி கிரீன் பீல்ட் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் இயற்கை வளங்களை அழிக்காது அதனை அவ்வாறே பாதுகாப்பதுடன் ஒரு திட்டமிட்ட மனித குடியிருப்புக்கு ஏற்ற வகையில் நகரங்களை திட்டமிடல் போன்ற விடயங்களை உலக குடியிருப்பு அமையம் சகல நாடுகளுக்கும் முன்னிலைப்படுத்தியுள்ளன.





இயற்கை அன்னை அளித்த பெரும் செல்வமும் புவியின் மேற்பரப்பில் காணக்கூடியதாக உள்ள குன்றுகள், மலைகள், மலைத் தொடர்கள், மேட்டு நிலங்கள், சமவெளிகள், ஆறுகள், ஏரிகள், விருட்சங்கள் என்பவைகளையே நாம் சூழல் என கருதுகின்றோம். மனிதனின் தேவைகளையும் சேவைகளையும் நிறைவேற்றும் நோக்குடன் தற்காலத்தில் சூழல் எனும் எண்ணக்கரு கட்டிடங்கள், நகரங்கள், குடியிருப்புகள், பூங்காக்கள், பெருந்தெருக்கள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் என்பவற்றையே சூழலாக நம் கண் முன் கொண்டு வருகின்றன.

இலங்கையின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி திட்டமொன்றினை அமுல்படுத்திய இலங்கையின் அப்போதைய பிரதமராக பதவி வகித்த, காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாச, 1985 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவு ஜமெய்க்காவின் கிங்ஸ்டன் நகரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு ஆணைக்குழு கூட்ட அமர்வின் போது முன்வைக்கப்பட்ட ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட உலக குடியிருப்பு தினம் இற்றைக்கு 35 வருடங்களுக்கு முன்னர் அதாவது, 1986 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி திங்கட்கிழமை முதற்தடவையாக உலகம் பூராகவும் நினைவு கூரப்பட்டது. அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமையை உலக குடியிருப்பு தினம் சகல நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

தற்போதைய காலத்தில் சனத்தொகைக்கேற்ப வீடுகள் இல்லை. கொழும்பு, கண்டி போன்ற நகரங்கள், மலையகம் மற்றும் வட கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் வீடுகளை இழந்த மக்கள், இயற்கை அழிவுகள், சுனாமி மற்றும் பெரு வெள்ளம், மண்ணரிப்பு போன்ற வற்றினாலும் வீடுகளை இழந்த மக்களது வீட்டுப் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு காணமுடியாமல் உள்ளனர்.

இலங்கையில் கூட வீடுகள் அற்ற குடும்பங்களுக்காக மேலும் 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளை நிர்மாணிக்க வேண்டியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வாடகை வீடுகளிலும், சட்டவிரோத கொட்டில்களிலும் முடுக்கு வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அடுத்த ஐந்து வருடத்திற்குப் பிறகு இத் தொகை இரட்டிப்பாகலாம்.

ஆகவே, இப் பிரச்சினைக்கு அரசாங்கம் நிலையானதொரு தீர்வுத் திட்டத்தினை வகுத்து வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல் வேண்டும். இப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் கொழும்பு கண்டி நகர பிரதேசங்களில் அரச தனியார் காணிகள் இல்லாமையாகும். இவற்றுக்குத் தீர்வு, தொடர்மாடி வீடுகளை நிர்மாணிப்பதே சிறந்த வழியாகும்.

தற்போதைய அரசாங்கத்தினால் கொழும்பு மாவட்டத்தின் நகர வீடமைப்புத் திட்டத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபையும் கிராமிய வீடமைப்புத் திட்டத்தினை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் மற்றும் மலையக வீடமைப்புத் திட்டங்களை மலையக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சும் முன்னெடுத்து வருகின்றது.

கொழும்பு நகரில் நகர அபிவிருத்தி அதிகார சபையும் மற்றும் தனியார் தொடர்மாடி வீடுகளை நிர்மாணிக்கும் கம்பனிகள் தொடர்மாடி வீடுகளை கொழும்பில் நிர்மாணித்து வருகின்றது. நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்கனவே சிலேவ் ஐலன்ட், கொம்பனி வீதி, மட்டக்குழி, கொலன்னாவை, ஹோமாகம, கொட்டாவ, தெமட்டகொடை, மாளிகாவத்தை, பொரளை, களனி, பொரலஸ்கமுவ, முல்லேரியா, கண்டி, கம்பஹா போன்ற பிரதேசங்களில் தொடர்மாடி வீடுகளை நிர்மாணித்து வருகின்றது.

இவ் வீடுகள் நிர்மாணப் பணிகள் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டு இவ் வீடுகள் 10 மில்லியன் ரூபா தொட்டு 20 மில்லியன் ரூபா வரை விற்கப்படுகிறது. இதற்காக வீடமைப்புக் கடன்களையும் அரச வங்கிகளில் பெறுவதற்கும் ஒழுங்குசெய்து கொடுத்துள்ளது. அத்துடன் மலையகம், வட கிழக்குப் பிரதேசத்தில் இந்திய வீடமைப்புத் திட்டங்களது மாதிரிக் கிராமங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனை மலையக அபிவிருத்தி அமைச்சும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் 24 மாவட்டக் காரியாலயங்கள் ஊடாக பல்வேறு வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

# இந்திய செய்திகள்

# மீண்டும் படைகளை குவிக்கும் சீனா: பதிலடி கொடுக்க தயாராகும் இந்தியா




லடாக் எல்லையில் சீன இராணுவம் மீண்டும் படைகளை குவிக்கத் தொடங்கியிருப்பதால், அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்தியா இந்த எல்லைப் பகுதிகளில் தானியங்கி முறையில் செயற்படக் கூடிய அதிநவீன கே-9 வஜ்ரா ரக பீரங்கிப் படைகளை நிறுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் கிழக்கு லடாக் எல்லையில் சீன இராணுவம் கடந்தாண்டு படைகளை குவித்தது. இந்தியாவின் பகுதிகளை ஆக்கிரமிக்க முயற்சித்தது. இதை இந்திய வீரர்கள் தடுத்தபோது, இருதரப்பு இராணுவத்துக்கும் நடந்த மோதலில் இந்திய வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர்.

இந்திய வீரர்களின் தாக்குதலில் 40 சீன இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியான போதிலும், 5 வீரர்கள் மட்டுமே இறந்ததாக சீன இராணுவம் தெரிவித்தது. இந்த மோதலை தொடர்ந்து, 2 நாடுகளும் எல்லையில் படைகளை குவித்தன. இதனால், போர் பதற்றம் உருவானது. பின்னர், இருநாட்டு இராணுவமும் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக பாங்காங் திசோ ஏரி பகுதியில் நிறுத்தப்பட்ட படைகளை சீனா திரும்பப் பெற்றது. அதேபோல், அப்பகுதியில் இருந்த இந்திய படைகளும் திரும்ப பெறப்பட்டன. மற்ற இடங்களில் நிறுத்தப்பட்ட படைகளை திரும்பப் பெறுவது தொடர்பாக ஏற்கனவே 12 கட்ட பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

விரைவில் 13ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடக்கும் என எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், லடாக்கின் கிழக்கு, வடக்கு எல்லைப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக சீனா மீண்டும் இராணுவத்தை குவிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் குறித்து, இந்த எல்லையில் இராணுவ தளபதி மனோஜ் முகுந்த் நரவனே நேற்று திடீர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் அளித்த பேட்டியில், ''லடாக்கில் கிழக்கு, வடக்கு எல்லைகளில் சீன இராணுவம் படைகளை குவிப்பது கவலை அளிக்கிறது. சீனப்படைகளின் நடமாட்டத்தையும், ஆப்கானிஸ்தான் நிலையையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். பதிலடி நடவடிக்கைக்கு இந்திய இராணுவ வீரர்கள் தயார் நிலையில் இருக்கிறார்கள்" என்றார்.

இந்நிலையில், தானியங்கி முறையில் இயங்கக் கூடிய அதிநவீன கே-9 வஜ்ரா பீரங்கி படைகளை, லடாக் எல்லையில் இந்திய இராணுவம் நிறுத்தியது. இவை 50 கி.மீ. தூரத்தில் உள்ள இலக்கையும் துல்லியமாக தாக்கும் திறன் படைத்தது. இதனால், இந்திய - சீன எல்லையில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தற்சார்பு இந்திய திட்டத்தின் கீழ், இந்த பீரங்கிகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.

**இந்தியா - இலங்கை 12 நாட்கள் போர்ப் பயிற்சி**


இலங்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு, ஏப்ரலில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, தீவிரவாத தடுப்பு நடவடிக்கைக்காக இந்திய இராணுவத்துடன் இணைந்து இலங்கை இராணுவம் செயற்பட்டு வருகிறது. இருநாட்டு இராணுவமும், 'மித்ர சக்தி' என்ற பெயரில் கூட்டுப் போர் பயிற்சியை செய்து வருகின்றன. இதன் 8ஆம் கட்டப் போர் பயிற்சி, அம்பாறையிலுள்ள இராணுவ பயிற்சி முகாமில், இன்று முதல் 15ஆம் திகதி வரையில் 12 நாட்கள் நடைபெறவுள்ளன.



**மாஸ்க் அணிந்த துர்கா....**

**கொல்கத்தாவில் அடுத்த வாரம் துர்கா பூஜை கொண்டாட்டம் தொடங்கவுள்ளநிலையில், கொரோனா விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாஸ்க் அணிந்த துர்கா தேவி சிலையொன்று உருவாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.**

## காத்துவாக்குல ரெண்டு காதலால் விவாகரத்து: சமந்தாவின் நிபந்தனையால் பிரிந்த நாகசைதன்யா



நடிகை சமந்தா - நாகசைதன்யா ஆகிய இருவரும் சுமுகமாக பிரிவதாக அறிவித்துள்ள நிலையில், தொடர்ச்சியாக தான் நடித்துவரும் படங்களை கைவிட மறுத்த சமந்தா, காதல் கணவனை கைவிட்டு விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை பல்லாவரத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து திருமண வரவேற்பு பெண்ணாக வாழ்க்கையை தொடங்கியவர் நடிகை சமந்தா. திரையுலகில் நுழைந்து தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழி படங்களிலும் முன்னனி நடிகையானார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு நாக சைதன்யாவை திருமணம் செய்து கொண்டதால், தெலுங்கு திரையுலகின் பாரம்பரியமான நடிகர் நாகார்ஜூனா அக்கினேனி குடும்பத்து மருமகளானார்.

திருமணத்துக்கு பின்னரும் சமந்தாவின் மார்க்கெட் ஏறுமுகத்தில் இருந்ததால் தொடர்ந்து படங்களில் முன்னணி ஹீரோக்களுக்கு நாயகியாக நடித்து வந்தார். இது தொடர்பாக கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டதாக தகவல் வெளியான நிலையில், இருவரும் சுமுகமாக பிரிவதாக அறிவித்துள்ளனர். இந்த பிரிவு துரதிர்ஷ்டவசமானது என்றும் சமந்தாவுக்கு தொடர்ந்து தங்கள் குடும்பத்தின் ஆதரவு உண்டு என்றும் நாகர்ஜூனா ட்விட் செய்துள்ளார்.

சமந்தாவை நாகசைதன்யா திருமணம் செய்து கொண்டபோதே அவர் தொடர்ந்து படங்களில் நடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், கைவசம் உள்ள 7 படங்களை மட்டுமே நடித்து முடித்து விடுவதாக சமந்தா கூறியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் வாக்குறுதி அளித்தபடி நடக்காமல், தொடர்ந்து புதிய படங்களை ஒப்புக் கொண்டு சமந்தா நடித்து வந்ததால், நாகசைத்தன்யா அதிருப்தி அடைந்ததாகக் கூறப்படுகிறது.

திருமணமாகி 4 ஆண்டுகள் கடந்தும் அக்கினேனி குடும்பத்துக்கு வாரிசு ஒன்றை பெற்றுக் கொடுக்கும் பக்குவத்துக்கு சமந்தா வராததால் குடும்பத்திலும் புகைச்சல் கிளம்பியதாக தகவல்கள் உலா வந்தன. இந்நிலையில் திரைப்படத்தில் நடிப்பதை நிறுத்திக் கொள்ள சமந்தா சில நிபந்தனைகளை விதித்ததோடு நாகசைதன்யா குடும்பத்துக்கு சொந்தமான, பல நூறுகோடி ரூபா மதிப்புள்ள ராமோஜிராவ் பிலிம் சிட்டி மற்றும் அன்னபூர்னா ஸ்டூடியோ ஆகியவற்றில் தன்னையும் ஒரு பங்குதாரராக சேர்க்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்ததாகவும் இதனால் அவர்களுக்கிடையே விரிசல் அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இதற்கிடையே விக்னேஷ் சிவன் இயக்கத்தில் விஜய் சேதுபதியுடன் "காத்துவாக்குல ரெண்டு காதல்" படத்தில் நடிக்க நாகசைதன்யா தடை போட்டதாகவும், அதையும் மீறி சமந்தா நயன்தாராவுடன் சேர்ந்து 2ஆவது நாயகியாக நடித்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. மேலும் அமலாவின் கேரக்டரை இமிடேட் செய்யும் வளையோசை பாடலில் விஜய்சேதுபதியுடன் ஜோடியாக பஸ்ஸில் செல்லும் வீடியோ காட்சி வெளியானதால் குடும்பத்தில் பெரும் பிரச்சினை உருவானதாக கூறப்படுகின்றது.

திரையுலகில் இப்படிப்பட்ட பேச்சுகள் அடிபட்டாலும், தன் திறமை மற்றும் உழைப்பின் மீதும் பெரும் நம்பிக்கையுள்ளதால் ஒரு ரூபாகூட ஜீவனாம்சம் வேண்டாம் என்றும் விவாகரத்துக்கு பின்னரும் தெலுங்கு சினிமாவில் நடித்துக் கொண்டுதான் இருப்பேன் என்றும் கெத்தாக கூறிய சமந்தா, கணவர் நாகசைதன்யாவை பிரிந்துள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர் சமந்தாவின் நண்பர்கள்.

சாதாரண குடும்பத்துப் பெண்ணான சமந்தா, அக்கினேனி குடும்பத்தினரின் கட்டுப்பாடுகளை ஏற்காததால் இறுதியில் மணவாழ்க்கையில் முறிவு ஏற்பட்டதாக விபரம் அறிந்தவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பிரிந்தாலும் நட்பாக பழகுவது நடிகர் நடிகைகளுக்கு ஒன்றும் பெரிய விஷயமில்லை, திரைக்கு பதில் நிஜத்தில் நடிக்கவேண்டியது தான்.

**1000 கிலோ எடை - 225 அடி நீளம் 150அடி அகலம்**

## உலகின் மிகப் பெரிய தேசியக் கொடியை பறக்கவிட்ட இந்தியா



**இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் மிகப் பெரிய தேசியக் கொடியை இந்தியா நிறுவியுள்ளது.**

**மகாத்மா காந்தி பிறந்தநாள், இந்தியா சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவு ஆகியவற்றைக் கொண்டாடும் விதமாக, லடாக்கின் லே பகுதியில் உலகிலேயே மிகப்பெரிய தேசியக் கொடி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பறக்கவிடப்பட்டது.**

**225 மீற்றர் நீளமும், 150 மீற்றர் அகலமும் கொண்ட இந்த தேசியக் கொடி 1,000 கிலோ எடை கொண்டதாகும். இந்திய இராணுவத்தின் பொறியாளர்களால் முழுக்க முழுக்க கதர் துணியால் இது நெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## சொகுசுக் கப்பலில் போதைப் பார்ட்டி: ஷாருக்கானின் மகன் ஆர்யன் உட்பட 10 பேர் கைது!

**பல கோடி பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்; மேலும் பல முக்கிய புள்ளிகளுக்கு குறி; சினிமா பாணியில் நடுக்கடலில் சம்பவம்**



மும்பை அருகே சொகுசுக் கப்பலில் போதைப் பொருள் சிக்கிய விவகாரத்தில் பிரபல பொலிவூட் நடிகர் ஷாருக் கானின் மகன் ஆர்யன் கான் உட்பட 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்..

மேலும், குறித்த சம்பவத்தின்போது பல கோடி பெறுமதியான போதைப்பொருள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மராட்டிய மாநிலத்தின் மும்பை அருகே கடற்பகுதியில் நிறுத்தப்பட்ட சொகுசுக் கப்பலொன்றில் நேற்றுமுன்தினம் திடீரென போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் சோதனை நடத்தினர். கப்பலில் போதை விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதில் கலந்து கொண்ட 10இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து போதைப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் போதைப் பார்ட்டி தொடர்பாக ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானிடம் (Aryan Khan) போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர்.

இதன்போது ஆர்யன் உட்பட 10பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட அனைவரும் மும்மைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் போதைப் பார்ட்டி நடத்தியது தொடர்பாக எப்.டி.வி. இந்தியாவின் (FTV India) நிர்வாக இயக்குனநரான, காசிஃப் கானிடம் விரைவில் விசாரணை நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**ஆர்யன் சிக்கியது எப்படி**

இந்த சம்பவத்தில் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் சிக்கியது எப்படி என்பது குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

மும்பையில் இருந்து கோவா, குஜராத் அருகேயுள்ள டாமன், டையூ உள்ளிட்ட இடங்களுக்கு கப்பலில் சுற்றுலா நடத்தப்படுகிறது. இதற்காக சில தனியார் நிறுவனங்கள் சொகுசு கப்பல்களை வாடகைக்கு பெற்று கடல் சுற்றுலாக்களை நடத்துகின்றனர். ஆனால், சுற்றுலா என்ற பெயரில் இந்த கப்பல்களில் போதை விருந்து, வரம்புமீறிய உல்லாச கேளிக்கைகளும் நடைபெறுகின்றன. அதுமட்டுமின்றி, அதே கப்பலில் போதைப்பொருள் வர்த்தகமும் நடைபெறுகின்றன. இதற்காக ஒன்லைன் மூலமாக சுற்றுலா பயண டிக்கெட்டுகள் விற்பனை




செய்யப்படுகின்றன.

இந்த சொகுசு கப்பலில் சுமார் ஆயிரம் பயணிகள் பயணம் செய்ய முடியும். இந்த உல்லாச கப்பல் பயணங்களில் கோடீஸ்வரர்கள் குடும்பங்களை சேர்ந்தவர்கள், திரையுலக பிரபலங்கள், மொடலிங் உலகை சேர்ந்தவர்கள், பெரிய வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் பங்கேற்பது வாடிக்கை. வழக்கமாக வார இறுதி நாட்களில் இந்த பயணங்கள் நடைபெறுகின்றன.

இதுபோன்று மும்பையிலிருந்து கோவாவுக்கு 3 நாட்கள் சுற்றுலாவாக கார்டிலியா என்ற சொகுசு கப்பலில் பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

காந்தி ஜெயந்தி விடுமுறை தினமான சனிக்கிழமையன்று மும்பையிலிருந்து புறப்பட்டு அரபிக் கடலில் 2 இரவுகள் கழித்துவிட்டு கோவா வழியாக மீண்டும் 4ஆம் திகதி காலை மும்பை திரும்பும் வகையில் அந்த சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

800இற்கும் மேற்பட்டவர்கள் அந்த கப்பலில் சுற்றுலா செல்ல முன்பதிவு செய்திருந்தனர். திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் மதியம் அந்த சொகுசு கப்பல் மும்பை துறைமுகத்திலிருந்து சுற்றுலா பயணத்தை தொடங்கியது. இதனை முன்கூட்டியே அறிந்து கொண்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவை சேர்ந்த 20 அதிகாரிகள் சுற்றுலா பயணிகள் போல மாறுவேடத்தில் அந்த கப்பலில் சென்றனர். அவர்கள் கப்பலில் உள்ள பயணிகளை கண்காணித்தபடி இருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கப்பலில் இடம்பெற்ற நடன நிகழ்வுகளில் பயணிகள் பங்கேற்று உற்சாகமாக நடனமாடினர். அப்போது அவர்களுக்கு போதைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

உடனடியாக களத்தில் குதித்த போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவர்களை சுற்றி வளைத்தனர். போதைப் பொருட்களை விநியோகம் செய்த 8 இளைஞர்களை கைது செய்தனர்.

போதைப் பொருட்களை பயன்படுத்திய இளைஞர்கள், இளம் பெண்களையும் தனிமைப்படுத்தி அவர்களையும் விசாரணை செய்தனர். அப்போது அவர்களில் பிரபல ஹிந்தி நடிகர் ஷாருக்கானின் மகன் ஆரியன் இருப்பதும் தெரிய வந்துள்ளது. மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் பல முக்கிய புள்ளிகள் சிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



## கோல்டன் விசா பெற்ற முதல் இந்திய நடிகை

**கோல்டன் விசா பெற்ற முதல் இந்திய நடிகை என்ற பெருமையை லெஜண்ட் சரவணா பட கதாநாயகி ஊர்வசி ராவ்துலா பெற்றுள்ளார்.**

**ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்க விரும்பும் வர்த்தகர்கள், விளையாட்டு வீரர்கள், திரை பிரபலங்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு வசிக்கும் வகையில் கோல்டன் விசாவை அந்த அரசு அறிமுகம் செய்திருந்தது. இந்த விசா புதுப்பித்துக்கொள்ளும் வசதி கொண்டது.**

**இந்த கோல்டன் விசாவை நடிகர்கள் ஷாருக்கான், சஞ்சய் தத், மோகன்லால், மம்முட்டி, டோவினா தாமஸ், பிருத்விராஜ், துல்கர் சல்மான், தயாரிப்பாளர் போனி கபூர், டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஆகியோருக்கு வழங்கியுள்ளது.**

**இந்நிலையில், தற்போது கோல்டன் விசாவானது நடிகை ஊர்வசி ராவ்துலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விசாவை பெற்ற முதல் இந்திய நடிகை என்ற பெருமையை ஊர்வசி ராவ்துலா பெற்றுள்ளார். ஊர்வசி ராவ்துலா தற்போது லெஜண்ட் சரவணனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். ஜேடி ஜெர்ரி இயக்கும் இந்தப் படத்துக்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.**




# குறி தவறாமல் தாக்கும் சீனாவின் புதிய ஆளில்லா உளவு விமானம்

சீனா தனது பிரமாண்டமான புதிய ஆளில்லா உளவு விமானத்தை பார்வைக்கு வைத்துள்ளது.

அந்நாட்டில் நடக்கும் விமானக் கண்காட்சியில் CH-6 என்று பெயரிடப்பட்டுள்ள ட்ரோன் வைக்கப்பட்டுள்ளது. அதிகபட்ச உயரத்திலும், தூரத்திலுள்ள இலக்கை குறிதவறாமல் தாக்குவதில் நிகரற்றும் CH-6 விளங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மணிக்கு 800 கிலோமீற்றர் வேகத்தில் தொடர்ந்து 20 மணி நேரம் பறக்கமுடியும். இந்த உளவு விமானத்தில் 7,800 கிலோ எடை வரை ஆயுதங்களை எடுத்துச் செல்லமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரபிகடலை அச்சுறுத்தும் போதைப்பொருள் மாபியா

## ஆப்கனிலிருந்து கடத்தி வரப்படுவதாக தகவல்




ஆப்கானிலிருந்து கடத்தி வரப்படும் போதைப்பொருட்கள் மும்பை உட்பட அரபிக்கடல் பகுதியிலுள்ள துறைமுகங்கள் வாயிலாக வந்து செல்லுவதுடன் இந்தியாவின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டுவருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக அளவில் ஹெராயின் அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு ஆப்கானிஸ்தான். உலக அளவில் 80 முதல் 90 வீத உற்பத்தி இங்கிருந்து நடக்கிறது. ஆப்கானிஸ்தான் சமீபத்தில் தலிபான்கள் கட்டுப்பாட்டில் வந்தபின், ஹெரோயின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்தில் ஆப்கானிஸ்தானிலிருந்து கடத்தி வரப்பட்ட 3 தொன் ஹெராயின் போதைப் பொருட்கள் இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து நடத்திய விசாரணையில் இருவர் கைது செய்யப்பட்டனர். இரு கென்டெய்னர்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஒரு கென்டெய்னரில் 2 தொன் ஹெரோயின் போதைப் பொருளும், மற்றொரு கன்டெய்னரில் ஆயிரம் கிலோவும் இருந்துள்ளது. இந்த இரு கென்டெய்னர்களும் ஆப்கானிஸ்தானிலிருந்து ஏற்றப்பட்டுள்ளன.

இந்தப் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக அகமதாபாத், டில்லி, சென்னை, காந்திதாம், மாண்டவி உள்ளிட்ட இடங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இந்த இரு கென்டெய்னர்களிலும் உள்ள ஹெராயின் போதைப்பொருளின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.19,900 கோடி(இந்திய ரூபாபடி) இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தலில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்பு இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இதுதொடர்பாக விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் மும்பை சுற்றுலா கொகுசு கப்பலில் போதைப் பொருள் விநியோகம் நடந்திருக்கிறது.

மும்பையில் கப்பலில் போதை ஒழிப்புப்பிரிவு பொலிஸ் நடத்திய சோதனையில் பல கோடி மதிப்புள்ள போதைப்பொருள் சிக்கியது. இந்த வழக்கில், பொலிவுட் நடிகர் ஷாருக்கான் மகன் ஆர்யன் கானிடமும் விசாரணை நடத்தினர். இந்த விசாரணைகளையடுத்து ஆர்யன் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் போதைப் பொருள் விநியோகத்துடன் மும்பையைச் சேர்ந்த மேலும் பல முக்கிய புள்ளிகளுக்கு தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

# அண்டை நாடுகளை நோக்கி அகதிகளாக படையெடுக்கும் ஆப்கானியர்கள்



ஆப்கானிலிருந்து ஏராளமானோர் அண்டை நாடுகளுக்கு அகதிகளாகச் செல்வதால் காபூல் நகரப் பஸ் நிலையத்தில் கூட்டம் அலைமோதி வருகிறது.

ஆப்கானிஸ்தானைத் தலிபான்கள் கைப்பற்றியதை தொடர்ந்து அந்நாட்டுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதியுதவிகள் நிறுத்தப்பட்டன. மேலும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்ததால் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஏராளமானோர் காபூல் நகரில் இருந்து பஸ்கள் மூலம் மசார் இ ஷெரிப் நகருக்குச் சென்று அங்கிருந்து அண்டை நாடான ஈரானுக்கு நடந்தே செல்கின்றனர்.

# தொடர்ந்தும் தீக்குழம்பை வெளியேற்றி வரும் கும்ப்ரே வைஜா எரிமலை



ஸ்பெயினில் லா பால்மா தீவின் கும்ப்ரே வைஜா எரிமலையிலிருந்து தீப்பிழம்பு தொடர்ந்து வெளியேறி வரும் நிலையில், சுற்றுப் பகுதியிலுள்ள பொதுமக்கள் வெளியே செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் உக்கிரமாக தீப்பிழம்பு, சாம்பல் மற்றும் கரும்புகையை எரிமலை கக்கி வருகிறது. எரிமலைக்கு அருகேயுள்ள எல் பாஸோ, டஸாகோர்டெ உள்ளிட்ட நகரங்களில் வீட்டுக்குள்ளேயே மக்கள் இருக்கும்படி போடப்பட்டிருந்த உத்தரவு தளர்த்தப்பட்டது.

இந்நிலையில், எரிமலை தொடர்ந்து தீபிழம்பை உமிழ்ந்து வருவதால் குழந்தைகளும், பெரியவர்களும் வீட்டிலேயே பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# காந்தியை நினைவுகூர்ந்த புர்ஜ் காலிஃபா



மகாத்மா காந்தியின் 153ஆவது பிறந்தநாளையொட்டி டுபாயின் மிகவும் உயரமான புர்ஜ் காலிஃபா கட்டடத்தில் காந்தியடிகளின் உருவப் படம் மின்னொளியில் கவனம் ஈர்த்துள்ளது.

இதே போல் உலகின் பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் இந்தியர்களால் மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

## உலக செய்திகள்

# கடல் நீரை உறிஞ்சி குடித்த மேகம்





அமெரிக்காவில் மேகம், கடல் நீரை உறிஞ்சிய அரிய காட்சி அரங்கேரியுள்ளது.

புளோரிடாவிலுள்ள லேக் ஒர்த் என்ற கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் மேகக்கூட்டம் திரண்டு வந்தது. அடுத்த சில நொடிகளில் சுழற்காற்று போல மேகம் திரண்டு கடல் நீரை மேல் நோக்கி இழுத்தது. இந்த அற்புத நிகழ்வை கடற்கரையில் இருந்தவர்கள் ஆச்சரியத்துடன் கண்டுகளித்தனர்.

கடலின் மேல் வீசும் காற்று குளிர்ந்த காற்றாகவும், கடலின் காற்று சற்று வெப்பமாகவும் இருந்தால், இதுபோன்ற நிகழ்வு ஏற்படும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றி அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவோம்



“காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவோம்'' என்று ஐ.நா. பொதுச் செயலர் அந்டோனியோ குட்டெரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

காந்தியடிகள் பிறந்த ஒக்டோபர் 2ஆம் திகதியானது சர்வதேச அஹிம்சை தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அதையொட்டி ஐ.நா. பொதுச் செயலர் அந்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

‘அஹிம்சை, அமைதிவழியிலான போராட்டங்கள், கண்ணியம், சமத்துவம் ஆகியவற்றில் காந்தியடிகள் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். அவற்றைக் குறித்து பேசுவதைக் காட்டிலும் நடைமுறையில் அவற்றைக் கடைப்பிடித்தார்.

அந்தக் கொள்கைகள் மனித சமூகத்துக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன; சிறந்த எதிர்காலத்துக்கான பாதையைக் காட்டுகின்றன. தற்காலத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அக்கொள்கைகள் உதவுகின்றன. மோதல்கள், பருவநிலை மாற்றம், ஏழ்மை நிலை, சமத்துவமின்மை, நம்பிக்கையின்மை, பிரிவினை உள்ளிட்ட பிரச்னைகள் கரோனா தொற்று பரவலுடன் இணைந்து சமூகத்தையும் பொருளாதாரத்தையும் பாதித்து வருகின்றன.

இத்தகைய தருணத்தில் காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி அனைவருக்குமான அமைதியான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். நாடுகள் தங்களுக்குள் சண்டையிடுவதைத் தவிர்த்து, மனித குலத்தின் பொது எதிரியான கரோனா தொற்று பரவலுக்கு எதிராக ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றை அனைத்து நாடுகளும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளவேண்டும். உலகில் காணப்படும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதற்கு உள்ள ஒரே தீர்வு ஒற்றுமையே. நமக்கிடையே பிரிவினை ஏற்படுத்தும் விவகாரங்களைவிட ஒற்றுமையை ஏற்படுத்தும் விவகாரங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதையே காந்தியடிகளும் செய்தார்.

சிறந்த எதிர்காலத்தை அமைப்பதற்கு அமைதியே முக்கியப் பங்கு வகிக்கும். ஏழ்மையை ஒழிக்கவும் சமத்துவமின்மையைக் குறைக்கவும் நாம் ஒருங்கிணைய வேண்டும். புவியைக் காக்க சர்வதேச திட்டத்தை வகுக்க வேண்டும். பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அமைதி, நம்பிக்கை, சகிப்புத்தன்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து புதிய சகாப்தத்தை ஏற்படுத்த வேண்டும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஓமனைத் தாக்கியது ‘ஷஹீன்’ சூறாவளி



ஓமனைத் தாக்கிய ஷஹீன் சூறாவளியால் பவ்ஷர் மாகாணத்தில் கடும் மழை பெய்துவருகிறது. இதனால் வீதிகளில் இடுப்பளவு தண்ணீர் தேங்கியுள்ளதால் அம்மாகாணமே வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.

தலைநகர் மஸ்கட்டுக்கு 60 கிலோமீற்றர் அப்பால் மையம் கொண்டுள்ள சூறாவளியால் மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது.

இதனால் ஏராளமான விமான சேவைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# ஒரேநேரத்தில் மடிந்து விழுந்த ஆயிரக்கணக்கான பறவைகள் இயற்கை ஆர்வலர்கள் அதிர்ச்சி

கிரீமியாவில் திடீரென ஆயிரக்கணக்கான பறவைகள் இறந்து விழுந்ததால் இயற்கை ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அந்நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள சிவாஷ் ஏரிப் பகுதியில் இந்த நிகழ்வு நடந்துள்ளது. இதுகுறித்து ஆய்வு நடத்தி வரும் கிரிமியன் ஃபெடரல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, 7 ஆயிரம் கருப்புக் கழுத்து வாத்துக்கள், 300இற்கும்மேற்பட்ட பட்டைத் தலை வாத்துக்கள், 200 முதல் 300 எண்ணிக்கையிலான சாதாரண கடற்புறாக்கள், நூற்றுக்கும் அதிகமான காஸ்பியன் கடற்புறாக்கள் இறந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக பறவைகள் இறப்பிற்கு விஷ உணவு அல்லது நோய்த் தொற்று காரணமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## கட்டாரில் 'ஃபார்முலா 1' போட்டி நடத்த ஏற்பாடு




'ஃபார்முலா 1' எனும் கார் பந்தயப்போட்டி நவம்பர் மாதம் கட்டாரில் நடத்தபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அல் கோரில் 2022 பீபா உலகக்கிண்ணப் போட்டி ஆரம்பிக்க சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு நவம்பர் 21ஆம் திகதி 'ஃபார்முலா 1' 10 ஆண்டு ஒப்பந்தத்தில் கட்டார் கையெழுத்திட்டது.

கட்டார் 'கிராண்ட் பிரிக்ஸ் எ.ஃப் 1' அட்டவணையில் 22 பந்தயங்கள் நடைபெறும். 2004ஆம் ஆண்டு முதல் மோட்டோஜிபி நிகழ்வுகளுக்கு கட்டார் அங்கீகாரம் பெற்றது.

"எ.ஃப் 1 உடனான ஒரு நீண்ட கால ஒப்பந்தத்தை உறுதி செய்யும் அதே வேளையில், நம் நாட்டில் ஒரு குறுகிய கால இடைவெளியில் ஒரு பந்தயத்தை நடத்தி, ஃபார்முலா 1 ஐ ஆதரிக்க முடிந்ததில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று கட்டார் மோட்டார் மற்றும் மோட்டார் சைக்கிள் கூட்டமைப்பின் தலைவர் அப்துல் ரஹ்மான் அல் தெரிவித்தார்.


## உலக தடகள சம்பியன்ஷிப்பை நடத்த ஜப்பான் ஆர்வம்





உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் ஆர்வம் கொண்ட ஜப்பான், 2025ஆம் ஆண்டு உலக தடகள சம்பியன்ஷிப்பை நடத்துவதற்கு முயற்சி செய்கிறது. டோக்கியோவில் உலக தடகள சம்பியன்ஷிப்பை நடத்துவதற்கான கோப்புகளை ஜப்பான் தடகள கூட்டமைப்பின் சங்கம் சமர்ப்பித்துள்ளது.

ஒலிம்பிக், பராலிம்பிக்ஸ் நிறைவடைந்த பின்னர் ஜப்பான் தேசிய அரங்கத்தை ஒரு பிரத்தியேக உதைபந்தாட்ட மைதானமாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. ஆனால் இப்போது அந்த முயற்சியை ஜப்பான் தடகள கூட்டமைப்பின் சங்கம் கைவிட்டுள்ளது. உலக தடகள சம்பியன்ஷிப்பை நடத்துவதற்கு 10 பில்லியன் யென் (90 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1991ஆம் ஆண்டு டோக்கியோவிலும் 2007ஆம் ஆண்டு ஒசாகாவிலும் உலக தடகள சம்பியன்ஷிப் நடைபெற்றது. அடுத்த ஆண்டு ஓரிகானின் யுஜினில் நடைபெறும் உலக தடகள சம்பியன்ஷிப் 2023ஆம் ஆண்டு புடாபெஸ்டில் நடைபெற உள்ளது.




## இன்றைய போட்டி




டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானம், டுபாய்
மாலை 7.30 மணி

## ருதுராஜின் சதத்துக்கு வில்லனா ஜடேஜா?

(ரமணி)

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் ருதுராஜ் 93 ஓட்டங்கள் அடித்து சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். அப்போது களம் புகுந்த ஜடேஜா, கிடைக்கும் பந்துகளை பவுண்டரிக்கும், சிக்ஸருக்கும் பறக்கவிட்டார்.

ஜடேஜா ஒரு ஓட்டம் எடுக்காது தொடர்ந்து இரண்டு ஓட்டங்கள் எடுத்தார். ருதுராஜின் சதத்தை எதிர்பார்த்த ரசிகர்கள் ஜடேஜாவை மனதில் திட்டியபடி போட்டியைப் பார்த்தார்கள். ஓட்ட எண்ணிக்கை உயர வேண்டும் அதே நேரம் ருதுராஜும் சதம் அடிக்க வேண்டும் ரசிகர்கள் பதற்றப் பட்டார்கள்.

கடைசி மூன்று ஓவர்கள் இருந்த போது ருதுராஜ் 93 ஓட்டங்கள் எடுத்து பந்து வீச்சாளரின் பக்கம் இருந்தார். ஜடேஜா துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தார். ருதுராஜ் சதம் அடிக்க ஜடேஜா உதவி செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த ஓவர் முழுக்க ஜடேஜா விளையாடினார்.

19வது ஓவரில் இதேபோல் ஜடேஜா தான் 5வது பந்து வரை விளையாடினார். 6வது பந்தில் தான் ருத்துராஜ் 2 ஓட்டங்கள் அடித்தார். 20வது ஓவரில் ஜடேஜா சிக்ஸ், பவுண்டரி என்று விளாசிக்கொண்டு இருந்தார். தனிப்பட்ட வீரரின் ஓட்ட எண்ணிக்கை தேவையில்லை, அணியின் ஓட்ட எண்ணிக்கை தேவை என்று ஜடேஜா விளாசிக்கொண்டு இருந்தார்.

இதனால் ருதுராஜ் சதம் அடிக்க முடியாமல் போய் விடுமோ என்ற அச்சம் நிலவியது. 20வது ஓவரின் 5வது பந்தை ருதுராஜ் எதிர்கொண்டார். ஓட்டம் எடுக்கவில்லை. இறுதிப்பந்தில் சிக்ஸ் அடித்து சதம் அடித்தார். அப்போது ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ருதுராஜ் 90 ஓட்டங்களை கடந்து ஆடிக்கொண்டு இருந்த போது சதம் அடிக்கும் சந்தர்ப்பத்தை ஜடேஜா வழங்கவில்லை என இணையத்தில் கடும் விவாதம் எழுந்துள்ளது. இந்நிலையில் 90 ஓட்டங்களை கடந்த பின் ருதுராஜ்தான், ஜடேஜாவை இரண்டு ஓட்டம் ஓட அழைத்தார் என்று கூறப்படுகிறது. சதம் எடுப்பது முக்கியம் கிடையாது என்பதால்தான் அவர் இப்படி ஓடினார்.

ஜடேஜா வேண்டும் என்றே எதையும் செய்ய வில்லை என்று கூறப்படுகிறது. கடைசி இரண்டு ஓவரை உன்னிப்பாக கவனித்தவர்கள், ருதுராஜ் தான் பல இடங்களில் இரண்டு ஓட்டங்கள் ஓட அழைத்தார் என்பதை எளிதாக கூறிவிட முடியும்.





# கிரிக்கெட்டில் Leg before wicket (LBW) விதிமுறை

சஜீத் ரஹீம்

(நேற்றைய தொடர்ச்சி...)

**Hawk-Eye:**




LBW இன் முக்கிய கூறுகளான Pitching, Impact மற்றும் Hitting wickets போன்றவற்றை ஆராய்ந்து தீர்ப்பு வழங்க பந்தின் பாதையை அறிதல் அவசியமாகின்றது. அவ்வாறு பந்தின் பாதையை அறிய பயன்படும் தொழில்நுட்பமாக Hawk-Eye காணப்படுகிறது. இதன் உதவி கொண்டு பந்துவீச்சாளர் பந்தை விடுவிக்கும் உயரம், இடம், பந்தின் வேகம், பந்து பிச் இல் படும் இடம், துடுப்பாட்ட வீரரில் படுமிடம், விக்கெட்களில் படுமிடம் மற்றும் ஏனைய தேவையான அனைத்து விடயங்களும் பதியப்படும்.

இவ்வாறான தரவுகளை பெற மைதானத்தை சுற்றிவர ஆறு உயர் தொழில்நுட்பம் கொண்ட கெமராக்கள் பொருத்தப்படும். இவை குறிப்பிட்ட போட்டியில் வீசப்படும் அனைத்து பந்துகளுக்கும் வெவ்வேறாக பதிந்து வைக்கப்படும். அத்தரவுகளின் உதவி கொண்டு ஒவ்வொரு பந்தின் பாதையும் கணிக்கப்படும். இக்கணிப்புகளின் முடிவுகளை கொண்டு பிச் இல் பந்து எவ்வாறு செயற்படுகிறது என்பதும் கணிக்கப்படும். இந்த அனைத்து தரவுகளையும் கொண்டே LBW பந்தின் பாதை கணிக்கப்படுகிறது. இவை அனைத்தும் சிறந்த வகையில் வடிவமைக்கப்பட்ட கணனி மற்றும் மென்பொருள்கள் கொண்டே செயற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு நடுவர்களால் விடப்படும் தவறுகளை திருத்தியமைக்க அறிமுகபடுத்தப்பட்ட அதி நவீன தொழில்நுட்பம் தான் சர்ச்சை கிளப்பும் Umpires call இற்கு காரணம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

**துல்லியம்:**

அதி நவீன தொழில்நுட்பமான Hawk-eye மிகத்துல்லியமான போதிலும் அதில் சிறு பிழை இருப்பது அதை தயாரித்த நிறுவனமே ஒப்புக்கொண்டுள்ளது. இதனை அந்நிறுவனம் ஐ.சி.சி இடம் சமர்ப்பித்து அதற்கு ஐ.சி.சி இடம் இருந்து அனுமதியும் பெற்றுக்கொண்டது. இச்சிறு பிழையானது 3.24 mm – 5 mm வரை காணப்படலாம்.



**Umpires Call**




கிரிக்கெட் பந்தொன்றின் விட்டம் 7.2 cm ஆகும். LBW ஆட்டமிழப்பு நிகழ பந்தின் 50% ஐ விடவும் அதிகமான பகுதி படுதல் வேண்டும். ஆகவே பந்தின் 3.6 cm ஐ விடவும் அதிகமான பகுதி மேலே கூறப்பட்டுள்ள a,c,e ஆகிய கூற்றுக்களில் உள்ள பகுதிகளில் படுதல் வேண்டும்.

பந்தின் மையப்பகுதியானது (50%) a,c,e ஆகிய பகுதிகளில் ஓப் மற்றும் லெக் ஸ்டம்ப் இன் விளிம்புகளிலும், பேல்ஸ் இன் கீழ்ப்பகுதியிலும் மற்றும் in-line பிரதேசத்தின் வெளிப்புற விளிம்புகளிலும் சரிசமமாக படும் போது அல்லது பந்தின் 50% ஐ விடவும் அதிகமான பகுதி a,c,e ஆகிய பிரதேசங்களில் வெளிப்புறமாகவும் காணப்படும்போது அது ஆட்டமிழப்பிற்கு தகுதி பெறாது. இதுவே Umpires call விதியாகும்.

**இதன் விளக்கம் :**

பந்தின் நடுப்பகுதியானது (அதாவது 50% இல் இருக்கும் பந்தின் மத்தியகோடு) அதாவது 3.6 cm வரையேயான பகுதி ஓப் ஸ்டம்ப் இன் வெளிப்புற விளிம்பில் படுகிறது என hawk eye இன் ball tracking காட்டுகிறது எனக்கொள்க.

HawkEye இல் காணப்படும் error இன் காரணமாக பந்தின் 4.1 cm (3.6cm + 0.5cm error) வரையேயான பகுதி ஓப் ஸ்டம்ப் இல் படலாம். அல்லது 3.1 cm (அதாவது 3.6cm - 0.5cm error) வரையேயான பகுதி ஓப் ஸ்டம்ப் இல் படலாம். இவ்வாறு இரு சந்தர்ப்பங்களிற்கும் வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு சிறு mm அளவிலான விடயத்தை வெற்றுக் கண்களால் பார்த்து நடுவர்களால் தீர்மானிக்க முடியாது.

**ஆட்டமிழப்பா? இல்லையா?**

மைதானத்தில் உள்ள நடுவரால் LBW ஆட்டமிழப்பு வழங்கப்பட்டு அது பின்னர் மீள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு, அதன் போது Pitching, Impact மற்றும் Wickets hitting ஆகிய ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்றும் Umpires call ஆக காணப்பட்டால் இறுதித் தீர்ப்பானது மைதானத்தில் உள்ள நடுவர் வழங்கிய தீர்ப்பாகவே இருக்கும். அதாவது ஆட்டமிழப்பாக காணப்படும்.

அதேபோன்று நடுவர் ஆட்டமிழப்பு இல்லை என்று கூறிய பின்னர் ரிவ்வியூவில் பந்து விக்கெட்டை தகர்த்தாலும் umpires call மூன்றில் ஏதாவது ஒன்று வந்தால் கூட அது ஆட்டமிழப்பில்லை என்றே இறுதித் தீர்ப்பு வழங்கப்படும். மேலும் ரிவ்வியூ இன் போது Pitching ஆனது Umpires call ஆகவிருந்தால் ரிவ்வியூ அடுத்த கட்டத்திற்கு முன்னேறாது. அதே போன்று Pitching சரியாக அமைந்து Impact ஆனது Umpires call ஆக அமைந்தால் அடுத்த கட்டத்திற்கு முன்னேறாது.

இவ்வாறு இத்தொழில்நுட்பத்தில் இருக்கும் சிறு பிழையின் காரணமாக Umpires call வருமிடத்து தீர்ப்பானது நடுவர் வழங்கிய on field call இன் பிரகாரமே அமையும். இவற்றுடன் Umpires call ஆனது நிறைவடைந்து விட்டதா என்றால் இல்லை என்றே கூறலாம்.

**3 Meter Rule**




சர்வதேச போட்டிகளில் ஒன்றிற்கு அதிகமான முறை இவ்விதியின் மூலம் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 2018 இல் இடம்பெற்ற பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் போட்டியின் போது அஸ்ஹர் அலி மற்றும் ஹரீஸ் சுஹைல் ஆகிய இருவரும் ஆட்டமிழக்கவில்லை என இவ்விதி கொண்டே நடுவர்கள் தீர்ப்பு வழங்கியிருந்தனர்.

**LBW முறை ஆட்டமிழப்பில் இவ்விதியின் பங்கு என்ன?**

உலக கிரிக்கெட்டில் LBW போன்ற சிக்கலான ஆட்டமிழப்புகளிற்கு துல்லியமாக தீர்ப்பு வழங்க கூடியதாக காணப்படுகின்ற ஒரே ஒரு தொழிநுட்பம் இந்த Hawkeye தொழில்நுட்பம் தான். எனினும் இத்தொழில்நுட்பத்தில் சிறு Error இற்கான வாய்ப்புள்ளது. அதனால் தான் Umpires call அறிமுகமானது என மேல கூறியிருந்தோம். அவ்வாறான ஒரு சில சந்தர்ப்பங்களுள் இந்த 3m Rule இற்கான காரணமும் ஒன்றாக காணப்படுகிறது.

பந்தானது பிட்ச் இலிருந்து மேலெழுந்து துடுப்பாட்ட வீரரை நோக்கிச்சென்று துடுப்பாட வீரரின் உடல் பகுதிகளுடன் தொடர்பை மேற்கொள்ளும். அத்தொடர்பை மேற்கொள்ளும் இடத்திலிருந்து விக்கெட்டிற்கு செல்லும் பாதையை Hawk-eye தொழில்நுட்பம் கணிக்கும். அவ்வாறு கணிக்கும் போது அது குறிப்பிட்ட தூர இடைவெளி வரை தான் மிகத்துல்லியமானதாக காணப்படும்.

அக்குறிப்பிட்ட தூர இடைவெளியை விட அதிகரித்துவிட்டால் அதன் துல்லியத்தன்மை இல்லாமல் போய்விடும். இந்த "தூர இடைவெளி" ஆனது மூன்று மீட்டர் ஆகும். எனினும் இந்த தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுகளின் போது அது 2.5 மீட்டர் தான் கூறியிருந்த போதும் ஐ.சி.சி மூன்று மீட்டர் வரை அதிகரித்திருக்கிறது.

விதி: LBW ஆட்டமிழப்பிற்கான ரிவ்வியூவின் போது பந்தானது துடுப்பாட்ட வீரரில் தொடும் இடத்திற்கும் (அதாவது Impact) துடுப்பாட்ட முனை விக்கெட்டிற்குமான தூரமானது மூன்று மீட்டரை விட குறைவாக இருத்தல் வேண்டும். இலகுவாக புரிந்துகொள்ள வேண்டுமாயின் கீழ் வருமாறு புரிந்து கொள்ளலாம்.

அதாவது ஒரு துடுப்பாட்ட வீரர் பந்தை தடுத்தாட தனது க்ரிஸ் கோட்டிலிருந்து முன்னோக்கி சென்று பந்தை ஆடுகிறார் எனக்கொள்க. இதன்போது அவர் துடுப்பாட்ட முனை விக்கெட்டிலிருந்து ஏறத்தாழ மூன்று மீற்றரை விடவும் அதிகமான தூரம் சென்று ஆடும்போதே LBW ஆட்டமிழப்பிற்கான ரிவ்வியூ கேட்கப்படுகிறது என்றால் Impact இற்கும் Wickets இற்குமான தூரம் அளவிடப்படும். இத்தூரமானது மூன்று மீற்றரை விட அதிகமாகவும், அதேநேரம் பந்தானது LBW ஆட்டமிழப்பிற்கான ஏனைய அனைத்து தேவைகளையும் புர்த்தி செய்திருந்தால்'

- மைதானத்தில் இருக்கும் நடுவர் ஆட்டமிழப்பு என வழங்கினால் Umpires call பிரகாரம் அது ஆட்டமிழப்பாகவே காணப்படும்.
- மைதானத்தில் இருக்கும் நடுவர் ஆட்டமிழப்பில்லை என தீர்ப்பு வழங்கியிருந்தால் பந்தானது விக்கெட்டை தகர்த்தாலும் அது ஆட்டமிழப்பில்லை என்றே தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வாறு LBW இற்கான ரிவ்வியூ இன் போது இரு வேறு காரணங்களால் Umpires call என்னும் ஒரு விடயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பல விமர்சனங்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. எனினும் DRS இற்கான தேவையும் கிரிக்கெட்டில் இருந்துகொண்டேதான் இருக்கிறது. இதனால் இவ் Hawkeye - DRS ஆனது தற்கால கிரிக்கெட் உலகில் இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகிறது.

(முற்றும்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7